30°c /28°c

# உதயன்

26 பக்கங்கள்


■ பதிப்பு: யாழ் ■ விலை: ரூபா 25

■ சுடர் 28 ■ கதிர் 131

■ வள்ளுவர் ஆண்டு 2044 ■ பங்குனி 24, சனி 06.04.2013

UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com

# நிரந்தரத் தீர்வுக்கு சரியான சந்தர்ப்பம்



## ரணிலிடம் அழுத்தினார் இந்திய ஜனாதிபதி

### தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துமாறும் வலியுறுத்து

புதுடில்லி,ஏப்ரல் 6

இலங்கைத் தமிழர்களுக்கு நிலையான அரசியல் தீர்வு ஒன்றை வழங்குவதற்குச் சரியான தனித்துவமான சந்தர்ப்பம் இதுவாகும் என இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

'' இலங்கையில் போர் முடிவுற்றமை அங்கு அனைத்து மக்களும் ஏற்கக் கூடிய நிலையான

பார்க்க பக்கம் 04

## யாழ். மீனவர்கள் இரு தினங்களில் விடுதலையாவர்

யாழ்ப்பாணம், ஏப்.6

கடற்கொந்தளிப்புக் காரணமாக தமிழகக் கடற்பகுதியில் கரையொதுங்கிய யாழ்.மீனவர்கள் இருவரும் இன்னும் இரு தினங்களில் விடுவிக்கப்படவுள்ளனர். இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் இருவர் கடந்த 3 ஆம் திகதி கடலில் மீன்பிடிக்கச்

பார்க்க பக்கம் 04

இனி கடும் பிடி! அச்சுறுத்துகிறது தி.மு.க. 6

இலங்கையும் பாகிஸ்தானும் பலமான உறவு 9

128 குற்றச் சந்தேகநபர்கள் கடந்த வாரம் கைது 17

## மன்னாரில் கைக்குண்டு மீட்பு

மன்னார், ஏப்.6

மன்னார் அல்-அஸ்ஹர் ம.வி. பாடசாலையின் பொது விளையாட்டு மைதானத்துக்கு அருகில் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுச் செயலிழக்கச் செய்யப்பட்டது.

பார்க்க பக்கம் 04

## காணியின்றிப் பலர் அந்தரிக்க அரச நிலத்தில் உல்லாச விடுதி

### கோப்பாயில் அமைக்க அனுமதி

யாழ்ப்பாணம்,ஏப்.6

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரக்கணக்கான மக்கள் காணியில்லாமல் அந்தரிக்கும் நிலையில், தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவருக்கு அரச காணி ஒன்றில் 'ஹோட்டல்' அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில், அக்கரை கிராமத்தில் சிவன் கோயில் அடைப்புப் பகுதியிலேயே இவ்வாறு ஹோட்டலை நிர்மாணிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் காணி 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மக்கள் குடியிருப்புக்குரிய காணியாகவே இருந்தது. தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் இந்தக் காணியில் மக்களுக்கு வீட்டுத்

பார்க்க பக்கம் 04

## ஈழத்தமிழருக்கு ஆதரவு தெரிவித்து ஆஸியர்கள் இருவர் போராட்டம்




பேர்த்,ஏப். 06

ஈழத் தமிழர்களுக்காக தமிழக மாணவர்கள் நடத்திவரும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து மூன்று அம்சக்கோரிக்கையை முன்வைத்து ஆஸ்திரேலியாவின் பேர்த் மாநகரில் ஆஸியர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோரி தஞ்சமடைந்து தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏராளமான ஈழத் தமிழர்களுக்குப் பல்வேறு உதவிகளை வழங்கி

பார்க்க பக்கம் 04

## இந்திய எம்.பிக்கள் குழு வட பகுதிக்கு வருகிறது

யாழ்ப்பாணம்,ஏப்.6

தமிழகத்தில், ஈழத் தமிழருக்கு ஆதரவான உணர்வெழுச்சி வலுத்துவரும் நிலையில், இந்தியாவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள்குழுவொன்றுவடபகுதிக்கு இரு நாள் பயணத்தை மேற்கொள்ளவுள்ளது.

'' எதிர்வரும் 9 ஆம், 10 ஆம் திகதிகள் 4 கட்சிகளைச் சேர்ந்த 6 நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர் '' என்று இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்தார்.

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக ஒட்டுமொத்த தமிழ

பார்க்க பக்கம் 04

## கிளிநொச்சியில் கோர விபத்து சம்பவ இடத்தில் தம்பதியர் சாவு

### பஸ் – ஓட்டோ மோதியதில் விபரீதம்

கிளிநொச்சி,ஏப்.6

கிளிநொச்சி ஏ.9 வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற பஸ் - ஓட்டோ மோதிக் கொண்ட கோர விபத்தில் கணவனும் மனைவியும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இவர்களை ஏற்றி வந்த ஓட்டோ சாரதி படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு விசுவமடுவில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றும் வவுனியா, நெடுங்கேணியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ஓட்டோ ஒன்றும் நேருக்கு நேர் மோதியமையாலேயே இந்தக் கோரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி ஏ-9 வீதியில் 155 ஆம் கட்டைப் பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்துக் கொண்டிருந்த கணவனும் மனைவியும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.ஓட்டோச் சாரதி படுகாயமடைந்தார்.

வவுனியா நெடுங்கேணியைச் சேர்ந்த விஸ்வலிங்கம் தெய்வேந்திரகுமார் (வயது - 66), அவரது மனைவியான தெய்வேந்திரகுமார் சிறிரதி (வயது -58) ஆகியோரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களாவர். குறித்த இருவரும் மருத்துவ தேவைக்காக யாழ்ப்பாணம் வந்த சமயமே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவர்களின் சடலம்

பார்க்க பக்கம் 04

## தீர்வு விடயத்தில் மாற்று வழி தேவை

### இருதரப்பு முரண்பாடு தொடர்பில் அமைச்சர் டியூ கருத்து

கொழும்பு, ஏப்.6

தீர்வு விடயத்தில் பிரதான இரு பாத்திரங்களை வகிக்கும் அரசும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒற்றுமையுடன் செயற்படாவிட்டால் பிரச்சினைகளுடன் வாழவேண்டிய நிலையே தொடரும் - என சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வருவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மறுக்கின்றது. அதேபோன்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மட்டும்

பார்க்க பக்கம் 04

### ஊடகங்கள் மீதான தாக்குதல்:

## சந்தேகநபர்களின் விவரங்களை தந்தால் மட்டுமே நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ்ப்பாண ஊடகங்கள் மீதான தாக்குதல் சம்பவங்களின் சந்தேகநபர்கள் தொடர்பான விவரங்களை முறைப்பாடு செய்தால் மட்டுமே அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்று யாழ்மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜிப்ரி தெரிவித்தார்.

யாழ்ப்பாண ஊடகங்கள் மீது அண்மைக்கலமாக தாக்குதல்கள் இடம்பெறுவது குறித்து வாராந்த ஊடக

பார்க்க பக்கம் 04

## கைதான இந்திய மீனவர்கள் 11ஆம் திகதி விடுதலை

**அமைச்சர் தொண்டமான் கூறுகிறார்**

இலங்கைக் கடற்பரப்பினுள் நுழைந்த குற்றச்சாட்டின் பேரில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 53 இந்திய மீனவர்களில் 34 பேர் கடந்த மார்ச் மாதம் 15ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டனர்.

கொழும்பு,ஏப் 06

இலங்கைக் கடற்பரப்பினுள் நுழைந்தபோது கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் 19 இந்திய மீனவர்களையும் விடுதலை செய்யவுள்ளதாக அரசு வாக்குறுதியளித்துள்ளது எனக் கால்நடைகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இந்த 19 இந்திய மீனவர்களும் எதிர்வரும் 11ஆம் திகதி விடுதலை செய்யப்படவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கைக் கடற்பரப்பினுள் நுழைந்த குற்றச்சாட்டின் பேரில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 53 இந்திய மீனவர்களில் 34 பேர் கடந்த மார்ச் மாதம் 15ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த மீனவர்கள் கைது செய்யப்பட்டமை தொடர்பில் இலங்கைத் தூதுவரை அழைத்து இந்தியா தனது எதிர்ப்பைத் தெரிவித்ததை அடுத்து இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

'இவர்களின் வழக்கு மன்னார் நீதிமன்றத்தில் ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. அன்றைய தினம் இவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என எதிர்பார்க்கின்றோம்' என அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கூறினார். (த)

# இலங்கை விடயத்தில் ஆபத்தான நிலைப்பாடு

## தமிழகத் தீர்மானத்தால் இந்தியாவுக்காம்

புதுடில்லி, ஏப்.6

சில இந்திய அரசியல் கட்சிகளினதும் அக்கறையுள்ள குழுக்களினதும் கடும் எதிர்ப்புக்களுக்கிடையிலும் இலங்கை தொடர்பில் தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை எதிர்ப்பது என்ற ஆபத்தான நிலைப்பாட்டை இந்திய அரசு எடுக்க நேர்ந்தது என்று இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் கூறியிருக்கிறார்.

இந்தோ ஏஸியன் செய்திச் சேவைக்கு வழங்கியுள்ள பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்திய அரசு இலங்கை விடயத்தில் இன்னும் தீவிரமாகச் செயல்படவேண்டும் என்று சில குழுக்கள் விருப்பம் தெரிவித்திருந்தன என்றும் சல்மான் குர்ஷித் கூறினார்.

தமிழ்நாட்டு அரசு சட்ட சபையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியதுடன் அதையே நாங்களும் ஐ.நாவில் செய்ய வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினார்கள். இந்திய அரசு சரியானதைச் செய்வதற்கு எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் செல்வது என்ற அபாயகரமான முடிவை எடுத்தது என்றார்.

> இந்திய அரசு சரியானதைச் செய்வதற்கு எவ்வளவு தூரம் முடியுமோ அவ்வளவு தூரம் செல்வது என்ற அபாயகரமான முடிவை எடுத்தது



இலங்கை தொடர்பாக இந்தியா எடுத்த நிலைப்பாடு குறித்து இலங்கையில் சிலர் பாராட்டியுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

ஐ.நா. மனிதஉரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது. அதேசமயம் இலங்கையைக் கண்டித்து தமிழ்நாட்டு சட்ட சபையில் நிறைவேறிய தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவும் மறுத்துவிட்டது.

அதே இலங்கைக்கு நட்புநாடு என்று வழங்கியுள்ள அந்தஸ்தை நிராகரிக்குமாறு விடப்பட்ட கோரிக்கைக்கும் இணங்க மறுத்துள்ளது. (ப)

## திறந்தவெளி நாடகத் திருவிழா யாழில் இன்று

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ்.மாவட்டத்தில் முதல் முறையாக திறந்த வெளி நாடகத் திருவிழா நல்லூர் முத்திரைச் சந்தியில் உள்ள சங்கிலியன் பூங்காவில் இன்று மாலை 6 மணியளவில் நடைபெறவுள்ளது.




யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் நடைபெறவுள்ள இந்த நாடகத் திருவிழாவில் தெல்லிப்பழை, சங்கானை, மானிப்பாய், நல்லூர், கொக்குவில் போன்ற பகுதிகளைச் சேர்ந்த இளைஞர் குழுக்கள் ஆற்றுகைகளை அளிக்கை செய்யவுள்ளன.

இதன்போது ஒரே நேரத்தில் நூறு நடிகர்கள் அரங்கில் தோன்றுவர் என்றும், பார்வையாளர்களுக்கான அனுமதி இலவசம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ங)

## யாழ்.நகரில் மாணவரிடையே மோதல்

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ்.நகரப் பகுதியை அண்மித்துள்ள பாடசாலை ஒன்றில் மாணவர்கள் குழுக்களாக பிரிந்து சண்டையிட்டதால் அந்தப் பாடசாலை வளாகப் பகுதியெங்கும் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையில் உயர்தர மாணவர்களும், சாதாரண தரம் பயிலும் மாணவர்களும் முரண்பட்டு நேற்று முன்தினம் மோதிக் கொண்டனர். இதன் தொடர்ச்சியாக குறித்த இரு பிரிவு மாணவர்களும் முதலாம் தவணை விடுமுறை நாளான நேற்றும் கடுமையாக ஒருவரையொருவர் தாக்கினர். பாடசாலை வளாகத்துக்குள் இரு தரப்பினரும் கடும் மோதலில் இறங்கியதால் அப்பகுதியில் பெரும் அமளிதுமளி நிலை ஏற்பட்டது.

இந்த மாணவர்களுக்கிடையிலான மோதல் குறித்து முதல் நாளே பாடசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்கத் தவறியதாலேயே நேற்றும் இரண்டாம் நாளாகவும் மாணவர்கள் மோதிக் கொண்டதாக பெற்றோர் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ங)

## கடத்தித் தாக்கினர்; நிஷாந்தன் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ்.மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சு.நிஷாந்தன் தான் கடந்த மூன்றாம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரினால் கொழும்பில் வைத்துக் கடத்தப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

''கடத்தல்காரர்கள் என்னைக் கடுமையாகத் தாக்கிய பின்னர் அரசியலில் இருந்து ஒதுங்கிவிட வேண்டும் என எச்சரித்து விடுதலை செய்தனர்'' என நிஷாந்தன் தெரிவித்தார்.

கடந்த 3ஆம் திகதி கொழும்பு வெள்ளவத்தை சந்தைப் பகுதியில் வைத்து தான் கடத்திச் செல்லப்பட்டதாகவும், கடத்தல்காரர்களான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் மற்றும் அவரது தந்தையார் ஆகியோர் தனது தலையில் துப்பாக்கியை வைத்து மிரட்டியதாகவும் நிஷாந்தன் கூறினார்.

இதன் பின்னர் அவர்கள் தன்னிடம் வெற்றுத்தாள்கள் சிலவற்றில் கையொப்பம் வாங்கியதாகவும் தாம் சொல்வது போல வீடியோ பதிவில் பேச வேண்டும் என்று மிரட்டி ஒளிப்பதிவு செய்ததாகவும் நிஷாந்தன் கூறினார்.

கடத்தப்பட்ட அன்றிரவே அவர்கள் தன்னைக் கொழும்புக்கு வெளியே இறக்கி விட்டதாகவும் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் அரசியலில் இருந்து ஒதுங்க வேண்டும் என்பதுடன், யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற வேண்டும் என அவர்கள் எச்சரித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனால் சம்பவம் நடந்ததை வெள்ளவத்தைப் பொலிஸில் தன்னால் உடனடியாக முறைப்பாடு செய்ய முடியாமல் போனதாகவும், யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-5)

# விடுதிகளில் விபசாரம் நடப்பதாக முறையிட்டால் மட்டுமே விசாரணை

### யாழ்.பொலிஸார் கூறுகின்றனர்

யாழ்ப்பாணம், ஏப். 06

சட்டவிரோத செயல்கள் இடம்பெறுவது தொடர்பாக எமக்குச் சரியான முறைப்பாடுகள் கிடைக்கப் பெறாமையாலேயே நாம் சம்பவ இடத்துக்குச் செல்லவில்லை என்று யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜிப்ரி தெரிவித்தார்.

யாழ். நகரில் கடந்த 28 ஆம் திகதி விடுதியொன்றில் விபசாரம் இடம்பெறுவதாகக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து அதிகாரிகள் அதனை முற்றுகையிட்டபோது விடுதியின் முகாமையாளர் உட்பட சிலர் தப்பியோடியதுடன், பெண்கள் உட்பட மேலும் சிலர் பிடிக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் கொடுக்கப்பட்டும் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் செல்லவில்லை.

> விடுதிகளில் விபசாரம் இடம்பெறுகிறது என்ற சரியான தகவல்களை எமக்குத் தரவேண்டும்.

இதற்கான காரணம் தொடர்பாக ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கும்போது:-

விடுதிகளில் விபசாரம் இடம்பெறுகிறது என்ற சரியான தகவல்களை எமக்குத் தரவேண்டும். அன்றைய தினம் அதிகாரிகளால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு கொடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. எமக்குத் தெரியாத முறைப்பாடு யாரிடம் கொடுக்கப்பட்டது என்ற தகவலும் எம்மிடம் இல்லை.

பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடுதிகளில் விபசாரம் இடம்பெறுவது தொடர்பாக எமக்குச் சரியான தகவல் தரப்பட வேண்டும். இவ்வாறு கிடைக்கப் பெற்றால் எமது உத்தியோகத்தர்களை புலனாய்வுக்கு அனுப்பி உடனடி நடவடிக்கைகளைச் சட்டரீதியாக மேற்கொள்வோம்.

முற்றுகையிடப்பட்ட விடுதி மாநகர சபையில் பதியப்பட்டுள்ளதாக எமக்குச் சில தகவல்கள் கிடைக்கப் பெற்றன-என்றார். (த-14)

## திறந்த கட்டடத்தை மீளத் திறக்கும் அமைச்சர்

முல்லைத்தீவு, ஏப்.6

முல்லைத்தீவில் கடந்த நவம்பர் மாதம் திறந்துவைக்கப்பட்ட பாடசாலைக் கட்டடத்தை வன்னி அமைச்சர் ஒருவர் இன்று மீண்டும் திறந்து வைக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐரிஸ் நிறுவனமொன்றின் நிதியுதவியில், முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் 3 மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டது. 13கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடம் கடந்த வருடம் நவம்பர் மாதம் திறந்து வைக்கப்பட்டது.

இந்தக் கட்டடத்தில் வகுப்பறைகள் செயல்படுகின்றன. இந்த நிலையில் முல்லைத்தீவுக்கு இன்று பல்வேறு நிகழ்வுகளில் பங்கெடுக்கச் செல்லும் அமைச்சர், மேற்படி பாடசாலையின் குறித்த வகுப்பறைக் கட்டடத்தையும் திறந்து வைக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் அவசர அவசரமாக திறப்பு விழாவுக்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-5)

## படையினரின் உதவி எமக்குத் தேவையில்லை

### சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 06

சட்டத்தையும், நீதியையும் பாதுகாப்பதுதான் பொலிஸாரின் வேலை. இதற்கு இராணுவத்தினரின் உதவி எமக்குத் தேவையில்லை என்று யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜிப்ரி தெரிவித்தார்.

மோதல் சம்பவங்களின் போது பொலிஸாரை விட இராணுவத்தினரே அதிகம் உள்ளனர். இது தொடர்பாக நீங்கள் என்ன கூறுகிறீர்கள் என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது :-

பொதுமக்கள் தமக்குப் பிரச்சினைகள் ஏற்படும்போது இராணுவத்தினரிடமும் பொலிஸாரிடமும் முறைப்பாடுகள் கொடுக்கிறார்கள். எமக்கு இருக்கக்கூடிய ஆளணியைக் கொண்டு குற்றங்களைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை நாம் செய்து வருகிறோம். எங்கள் கடமைகளுக்கு நாம் இராணுவத்தினரை அழைப்பது இல்லை. அவர்களுடைய உதவியும் எமக்குத் தேவையில்லை -என்றார். (த-14)

## தாக்குதல்களைக் கண்டித்து நகர சபையில் தீர்மானம்

தென்மராட்சி, ஏப்.6

கிளிநொச்சியில் உள்ள 'உதயன்' அலுவலகம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகம் ஆகியவை மீது தாக்குதல் நடத்தப்பட்டதைக் கண்டித்து சாவகச்சேரி நகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறான வன்முறைகள் வடக்கு மாகாணத்தில் ஜனநாயகம் நிலவுகின்றதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துவதாக சபை உறுப்பினர் த.சுதர்சன் கண்டனத் தீர்மானத்தை முன்மொழிய சபை உறுப்பினர்களால் அது ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதேவேளை, சபையில் கூட்டமைப்பு உறுப்பினர் ஞா.கிஷோர் தாக்கப்பட்டமை குறித்து தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை சபையில் பிரேரணையை முன்வைத்ததுடன் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியை கண்மூடித்தனமாகத் தாக்கியது குறித்தும் கண்டனம் தெரிவித்தார். (த-9)

## நீர் வழங்கல் சபைக்கு புதிய கட்டடம்

வவுனியா, ஏப்.6

வவுனியா நீர்வழங்கல் அபிவிருத்தி அதிகார சபையில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியை அமைச்சர் தினேஸ் குணவர்த்தன நேற்றுத் திறந்து வைத்தார்.

நேற்றுக் காலை வவுனியாவுக்கு வருகைதந்த அமைச்சர் தினேஸ் குணவர்த்தன 65 மில்லியன் ரூபா செலவில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் அமைக்கப்பட்ட இந்தப் புதிய கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்தார். (த-402)

## நெடுந்தீவில் புதுவருடச் சந்தை

யாழ்ப்பாணம்,ஏப். 6
நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் , 10 ஆம் திகதி புதன்கிழமையும் இரண்டு நாள்களுக்கு புதுவருடச் சந்தை நடைபெறும்.

நெடுந்தீவு பல.நோ.கூ. சங்கம் ஆகியவற்றின் கடற்றொழிலாளர் சங்கம் உள்ளூர் விவசாய, கடல்சார் உற்பத்திப் பொருள்கள், பனம் இங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் என்று கூறப்பட்டது. (ம-7)

## கருத்தமர்வு

யாழ்ப்பாணம்,ஏப். 6
ஹற்றன் நஷனல் வங்கியின் சமூக நலன் திட்டத்தின் கீழ் இலங்கை வைத்திய நிபுணர்கள் கழகமும் தேசிய பாரிசவாத சங்கமும் இணைந்து நடத்தும் பொது மக்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தமர்வு இன்று சனிக்கிழமை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (ம-23)

# பெரும்போக வெங்காயச் செய்கையில் 24,534 மெற்றிக் தொன் உற்பத்தி

யாழ்ப்பாணம், ஏப்.6
யாழ்.மாவட்டத்தில் 2012, 2013 போக வெங்காயச் செய்கையில் 24 ஆயிரத்து 534 மெற்றிக்தொன் உற்பத்தி கிடைக்கப்பெற்றது என்று யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் விரிவாக்க உத்தியோகத்தர் எஸ்.சௌந்தரராஜன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2012/ 2013 பெரும் போகத்துக்கான வெங்காயச் செய்கைக்கான இலக்கு ஆயிரத்து 900 மெற்றிக் தொன் ஆகும். இதற்குத் தேவைப்பட்ட விதை வெங்காயத்தின் அளவு 5 ஆயிரத்து 700 மெற்றிக் தொன் ஆகும். இவற்றைக் கொண்டு ஆயிரத்து 799 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் வெங்காயச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் இருந்து 24 ஆயிரத்து 534 மெற்றிக் தொன் உற்பத்தி கிடைத்தது.

2012 ஆம் ஆண்டில் சிறுபோகத்தில் 2 ஆயிரத்து 148 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் செய்கை மேற்கொள்ளப்பட்ட போது 34 ஆயிரத்து 368 மெற்றிக் தொன் வெங்காயம் உற்பத்தி செய்யப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் தனி நபர் ஒருவரின் வெங்காயத் தேவை நாள் ஒன்றுக்கு 20 கிராம் ஆகும். அதனடிப்படையில் யாழ்.மாவட்ட மக்களுக்கு நுகர்வுக்காக மாதாந்தம் 369 மெற்றிக் தொன் வெங்காயம் தேவைப்படுகிறது.


கடந்த ஆண்டில் யாழ். மாவட்ட மக்களின் நுகர்வுக்குத் தேவைப்பட்ட மொத்த நுகர்வு 4 ஆயிரத்து 428 மெற்றிக் தொன். அதேவேளை விதை வெங்காயத்துக்கு 6 ஆயிரத்து 444 மெற்றிக் தொன் பயன்படுத்தப்பட்டது.

2012/ 2013 பெரும் போகத்திலும் சிறுபோகத்திலும் கிடைக்கப்பெற்ற வெங்காய உற்பத்தியில் 42 ஆயிரத்து 330 மெற்றிக் தொன் சந்தைப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் 60 வீதமான வெங்காயம் தென்பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் பங்குனி மாதம் வரையில் ஒரு கிலோ வெங்காயம் 30 ரூபா தொடக்கம் 60 ரூபா வரை சந்தையில் விற்பனை செய்யப்பட்டது. பின்னர் ஏப்ரல் மாதம் தொடக்கம் மே மாதம் வரையில் 50 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. ஒகஸ்ட் மாதத்தில் 130 ரூபாவாக அதிகரித்து ஜூன் மாதம் தொடக்கம் ஒக்ரோபர் மாதம் வரையில் 60 ரூபா தொடக்கம் 40 ரூபா வரை வீழ்ச்சியடைந்து காணப்பட்டது.

பின்னர் நவம்பர், டிசெம்பர் மாதங்களில் 90 ரூபா தொடக்கம் 130 ரூபா வரை விலை தளம்பல் காணப்பட்டது என்று கூறப்பட்டது. (ம-13)

## மணிக்கூண்டு கோபுரத்தில் கம்பிக் கடிகாரங்கள்



யாழ்ப்பாணம், ஏப். 6
யாழ். மணிக்கூண்டு கோபுரத்தில் முன்பு இருந்ததை போல் கம்பிக் கடிகாரங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இதன் மூலம் மக்கள் தெளிவாக கடிகாரத்தில் நேரத்தை பார்க்க கூடியதாக உள்ளது.

கடந்த ஐந்து வருடங்களாகப் பொருத்தப்பட்டிருந்த டிஜிற்றல் கடிகாரத்தின் மூலம் நேரத்தைத் தெளிவாக பார்க்க முடியாத நிலை நிலவியது. அத்துடன் அந்தக் கடிகாரங்களும் அடிக்கடி பழுதடைந்து வந்தன.

இதனை அடுத்தே முன்னர் இருந்ததை போன்று கம்பிக் கடிகாரங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இதன்மூலம் யாழ். மணிக்கூண்டு கோபுரம் மீண்டும் புதுப்பொலிவுடன் நிமிர்ந்து நிற்கின்றது. (ம-17)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 6
ஜனசக்தி மழலைகள் கல்விப் பூங்காவின் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு மயிலணி முருகமூர்த்தி ஆலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

த. பிரதீபன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலய அதிபர் செல்வி ந. பிரதா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் குடும்ப முன்பள்ளித் தலைவி திருமதி மன்றோ மக்லின், கோட்டைக்காடு அ.த.க. பாடசாலை ஆசிரியர் திருமதி .வாசுகி சச்சிதானந்தம் ஆகியோர் கலந்து கொள்வர். (ம)

## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஏப்.6
வில்லிசைக் கலைமாமணி சிவஸ்ரீ சாம்பசிவ சோமாஸ்கந்தக் குருஜியின் ஆகம சித்திரங்கள் பாகம் 7 இன் அறிமுக விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லை ஆதீன மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம)

# 11 லட்சத்து 49 ஆயிரம் ரூபா பெறுமதியான பணம், பொருள்கள் கடந்த வாரம் திருட்டு

### யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தகவல்

யாழ்ப்பாணம்,ஏப். 6
***யாழ். மாவட்டத்தில் கடந்தவாரம் மட்டும் 11 இலட்சத்து 49 ஆயிரம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் பொருள்கள் திருட்டுப்போயுள்ளன. சந்தேகத்தின் பேரில் இருவர் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம்.ஜிப்ரி தெரிவித்தார்.***

வாராந்த ஊடகவியலாளர்களுக்கான சந்திப்பு நேற்று யாழ்.பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது. இதில் யாழ். மாவட்டத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற குற்றச் செயல்கள் தொடர்பாக விளக்கமளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

யாழ். பஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள கடை ஒன்றை உடைத்து 20 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளது என்று கொட்டடியைச் சேர்ந்த ஒருவர் கடந்த மார்ச் மாதம் 3 ஆம் திகதி யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். இந்தத் திருட்டுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

யாழ். நாவலர் வீதியில் உள்ள கடையொன்றை உடைத்து 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று யாழ். முதலாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ஒருவர் கடந்த மாதம் 3 ஆம் திகதி முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பான அறிக்கை யாழ்.நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் ஆனைக்கோட்டை பகுதியில் கடையொன்றில் 73 ஆயிரம் பெறுமதியான கணினி திருட்டுப் போயுள்ளது என்று மானிப்பாய் சோமசுந்தரம் வீதியைச் சேர்ந்தவர் கடந்த மாதம் 29 ஆம் திகதி மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சுன்னாகம் பகுதிக் கடையொன்றை உடைத்து 2 இலட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று சுன்னாகம் பொலிஸில் கடந்த மாதம் 3 ஆம் திகதி முறைப்பாடு தெரிவிக்கப்பட்டதை அடுத்து சுன்னாகம் பொலிஸார் சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

சுன்னாகம் சூராவத்தைப் பகுதியில் வீடொன்றில் வாடகைக்கு தங்கியிருந்த நபர்கள் வீட்டு உரிமையாளரின் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான உடைமைகளைத் திருடிச் சென்றுள்ளதாக வீட்டு உரிமையாளர் கடந்த முதலாம் திகதி சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். இது தொடர்பாக அறிக்கை மல்லாகம் நீதி மன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி மீசாலைப் பகுதியில் வீடொன்றை உடைத்து 24 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளதாக கடந்த மாதம் 27 ஆம் திகதி சாவகச்சேரி பொலிஸ் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டைப் பகுதியில் தனியார் வங்கி ஒன்றை உடைத்து 72 ஆயிரம் ரூபா பெறுமதியான கணினி திருடப்பட்டமை தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.- என்றார். (ம-14)

# பனை வெல்ல உற்பத்தியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.6
யாழ். குடாநாட்டில் பனம் வெல்லத்தை கூடுதலாக உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் பனம் வெல்லத்துக்கு பெரிதும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் இதன் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு கூடுதலாக பனம் வெல்லத்தை உற்பத்தி செய்வதற்கு ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக இந்த பனம் வெல்லத்தை உற்பத்தி செய்வதற்கும் இந்தத் திட்டத்தை ஊக்குவிப்பதற்கும் அதற்குரிய இயந்திர உபகரணங்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது கள்ளின் சீசன் ஆரம்பமாகியுள்ளது. அவற்றின் மூலம் பதனீரை கூடுதலாக வடித்து பின்னர் பனம் வெல்ல உற்பத்தியில் ஈடுபடவும் சங்கங்கள் நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

இந்தப் பனம் வெல்ல உற்பத்திக்கான செலவு அதிகரித்தாலும் கூட பனம் வெல்லத்தின் சந்தை வாய்ப்பு அதிகரித்தே காணப்படுகின்றது.

இதன் காரணத்தால் இந்த உற்பத்தியை அதிகரித்து அதைக் கூடுதலாகச் சேமித்து வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சேமித்து வைக்கப்படும் இந்த பனம் வெல்லத்தை நாட்டின் வெளியூர்களிலும் கூடுதலாக சந்தைப்படுத்தவும் சபை தீர்மானித்துள்ளது.- என்று கூறினார். (ம-17)

## புத்தாண்டுச் சந்தையில் உள்ளூர் உற்பத்திக்கு முதலிடம்

யாழ்ப்பாணம், ஏப். 6
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 'திவிநெகும' திட்டத்தின் கீழ் நடத்தப்படும் புத்தாண்டுச் சந்தைகளில் கூடுதலான உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டுச் சந்தைப்படுத்தப்படவுள்ளன.

பிரதேச செயலகங்களிலும் இந்தப் புத்தாண்டை முன்னிட்டுச் சந்தைகள் நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த விற்பனைச் சந்தையில் கூடுதலாகக் குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

**மரக்கறி வகைகள் மற்றும் வாழைக்குலைகள் போன்றவற்றையும் சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

கூட்டுறவு நிறுவனங்கள், சிறு கைத்தொழில் நிலையங்கள், பனம் பொருள் சார்ந்த நிறுவனங்கள் போன்றவையும் இந்தச் சந்தையில் தமது உற்பத்தி பொருள்களைச் சந்தைப்படுத்தவுள்ளன.

இந்தப் புத்தாண்டுச் சந்தையில் குடாநாட்டு விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகள் மற்றும் வாழைக்குலைகள் போன்றவற்றையும் சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தென் பகுதியில் இடம்பெறும் இந்தப் புத்தாண்டு விற்பனை சந்தைக்கென குடாநாட்டில் இருந்து வெங்காயம், வாழைக்குலைகள் என்பனவும் அதிகளவில் கொண்டு செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

# பிள்ளையானுக்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை

## மட்டு.சுதந்திரக் கட்சி அமைப்பாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஏப்.6

முன்னாள் கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனுக்கு (பிள்ளையான்) எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் அருண் தம்பிமுத்து தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் உள்ள தமது குடும்பத்துக்குச் சொந்தமான வீட்டை பலாத்காரமான முறையில் பயன்படுத்தி வருவது தொடர்பாகவே முன்னாள் முதலமைச்சருக்கு எதிராகத் தாம் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தனது பெற்றோர் படுகொலை செய்யப்பட்ட பின்னர் 1989 இல் தாம் நாட்டை விட்டு வெளியேறியபோது விடுதலைப் புலிகள் இந்த வீட்டைப் பொறுப்பேற்றுக் கொண்டனர் எனவும், இந்த வேளையில் சுமார் 6 ஆயிரம் புத்தகங்களும், சில பனை ஓலையிலான சுவடிகளும் தனது தந்தையினால் இந்த வீட்டிலுள்ள அவரது நூலகத்தில் வைக்கப்பட்டிருந்ததாகவும், ஆனால் அவை யாவும் விடுதலைப் புலிகளால் எரியூட்டப்பட்டதாகவும் அருண் தம்பிமுத்து தெரிவித்தார்.

பின்னர் இந்த வீட்டைப் பொறுப்பேற்றுக் கொண்ட இராணுவத்தினர் 2007ஆம் ஆண்டு அதனை சந்திரகாந்தனிடம் ஒப்படைத்தனர். தற்போது பல தடவைகள் கேட்ட போதிலும் சந்திரகாந்தன் இந்த வீட்டை விட்டு வெளியேற மறுப்புத் தெரிவித்து வருகின்றார். இராணுவத்தினர் இதில் எதுவுமே செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

இது எமது குடும்பத்துக்குச் சொந்தமான வீடு என்பது அனைவருக்கும் தெரியும். இதனை நிரூபிப்பதற்கான போதிய ஆதாரங்கள் உள்ளன என்றும் அருண் தம்பிமுத்து மேலும் தெரிவித்தார்.

சந்திரகாந்தனின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் செயலாளர் நாயகமான பி.பிரசாந்தன் கருத்துத் தெரிவிக்கையில்,

அருண் தம்பிமுத்து இந்த விடயம் தொடர்பாகத் தமது கட்சியைச் சேர்ந்த எவரிடமும் பேசவில்லை என்றார்.

சந்திரகாந்தனுடன் அவர் உரையாடுவதன் மூலமாக சுமுகமானதொரு தீர்வு கிடைக்குமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

# புகலிடம் தேடியோர் விவரங்களை திரட்டுவதற்கு இலங்கை முயற்சி

தமது நாடுகளில் புகலிடம் தேடியவர்கள் பற்றிய தகவல்களைத் தருவதற்கு பல நாடுகள் தயக்கம் காட்டிவருவதால் தான், போரின் போது எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்ற சரியான கணக்கெடுப்பை மேற்கொள்ள முடியாதுள்ளதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

நான்காம் கட்ட ஈழப்போர் இடம்பெற்ற 2006 ஜூலை தொடக்கம் 2009 மே வரையிலான காலப்பகுதியில், விடுதலைப் புலிகள் உட்பட எத்தனை பேர் இறந்தனர் என்ற கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கு வெளிநாடுகளின் ஒத்துழைப்பு தேவைப்படுவதாக இலங்கை அரச வட்டாரங்கள் கூறியுள்ளன.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள இலங்கை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய,

முறைப்படியான விசாரணைக்கு, இலங்கையில் இருந்து எத்தனை பேர் புலம்பெயர்ந்தனர் என்ற சரியான கணக்குத் தேவைப்படுகிறது. 2009 இல் போரின் முடிவில் காணாமற்போனவர்களாகவும், மரணமானவர்களாகவும் கருதப்பட்டவர்கள் பலர் இப்போது வெளிநாடுகளில் உள்ளனர். விடுதலைப் புலிகள் உள்ளிட்ட இவ்வாறான பலர் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

ஆனால் அவர்களின் குடும்பத்தினர் இன்னமும் அவர்களைப் பொதுமக்களாகவே வலியுறுத்துகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த)

# தூக்கிட்டு தற்கொலை

தனது மகன் ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடையாததால் மனவிரக்தியடைந்த தந்தை தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

ஹட்டன் - வட்டவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரொசல்ல பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 11 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வேலு சங்கர் (வயது - 52) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஜி.சி.ஈ. சா/த பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட்டன. இந்தப் பரீட்சையில் தனது மகன் சித்தியடையாமை காரணமாக வீட்டில் வாய்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதனால் மனவிரக்தியடைந்த தந்தை தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார் என ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது என வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர். (சி)

# போதையில் வாகனம் செலுத்திய பௌத்த பிக்குவுக்குச் சிறை

கொழும்பு, ஏப். 6

மதுபோதையில் வாகனத்தை ஓட்டிச் சென்ற பௌத்த பிக்கு ஒருவருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

ஹோமகமவைச் சேர்ந்த இந்தப் பௌத்த பிக்கு சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாமல் வாகனமொன்றை ஓட்டிச் சென்றபோது கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி அனுராதபுரம் நகரில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இவர் மது போதையில் இருந்ததும் தெரியவந்தது.

இதனை அடுத்து இந்தப் பிக்கு அனுராதபுரம் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸாரால் நீதிமன்றில் முன்னிலையாக்கப்பட்டார். இந்த வழக்கை விசாரித்த அனுராதபுரம் மேலதிக நீதிவான் சந்திமா எதிரிமான எதிரியான இந்த பிக்குவுக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாத சிறைத் தண்டனையும் 7 ஆயிரத்து 500 ரூபா தண்டமும் விதித்துத் தீர்ப்பளித்தார். (த)

## காணியின்றி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

திட்டம் வழங்கிய போதும் காணி உறுதிகள் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

இவ் வீட்டுத்திட்ட மக்களுக்காக அருகில் விளையாட்டு மைதானத்துக்கும் காணி ஒதுக்கப்பட்டிருந்தது.

தற்போது இந்தக் காணிகளிலேயே 'ஹோட்டல்' அமைப்பதற்கு, நீண்ட காலக் குத்தகை அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இராணுவத்தினருடன் நில அளவைத் திணைக்கள அதிகாரிகளும் இந்தப் பகுதிக்குச் சென்று காணிகளை அளவீடு செய்தனர்.

இதன்போது அந்தப் பகுதி மக்கள் நில அளவைத் திணைக்கள அதிகாரிகளுடன் முரண்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த காணியில் 'ஹோட்டல்' அமைக்கவுள்ள தென்னிலங்கை வர்த்தகர் யாழ்.மாவட்ட இராணுவ உயர் அதிகாரி ஒருவரின் நெருங்கிய உறவினர் எனவும் கூறப்படுகின்றது. (த-5)

## கிளிநொச்சியில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தற்போது கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டதுடன் இந்த விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (த-6)

## நிரந்தரத்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை அளித்துள்ளது'' எனத் தன்னைச் சந்தித்த இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் எடுத்துரைத்தார் இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி.

'' உண்மையான தேசிய நல்லிணக்கத்துக்கான இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கை அரசு முன்னேற வேண்டும்'' எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் இரவு இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியை ராஷ்டிரபதி பவனில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் போதே இந்திய ஜனாதிபதி மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

இந்திய ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை - இந்திய இரு தரப்பு உறவானது வரலாறு, கலாசாரம் இனங்களுக்கிடையிலான தொடர்பு என்பவற்றுடன் மக்களுக்கு இடையிலான இரு தரப்பு நீண்ட கால உறவுகளை யாவும் வரலாற்று ரீதியாகப் பகிர்ந்து கொள்வதாக அமைந்துள்ளது. இரு நாடுகளும் எப்பொழுதுமே மிக நெருக்கமாகவும் நட்பாகவுமே இருந்து வந்துள்ளன. அருகில் இருப்பதானால் இலங்கையின் மீது இந்தியாவுக்கு இயற்கையாகவே அக்கறை உண்டு. இலங்கையில் ஏற்படும் அபிவிருத்திகளில் இந்தியா தொடர்புகள் எதுவும் இன்றி வாளாவிருந்து விட முடியாது - என்றார்.

இந்திய ஜனாதிபதி கூறிய கருத்துக்களை தாமும் ஏற்றுக் கொள்வதாக எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க அங்கு தெரிவித்தார் என இந்திய ஜனாதிபதி செயலகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ப)

## தீர்வு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பேசுவதற்கு அரசு மறுக்கின்றது. எனவே, அரசியல் தீர்வு காணும் விடயத்தில் மாற்றுவழியொன்று அவசியம் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வருவதற்கு மறுக்கின்றது. அப்படியானால் தீர்வை நோக்கிப் பயணிப்பதற்கு கூட்டமைப்பு விரும்பவில்லையோ என்ற சந்தேகம் எழுகின்றது.

அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் அங்கம் வகிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு கூட்டமைப்பு காலடி எடுத்துவைக்கவேண்டும். இல்லையேல் பிரச்சினைக்குத் தீர்வைக் காணமுடியாது. பிரச்சினைகளுடன் வாழவேண்டிய நிலையே உருவாகும் - என்றும் அமைச்சர் கூறினார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வருவதற்கு கூட்டமைப்பு விரும்பவில்லை. அவர்கள் அரசுடன் பேச்சு நடத்தவே முன்வருகின்றனர். எனினும், அரசு அனைத்துக் கட்சிகளுடனும் பேசி தீர்வைக் காண முயற்சிக்கின்றது. இருதரப்புகளுக்குமிடையில் பொதுவானதொரு இணக்கப்பாடு ஏற்பட மாற்றுத் தீர்வுப் பொறிமுறையொன்று அவசியம் என டியூ குணசேகர மேலும் சுட்டிக்காட்டினார்.

## இந்திய...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கமே குரல் கொடுத்து வருகின்றது. இலங்கையில் தனித் தமிழீழம் அமையச் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று தமிழக சட்டசபையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலையிலேயே ஆட்சியில் இருக்கும் காங்கிரஸ் கட்சி, அதற்கு ஆதரவளித்துக் கொண்டிருக்கும் திரிணாமுல் காங்கிரஸ், பகுஜன் சமாஜ் கட்சி மற்றும் பிரதான எதிர்க் கட்சியான பாரதீய ஜனதா கடசி ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்களே யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளனர்.

எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை யாழ்ப்பாணத்துக்கு வரும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அன்று மாலை 6 மணியளவில், இங்குள்ள சிவில் சமூகப் பிரதிநிதிகளை இந்தியத் துணைத் தூதரகத்தில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளது.

மறுநாள் 10 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இந்திய வீட்டுத் திட்டப் பணிகளையும், காங்கேசன் துறைமுகப் புனரமைப்பு பணிகளையும், குருநகரில் அமைக்கப்பட்டுள்ள மீன் வலை உற்பத்தி தொழிற்சாலையையும் இவர்கள் நேரடியாகச் சென்று பார்வையிடவுள்ளனர். (த-5)

## ஈழத்தமிழருக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வரும் கிறிஸ்ரின் ஒப்பியஸ்,இலங்கை இனவாத அரசுக்கெதிராக பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்து வரும் ஹரி ஹொலிடே ஆகியோரே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பேர்த் நேரப்படி நேற்று மாலை 6 மணிக்கு ஆரம்பித்த அடையாள உண்ணாவிரதம் நாளை மாலை 6 மணிக்கு நிறைவடையும்.

உண்ணாவிரதம் ஆரம்பித்த சில நிமிடங்களிலேயே உண்ணாவிரதம் ஆரம்பித்த இருவர்களுடனும் இணைந்து பத்துக்கும் மேற்பட்டோர் உண்ணாவிரதம் இருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மனித குலத்துக்கெதிரான போரை நடத்தி போர்க்குற்றம் புரிந்தவர்களைச் சர்வதேச விசாரணைக்குட்படுத்தித் தண்டிக்க வேண்டும்,இலங்கை மீது பொருளாதரத் தடை விதிக்கவேண்டும்,தமிழர்களின் விருப்பத்தை அறிய பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே இவர்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

## யாழ்.மீனவர்கள்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சென்றனர்.இவர்கள் சென்ற படகு அதிக கடல் கொந்தளிப்புக் காரணமாக தமிழகம் கோடியாக்கரை கடல் எல்லைக்குச் சென்றது.

இதனை அடுத்து அவர்களைத் தமிழகக் கரையோரப் படையினர் கைதுசெய்து தமிழகப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

படகுகளின் தொழில் அனுமதிப்பத்திரம், எரிபொருள் மானியம் தொடர்பான அனுமதிகள், அடையாள அட்டைகள் என்பனவற்றை இந்த மீனவர்கள் பொலிஸாரிடம் காண்பித்தனர்.

அத்துடன் கடல் கொந்தளிப்பு காரணமாகவே படகு திசைதிரும்பியதை அவர்கள் கூறியதை அடுத்து மீனவர்களின் விடுதலை உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த இரு மீனவர்களும் இன்றும் இரு தினங்களில் விடுதலை செய்யப்படுவர் என்றார். (13)

## மன்னாரில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

புதுவருடத்தை முன்னிட்டு உள்ளூர் உற்பத்திப்பொருள்களின் விற்பனையும்,கண்காட்சியும் எதிர் வரும் 8 ஆம் 9 ஆம் திகதி மன்னார் அல்-அஸ்ஹர் ம.வி பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இதற்காக மன்னார் பிரதேசச் செயலகத்தினரும்,பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோரும் இணைந்து நேற்று வெள்ளிக்கிழமை காலை விளையாட்டு மைதானத்தை துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

இதன் போது பாடசாலை விளையாட்டு மைதானத்தின் மதிலோரத்தில் கைக்குண்டு ஒன்று காணப்பட்டது.

இது குறித்து இராணுவத்துக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த இராணுவத்தினர் அவ்விடத்தில் நின்ற அனைவரையும் அப்புறப்படுத்தி கைக்குண்டை அவ்விடத்திலேயே செயலிலக்கச் செய்தனர். (த-12)

## சந்தேகநபர்க...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊடகங்கள் மீதான தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் தொடர்பான விவரங்களை எமக்கு அறியத்தந்தால் சந்தேக நபர்களைக் கைது செய்ய முடியும்.

கிளிநொச்சியில் 'உதயன்' பத்திரிகை மீது இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாகப் பத்திரிகைகளில் பார்த்த பின்னரே நான் அறிந்துகொண்டேன்.

எனினும் தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் தொடர்பான விவரங்கள் தெரியாமல் எம்மால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது - என்றார். (14)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஒரு சாராரின் போட்டிப் பொருள் ஏனையோருக்கு பாதிப்பையே தரும்

மூன்றாவது உலகப் பெரும் போர் மத்திய கிழக்கிலேயே ஆரம்பமாகும் என்று கடந்த காலங்களில் ஊகம் தெரிவிக்கப்பட்டு வந்தது. பலஸ்தீனப் பிரச்சினைதான் இதற்குப் பிரதான காரணமாகக் காட்டப்பட்டது. பலஸ்தீனப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாவிட்டாலும் மத்திய கிழக்கில் போர் ஆபத்துக் குறைந்துவிட்டது.

வடகொரியாவின் அணுஆயுத தாக்குதல் மிரட்டல், சீனாவின் முத்துச்சர வியூகம், அமெரிக்காவின் பாதுகாப்பு ந வடிக்கைகள் ஆகியவற்றை நோக்கும்போது உலகில் நெருக்கடி அதிகரித்த பிரதேசமாக தூர கிழக்கையே கொள்ளலாம்.

வடகொரியாவின் அணு ஆயுதப் பரிசோதனை, ஏவுகணைப் பரிசோதனை என்பன காரணமாக சமீப காலமாக வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது. தற்பொழுது இது போராக மாறும் ஆபத்தை ஏற்படுத்தி உள்ளது.

அணு ஆயுதத் தாக்குதல் நடத்தத் தனது இராணுவத்துக்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுவிட்டதாக வடகொரியா அறிவித்திருப்பதும், வடகொரியாவின் தாக்குதலை முறியடிக்கும் நடவடிக்கையை அமெரிக்கா ஆரம்பித்திருப்பதும் 1950 - 53 கொரியப் போரின் பின்பு உருவாகி உள்ள மிகவும் மோசமான நெருக்கடியாகக் கருதப்படுகிறது.

தென்கொரியாவையும் அமெரிக்காவையும் தாக்கப்போவதாக வடகொரியா சமீபகாலமாகப் பயமுறுத்தி வருகிறது. அமெரிக்காவுக்கும் அதன் நேச நாடுகளுக்கும் வடகொரியா மிகவும் ஆபத்தான நாடு என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் சமீபத்தில் எச்சரித்திருந்தார். தனது எல்லையில் இருந்து 10 கிலோ மீற்றர் தூரத்தில் வடகொரியாவுக்குள் அமைந்துள்ள கூட்டுக் கைதொழில் வலயத்தில் கடமையாற்றும் தென்கொரியர்களைத் தடுப்பதற்காக அப்பகுதி எல்லையை வடகொரியா மூடியதன் மூலம் பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது.

வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையில் நீண்டகாலமாகப் பகைமை நிலவுகிறது. 1950 - 53 காலத்தைய போர், முறைப்படியான சமாதான உடன்படிக்கை இல்லாமல் முடிவுக்கு வந்தது. அதனால் அந்தப் பிராந்தியத்தில் கடந்த அறுபது ஆண்டுகளாக போரும் இல்லாத சமாதானமும் இல்லாத பதற்றம் நிலவுகிறது. உலகிலேயே கூடுதலான பலம் வாய்ந்த பாதுகாப்பு அரண்களைக் கொண்ட பதற்றமான எல்லை என வடகொரிய - தென்கொரிய எல்லையை இராணுவ நிபுணர்கள் வர்ணிக்கிறார்கள்.

போர் மூழுமானால் அது கொரிய தீபகற்பத்துக்கு மட்டுமன்றி, உலக நாடுகள் முழுவதுக்குமே தாக்கத்தை ஏற்படுத்தலாம். வடகொரியாவுக்கு ஆதரவாக சீனாவும் போருக்குள் இழுபடலாம்.

ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் தனது பாதுகாப்பைப் பலப்படுத்தவும், உலக ஆயுத வல்லரசாக உருவெடுத்தும் வரும் சீனாவைக் கண்காணிக்கவும் கொரிய தீபகற்பத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை அமெரிக்கா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தக் கூடும்.

முழுமையான போர்ச் சூழல் உருவாகாத நிலையில் அமெரிக்கா குவாம் தீவுக்கு அவசரமாகக் கொண்டுவரும் ஏவுகணை எதிர்ப்புச் சாதனம், சீனாவின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக மாறலாம் என்கின்றனர் அவதானிகள். அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ள ஜப்பானிலும் அமெரிக்க ஏவுகணை எதிர்ப்பு சாதனங்கள் நிறுவப்படவுள்ளன.

இரண்டாவது உலகப் பெரும் போரின் பின்னர் ஜப்பானிலும் தென்கொரியாவிலும் அமெரிக்க இராணுவ முகாம்கள் இருந்துவருகின்றன. கடந்த ஐந்து வருடகாலமாக பொருளாதார மற்றும் ஆயுதப் பலத்தில் வேகமாக வளர்ச்சி பெற்றுவரும் சீனா 2030ஆம் ஆண்டில் அமெரிக்காவின் இடத்துக்கு உலகின் முதல்தர வல்லரசாக வந்து விடும் என்று எதிர்வு கூறப்படுகிறது. இத்தகைய நிலையில் அமெரிக்காவின் இலக்கு வடகொரியா மட்டுமல்ல; சீனாவும்தான்.

இந்து சமுத்திரத்தில் சீனா வகுத்துள்ள முத்துச்சர வியூகம் தூர கிழக்கிலும் தெற்காசியாவிலும் அமெரிக்கா தனது பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டிய கட்டாய நிலைமையை ஏற்படுத்தியுள்ளது. சீனாவுடன் எல்லை மற்றும் பிராந்தியத் தகராறுகளைக் கொண்டுள்ள தென்கொரியா, ஜப்பான், பிலிப்பைன்ஸ், வியட்நாம் ஆகிய நாடுகள் சீனா மீதான அச்சம் காரணமாக அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தங்களைச் செய்துகொண்டிருப்பது அமெரிக்காவுக்கு ஒரு சாதக நிலைமை எனலாம்.

எனினும் உலகப் பெரும் போர், வல்லரசு நாடுகளுக்குப் போட்டிப் பொருளாக இருக்கலாம். அது போர் நடைபெறும் வலயங்களில் மட்டுமன்றி அதில் ஈடுபாடு இல்லாத, வளர்ச்சி குன்றிய நாடுகளையும் அங்கு வாழும் மக்களையுமே மிகப் பெரிய அளவில் பாதிக்கும்.

# கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி முடித்தோருக்கு நியமனம்

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள ஆசிரிய பற்றாக்குறை இதன் மூலம் ஓரளவுக்கு நிவர்த்தி செய்யப்படும்**

யாழ்ப்பாணம், ஏப்.6

கல்வியியற் கல்லூரிகளில் ஆசிரிய பயிற்சியை நிறைவு செய்து 2012 ஆம் ஆண்டு வெளியேறிய ஆசிரியர்களுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் 20 ஆம் திகதி இந்த நியமனங்கள் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தாமதமாகும் இவர்களின் நியமனம் தொடர்பாக கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு இந்த நியமனங்களை உடனடியாக வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு அமைவாக இந்த நடவடிக்கையைக் கல்வி அமைச்சு எடுத்துள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள ஆசிரிய பற்றாக்குறை இதன்மூலம் ஓரளவுக்கு நிவர்த்தி செய்யப்படும் என்றும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சிகளை நிறைவு செய்துள்ள ஆசிரியர்களின் பெறுபேறுகளை வெளியிடுவதில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பாகவும் கல்வி அமைச்சுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

விரைவில் அவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படும் என்றும், தொலைக் கல்விக்கு ஊடாகப் பயிற்சிகளை மேற்கொண்டு பின்னர் ஆசிரிய கலாசாலைகளில் இணைக்கப்பட்ட ஆசிரிய மாணவர்களின் பெறுபேறுகள் தொகுப்பாக்கப்படுவதில் ஏற்படும் தாமதம் பெறுபேறுகள் வெளியாவதில் தாமதத்தை ஏற்படுத்துகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆசிரிய உதவியாளர்களாக இருந்து ஆசிரிய பயிற்சியை நிறைவு செய்த ஆசிரியர்களின் வேதன மாற்றத்துக்காக விரைவாகப் பெறுபேற்றை வெளியிட்டு அவர்கள் நிரந்தர ஆசிரிய வகுதிக்குள் உள்வாங்கப்படுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர அதிபர் சேவைத் தரம் 2-I இல் நீண்டகாலம் கடமை யாற்றி அதிபர் சேவைத் தரம் - I கிடைக்கப் பெறாத அதிபர்களின் நியமனம் தொடர்பாக பல தடவை கல்வி அமைச்சிடம் எடுத்துக் கூறி யதன் பயனாக அவர்களுக்கு நேர் முகத் தேர்வு இப்போது கல்வி அமைச்சில் நடைபெற்றுக் கொண்டி ருக்கின்றது.

அவை நிறைவடைந்ததும் பாடசாலைகளில் நிலவும் அதிபர் பற்றாக் குறையும் நீக்கப்படும் என்று சரா புவனேஸ்வரன் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## ரெலிக்கொம் புதிய நிறைவேற்று அதிகாரி யாழ்ப்பாணம் வருகை

**தொலைபேசி இணைப்புகளை அதிகரிப்பது குறித்து ஆராய்வு**

யாழ்ப்பாணம், ஏப்.6

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் புதிய நிறைவேற்று அதிகாரியாக பொறுப்பேற்ற லலித் டி சில்வா யாழ்ப்பாணத்துக்கு திடீரென வருகை தந்தார்.

பண்ணையில் உள்ள ரெலிக்கொம் நிறுவனத்துக்கு சென்ற அவர் அங்கு ரெலிக்கொம் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

குடாநாட்டில் மக்களுக்காக தொலைபேசி இணைப்புக்களை விரைவாக அதிகரித்து வழங்குவது தொடர்பாகவும் அவர் அதிகாரிகளுடனான கலந்துரையாடலில் ஆராய்ந்தார்.

அத்துடன் குடாநாட்டில் சகல பிரதேசங்களுக்கும் சென்று தற்போது வழங்கப்பட்டுக் கொண்டிருக்கும் மேலதிக புதிய இணைப்பு பணிகளையும் பார்வையிட்டார்.

சகல இடங்களிலும் இணைப்பு வசதிகள் தேவைக்கு ஏற்றவாறு அதிகரிக்கப்படவுள்ளன. அதேசமயம் நிறைவேற்று அதிகாரியின் வருகையை முன்னிட்டு பணியாளர்கள் இரத்த தானம் வழங்கும் பணியையும் மேற்கொண்டனர்.

இதில் ரெலிக்கொம் நிறுவன பணியாளர்களில் 35 பேர் வரையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு இரத்ததானம் செய்தமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## வடக்குக்கு 10 அம்புலன்ஸ்கள் இன்று எடுத்து வரப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஏப். 6

வட மாகாணத்துக்கென புதிதாக பத்து அம்புலன்ஸ்கள் இன்று யாழ்ப்பாணம் எடுத்துவரப்படவுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார்.

இந்த புதிய அம்புலன்ஸ்கள் சுகாதார அமைச்சால் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இதில் நான்கு அன்புலன்ஸ்கள் யாழ். போதனா வைத்திய சாலைக்கு வழங்கப்படவுள்ளன.

ஏனைய ஆறு அம்புலன்ஸகளும் வட மாகாணத்தில் அம்பு லன்ஸ் தேவைப்படும் அரசினர் வைத்திய சாலைகளுக்கு வழங்கப்படவுள்ளன.

ஏற்கனவே சில அரசினர் வைத்தியசாலைகளில் உள்ள அம்புலன்ஸ்கள் அடிக்கடி பழுதடைந்து போவதால் நோயாளர்களுக்கான சேவைகள் பாதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## வெளியூர் தபால் பொதிகள் வருகை தற்போது அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 6

யாழ். பிரதம தபாலகத்துக்கு வெளியூர்களில் இருந்து தபால் பொதிகள் வந்து சேர்வது தற்போது அதிகரித்து காணப்படுகின்றது.

சித்திரை புத்தாண்டை முன்னிட்டே இந்த தபால் பொதிகள் தற்போது தினமும் வந்துசேர்வது அதிகரித்துள்ளது என்று தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புலம்பெயர் நாடுகளில் இருந்தும் இந்த தபால் பொதிகள் கூடுதலாக இங்கு எடுத்து வரப்படுகின்றன.

யாழ். பிரதம தபாலகத்தில் சுங்கத் திணைக்களம் செயற்பட்டு வருவதால் வெளிநாடுகளில் இருந்து வரும் தபால் பொதிகள் இங்கு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு உடனடியாக விநியோகிக்கப்பட்டும் வருகின்றன.

இந்த நிலையில் தாமதம் ஏற்படாது பொதிகளை விநியோகிக்க முடிகிறது.- என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-17)

## இயக்கச்சி தபாலகத்துக்கு காணி அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.6

இயக்கச்சி தபாலகத்துக்கு நிரந்தர கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு வசதியாக அந்தப் பிரதேச நலன் விரும்பி ஒருவர் காணி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இந்த தபாலகம் கடந்த பல வருடங்களாகத் தனியார் கட்டடம் ஒன்றிலேயே செயற்பட்டு வருகின்றது.

தற்போது இந்த தபாலகத்துக்கென நிரந்தர கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு வசதியாகவே இந்தக் காணி வழங்கப்பட்டுள்ளது.

தபாலகத்துக்குரிய நிரந்தர கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு தபால் திணைக்களம் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேசமயம் குடாநாட்டில் உள்ள சில தபால் நிலையங்களுக்கு சொந்தக் காணிகள் இருந்தும் நிரந்தர கட்டடங்கள் இன்றி வாடகை கட்டடங்களிலேயே அவை செயற்பட்டும் வருகின்றன.

இந்த தபாலகங்களுக்கு நிரந்தர கட்டடங்கள் அமைப்பதற்கு தபால் திணைக்களத்திடம் போதிய நிதி வளம் இல்லை என்றும் தபாலக அதிகாரி ஒருவர் சுட்டிக்காட்டினார். (ம-17)

## பரிசளிப்பும் மலர் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஏப்.6

காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் ''நடேஸ்வரன்'' மலர் வெளியீடும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் பொ. அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பரிசளிப்பு நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ. சந்திரராஜா பிரதம விருந்தினராகவும் தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு. சண்முக குலகுமாரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

நூல் வெளியீட்டுக்கு வட மாகாண சுதேச சுகாதார வைத்தியத்துறை அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ. குமரன் நூலை வெளியிட்டு வைப்பார். (ம)

## 19 தமிழக மீனவர் தொடர்பில் சட்ட ஆலோசனை

புதுடில்லி, ஏப்.6

இலங்கைச் சிறையில் உள்ள 19 தமிழக மீனவர்களையும் விரைவில் மீட்பதற்காக சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது. விரைவில் இந்த விவகாரத்துக்குக் தீர்வு காணப்படும் என்று இந்திய வெளியுறவுத்துறையின் செய்தித் தொடர்பாளர் சையது அக்பருதீன் தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதருடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இலங்கையில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளும் இதுகுறித்து இலங்கை அரசுடன் பேசி வருகின்றனர். தற்போது தமிழக மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட விளக்கமறியல் மேலும் 10 நாள்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேசியிருக்கின்றோம். தமிழக மீனவர்களுக்கு சட்ட உதவிகள் கிடைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். விரைவில் அவர்கள் நாடு திரும்புவர்- என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ற)

## மாவோயிஸ்ட் தாக்குதல்; 5 பொலிஸார் சாவு

சென்பூர், ஏப்.6

ஜார்கண்ட் மாநிலத்தில் மாவோயிஸ்டுகளின் தாக்குதலில் ஐந்து பொலிஸார் உயிரிழந்துள்ளனர்.

நற்று குல்மா மாவட்டம் சென்பூரில் பொலிஸார் வழமையான ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தபோதே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. மறைந்திருந்த மாவோயிஸ்ட் போராளிகள் பொலிஸார் மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதில் சம்பவ இடத்திலேயே 3 பொலிஸார் உயிரிழந்தனர். காயமடைந்த இருவர் சிகிச்சை பலனின்றி மருத்துவமனையில் உயிரிழந்தனர்.(ற)

## 51ஆயிரம் கோடி மோடியால் இழப்பாம்

புதுடில்லி, ஏப்.6

நரேந்திர மோடி தலைமையிலான பாரதிய ஜனதா அரசால் குஜராத் மாநிலத்திற்கு 51 ஆயிரம் கோடி ரூபா வரை இழப்பு ஏற்பட்டுள்ளது என்று மத்திய தணிக்கைக் குழு கடுமையாக குற்றஞ்சாட்டியுள்ளது.

குஜராத் மாநிலத்தில் குஜராத் மாநில பொருளாதார வளர்ச்சிக்கு முதல்வர் கையாண்டு வரும் விதத்திற்கு இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பாராட்டப்படுகிறது. இந்த நிலையிலேயே இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.(ற)

# இனி கடும்பிடி

## மத்திய அரசை அச்சுறுத்துகிறது தி.மு.க.

சென்னை, ஏப்.6

மத்திய அரசுடன் இனி இறுக்கமான போக்கையே தி.மு.க. கடைப்பிடிக்கும். இதுவரை காலம் மத்திய அரசுடன் தி.மு.க. இணக்க முறையையே பின்பற்றி வந்தது. எனினும் இனிவரும் நாள்களில் மத்திய அரசு மீதான எங்கள் அணுகுமுறையும் விமர்சனமும் இனி மிகக் கடுமையாக இருக்கும்.- இவ்வாறு கூறியுள்ளார் தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர். பாலு.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

மத்திய அரசின் அலட்சியத்தால் ஏராளமான கசப்பான அனுபவங்களை தி.மு.க. சந்தித்துள்ளது. தமிழக நலன் குறித்து மத்திய அரசிடம் முறையிட்டு, முறையிட்டு



ஏமாற்றமே எஞ்சியுள்ளது.

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் தமிழகத்தையும், தி.மு.கவையும் மத்திய அரசு ஏமாற்றிவிட்டது. போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதையும், போர்க் குற்றங்களுக்கு காரணமானவர்களைத் தண்டிக்க சர்வதேச விசாரணை தேவை என்பதையும் தி.மு.க. வலியுறுத்தியது. போஸ்னியா, தெற்கு சூடான் போன்ற நாடுகளில் மனித உரிமைகள் மீறப்பட்ட போது முந்திக் கொண்டு இந்தியா குரல் கொடுத்தது. ஆனால் அயல் நாடான இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற கொடுமைகள் குறித்து அலட் சியம் காட்டி வருகிறது.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டும், சிறைப்பிடிக்கப்பட்டும் வருகின்றனர். அதைத் தடுக்க இதுவரை மத்திய அரசு எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது போன்ற அலட்சியப் போக்குக்கு காங்கிரஸ் கட்சி பதில் கூறும் நாள் வெகு தொலைவில் இல்லை. இனி வரும் நாள்களில் மத்திய அரசு மீதான எமது அணுகுமுறையும் விமர்சனமும் மிகக் கடுமையாக இருக்கும்- என்று கூறினார் பாலு. (ற)

# காங்கிரஸின் இலக்கு தேர்தல்கள் மட்டுமே

## அருண் ஜெட்லி குற்றச்சாட்டு

புதுடில்லி, ஏப்.6

நாட்டின் நிர்வாகத் தரத்தில் கவனம் செலுத்துவதை விடுத்து, தேர்தலில் வெற்றி பெறுவதற்கே காங்கிரஸ் கூட்டணி முக்கியத்துவம் கொடுக்கிறது என்று பா.ஜ.க கட்சியின் மூத்த தலைவரான அருண் ஜெட்லி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

ஆட்சிக்கும் கட்சிக்கும் இரட்டைத் தலைமை கொண்ட காங்கிரஸின் செயற்பாடு தவறானது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் தான் (பிரதமர்) இறுதி அதிகாரம் கொண்டவராகவும், மிகப் பெரிய முடிவுகளை எடுப்பவராகவும் இருக்க வேண்டும். துரதிருஷ்டவசமாக இந்த அரசில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவருக்கு இறுதி அதிகாரம் என்பது இல்லை. ஆளுங்கட்சித் தலைவர் தான் (சோனியா காந்தி) முடிவுகளை எடுப்பதால் அரசு மூன்று கால்களுடன் ஓட்டப்பந்தயத்தில் ஓடுவது போல் இருக்கிறது.

பிரதமர் மன்மோகன் சிங்கின் கருத்தை அல்லது நிலைப்பாட்டை நாங்கள் பல நேரங்களில் ஏற்றதில்லை. ஆனால் அவரது புத்திசாலித் தனத்தை நாங்கள் எப்போதும் சந்தேகித்ததில்லை. எனினும், ஒரு விடயத்தைச் செயற்படுத்தும் அவரது திறனை நான் சந்தேகப்பட்டிருக்கிறேன். நாடு சந்தித்து வரும் பிரச்சினைகள் எவை என்பதும், அவற்றுக்கான தீர்வு என்ன என்பதும் பிரதமருக்கு தெரிந்தே இருக்கிறது. அப்படி இருந்தும், பிரதமருக்குத் அதிகாரங்கள் இல்லை என்பதால் அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க அவரால் முடியவில்லை- என்று அவர் தெரிவித்தார். (ற)

# 7 மாடிக் கட்டடம் இடிந்து வீழ்ந்தது

## 35 பேர் சாவு; பலர் படுகாயம் மும்பையில் துயரம்



தானே, டிசெ.6

மும்பையில் 7 மாடிக் கட்டடமொன்று இடிந்து வீழ்ந்ததில் 35 பேர் உயிரிழந் துள்ளனர். 70க்கும் மேற்பட் டவர்கள் காயமடைந்துள் ளனர்.

தற்போதும் மீட்புப் பணிகள் இடம்பெற்று வரும் நிலையில் உயிரிழப்பு களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று மீட்பு பணியாளர்கள் தெரிகின்றனர்.

மும்பை தானே ஷில் பாத்தா பகுதியில் புதிதாகக் கட்டப்பட்டப்பட்டுக் கொண்டிருந்த மாடிக்கட்டமே இடிந்து வீழ்ந்துள்ளது. 4 மாடிகள் கொண்ட இந்தக் கட்டடத்தில் மேலும் 3 மாடிகளை அமைக்கும் பணிகளே இடம்பெற்று வந்தன. இந்த நிலையில பாரம் தாங்காமல் இந்தக் கட்டடம் இடிந்து விழுந்துள்ளது.

கட்டடம் இடிந்து வீழ்ந்த போது 4 மாடிகளில் வசித்து வந்தவர்கள் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர். இதுவரை 35 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. 70 இக்கும் மேற்பட்டவர்கள் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் உரிய அனுமதி பெறாமல் கட்டடம் கட்டப்பட்டுள்ளது என்று தெரிவிக்கின்றனர். அதையடுத்து கட்டட உரிமையாளர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ற)

### ஹெலிகொப்டர் ஊழல் வழக்கு

## தேடப்படும் குற்றவாளியாக முன்னாள் படைத் தளபதி

புதுடில்லி, ஏப்.6

இந்தாலியில் இருந்து ஹெலிகொப்டர் கொள்வனவு செய்யப்பட்டதில் இடம்பெற்ற ஊழல் வழக்குத் தொடர்பில் இந்திய முன்னாள் விமானப் படைத் தளபதி எஸ்.பி.தியாகியை தேடப்படும் குற்றவாளியாக இந்திய இரகசியப் பொலிஸ் (சி.பி.ஐ.) அறிவித்துள்ளது.

இந்திய வி.ஐ.பிக்கள் பயணம் மேற்கொள்வதற்கான ஹெலிகளைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் இத்தாலி பின்மெக்கானிக்கா நிறுவனத்துடன் செய்யப்பட்டிருந்தது.

அந்த ஒப்பந்தத்தில் பல கோடி ரூபா ஊழல் இடம் பெற்றிப்பது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதையடுத்து இந்த விவகாரம் குறித்து சி.பி.ஐ. விசாரணை மேற்கொண்டு வருகிறது.

விசாரணைகளின்போது இந்திய முன்னாள் விமானப் படைத் தளபதி எஸ்.பி.தியாகி ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காகப் பணம் பெற்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் அவர் பெற்றுக் கொண்ட தொகை குறித்த விவரங்கள் கிடைக்கப்பெறவில்லை. அதையடுத்து தியாகி மற்றும் அவரது உறவினர்கள் 3 பேர் உட்பட 7 பேர் தேடப்படும் குற்றவாளிகளாக சி.பி.ஐயால் அறிவிக்கப்பட்டுள்ளனர். (ற)

# நாட்டின் பிரச்சினைகள் தனியொருவரால் தீராது

## ராகுல் காந்தி தெரிவிப்பு



புதுடில்லி, ஏப்.6

நாட்டின் சிக்கலான அனைத்துப் பிரச்சினைகளையும் தனி மனிதனால் தீர்க்க முடியாது.-

இவ்வாறு தெரிவித்துள்ளார் காங்கிரஸ் கட்சி துணைத் தலைவர் ராகுல் காந்தி.

புதுடில்லியில் இடம்பெற்ற இந்திய தொழிலக கூட்டமைப்பின் வருடாந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் நிலவும் அனைத்துப் பிரச்சினைகளையும் தனியொரு மனிதனால் தீர்த்து வைக்க முடியாது. அப்படி நினைத்தால் அது தவறானது. திடீரென்று குதிரையில் ஒருவர் வருவார், அவர் எமது சகல பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார் என்று யாரும் எண்ண வேண்டாம்.

இன்னும் சொல்லப் போனால் மன்மோகன் சிங் அல்லது வேறொருவர் சகல பிரச்சினைகளையும் தீர்த்து வைத்துவிடுவார் என்று நாம் எதிர்பார்த்தால், நாம் எதிர்பார்த்துக் கொண்டே இருக்க வேண்டியதுதான். நமது அரசியல் நடைமுறை மாற்றப்பட வேண்டும்.

அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும். மக்களிடம் அதிகாரம் சென்றால்தான் நாடு வளர்ச்சி காணமுடியும்.

வளர்ச்சிக்கான கட்டமைப்பை அரசு மட்டுமே உருவாக்க முடியாது. தொழிலகங்களும் அதில் கூட்டுச் சேர வேண்டும். வளர்ச்சிக்கான வாய்ப்புகளை தொழிலகங்கள் உருவாக்க வேண்டும்.

மக்களது ஒத்துழைப்பு இல்லாமல் நாடு முன்னேற முடியாது. அனைத்து தரப்பினரையும் உள்வாங்கி வலிமையான இந்தியாவை உருவாக்க இந்திய தொழி லகங்கள் முன்வர வேண் டும். - என்று தெரிவித்தார்.

அண்மையில் தாம் ஆட்சிக்குவரும் பட்சத்தில் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு ஏற்படுத்தப்படும் என்று பா.ஜ.க. தலைவர் நரேந்திர சிங் மோடி தெரிவித்திருந் தார். அதற்குப் பதிலடி கொடுக் கும் வகையிலேயே ராகுல் காந்தி இவ்வாறு தெரிவித் துள்ளார் என்று அரசியல் அவதா னிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (ற)

# மாணவர்களைப் பாதுகாத்ததா தி.மு.க.?

## சட்டசபையில் ஜெயலலிதா சீற்றம்

சென்னை, ஏப்.6

தி.மு.க. ஆட்சியில் மாணவர்கள் தாக்கப்பட்டு குற்றுயிரும், குறையுயிடுமாக இருந்தபோது காவல்துறை வேடிக்கை பார்த்தது என்று தெரிவித்துள்ளார் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா.

சட்டசபையில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தாம் மட்டுமே மாணவர்களை பாதுகாப்பதாக போன்று தி.மு.க.யினர் பேசுகின்றனர். கடந்த தி.மு.க. ஆட்சியில் நடந்த வற்றைப்பார்த்தால் அவர்கள் எப்படி மாணவர்களை பாதுகாத்தார்கள் என்று தெரியும். சென்னையில் கல் லூரி மாணவர்களை, மாணவர்களை விட்டே தாக்கச் செய்தது. தி.மு.க. அரசுதான். அதை மக்கள் அனைவரும் நன்கு அறிவார்கள்- என்று அவர் மேலும் அங்கு குறிப்பிட்டார். (ற)

# ஜனநாயகம் வலுவடையும்

## பாக். ஜனாதிபதி சர்தாரி கருத்து

இஸ்லாமாபாத், ஏப்.6

பாகிஸ்தானில் பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும் ஜனநாயகம் மேலும் வலுவடையும் என்று தெரிவித்துள்ளார் அந்நாட்டு ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி.

பாகிஸ்தான் மக்கள் கட்சி நிறுவுனர் சுல்பிகா அலி பூட்டோவின் நினைவுநாளை முன்னிட்டு நடத்தப்பட்ட கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''பாகிஸ்தானில் பல்வேறு பிரச்சினைகள், தடைகள் மற்றும் குற்றச்சாட்டுகள் இருந்த போதிலும், ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைமையிலான அரசு முதன்முறையாக 5 ஆண்டுகளுக்கு ஆட்சியை நிறைவு செய்துள்ளது.

நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் பாகிஸ்தான் மக்கள் கட்சி வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிக்கும். இதன்மூலம் வரும் காலங்களில் ஜனநாயகம்மேலும்வலுவடையும்.

கடந்த 5 ஆண்டுகளில் நாட்டு மக்களின் நலன் கருதி, பிரச்சினைகளுக்கு நடுவிலும் பல்வேறு துணிச்சலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைமையிலான அரசு அனைத்து அதிகாரங்களையும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதமருக்கும், நாடாளுமன்றத்துக்கும் வழங்கி உள்ளது. அதிகாரம் மக்களிடம் இருக்க வேண்டும் என்பதே கட்சியின் கொள்கை - என்றார் சர்தாரி. (ற)



## பறவைக் காய்ச்சல் தாக்கத்தால் சீனாவில் 5 பேர் உயிரிழப்பு

பீஜிங், ஏப். 6

சீனாவில் புதிதாக பறவை காய்ச்சல் வைரசால் பாதிக்கப்பட்ட 5 பேர் இறந்துள்ளனர். இந்தத் தகவலை உலக சுகாதார நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது.

அதையடுத்து அங்கு கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மனிதரில் இருந்து மனிதருக்கு இந்த வைரஸ் பரவுவதாக இதுவரை கண்டறியப்படவில்லை. எனினும் பாதிப்புக்குள்ளான பகுதிகளுக்கு வெளிநாட்டவர்கள் செல்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு உலக சுகாதார நிறுவனம் பரிந்துரை செய்துள்ளது. (ற)

## உணவு விநியோகத்தை இடைநிறுத்தியது ஐ.நா. சபை

நியூயோர்க், ஏப்.6

காஸா பள்ளத்தாக்கில் உள்ள மக்களுக்கான அவசர உணவு வழங்கும் நடவடிக்கைகளை இடைநிறுத்திக் கொள்வதாகத் தெரிவித்துள்ளது ஐக்கிய நாடுகள் சபை.

நேற்றுமுன்தினம் காசா போராளிகளால் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு தொடரணி ஒன்றின்மீது மேற்கொள்ளப் பட்ட தாக்குதலை அடுத்து இந்த தீர்மானம் மேற்கொள் ளப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அங்குள்ள தமது உணவு மத்திய நிலையங்கள் அனைத்தும் மூடப்படும் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

தங்களின் சொத்துக்களுக்கும், பணியாளர்களதும் பாதுகாப்பும் உறுதி செய்யப்படும் வரையில், இந்த உணவுப் விநியோகப் பணிகளைத் தொடரப்போவ தில்லை என்று ஐக்கிய நாடுகள் சபை கூறியுள்ளது.


ஐக்கிய நாடுகளின் உணவு விநியோகத்தையே அந்தப் பகுதியில் சுமார் 8 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் நம்பியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## ஈரான் அணு ஆயுத விவகாரம்

# சமரசப் பேச்சு ஆரம்பம்

அல்மாட்டி, ஏப். 6

ஈரானின் அணு ஆயுத தயாரிப்புத் தொடர்பான சமரசப் பேச்சுக்கள் கஜகஸ்தான் நாட்டில் அலமாட்டி நகரில் நேற்று ஆரம்பமாகியது. அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரிட்டன் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளுடனே ஈரான் பிரதிநிதிகள் பேச்சுக்களில் ஈடுபடுகின்றனர்.



ஈரான் அணு ஆயுத தயாரிப்புகளில் ஈடுபடுவதாகத் தெரிவித்து அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. எனினும் மருத்துவம் மற்றும் மின் உற்பத்திக்காகவே அணு உலைகளைப் பயன்படுத்துவதாக ஈரான் தெரிவித்து வருகின்றது.

இந்தநிலையிலேயே மேற்குறித்த நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையிலான பேச்சுக்கள் ஆரம்பமாகியுள்ளன.

இந்த வருடத்தில் இரண்டாவது முறையாக நடைபெறும் இந்த பேச்சு வார்த்தையில், ஈரான் நாடு அணு செயற்பாடுகளை கட்டுப்படுத்த ஒப்புக்கொண்டால் அந்த நாட்டின் மீதான பொருளாதார தடைகள் குறைக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. எனினும் அதை ஈரான் ஏற்றுகொள்வதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவாகவே உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற)

## வடகொரிய மிரட்டலின் எதிரொலி

# ஏவுகணைகளை எதிர்க்க தயாராகிறது அமெரிக்கா

சியோல், ஏப்.6

வடகொரியாவின் தொடர் மிரட்டலை அடுத்து அமெரிக்கா தனக்கு சொந்தமான குவாம் தீவில்ஏவுகணைஎதிர்ப்புஅமைப்புகளை நிறுவி வருகிறது.

அமெரிக்க நிலைகள் மீது அணு ஆயுத தாக்குதல் நடத்த தமக்கு அனுமதி வழங்கப்பட்டுவிட்டதாக வடகொரிய இராணுவம் கூறியுள்ள நிலையிலேயே அமெரிக்கா இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

அமெரிக்க இராணுவம் நிலைகொண்டுள்ள சொந்தமான குவாம் தீவிலேயே ஏவுகணை எதிர்ப்பு அமைப்புகள் நிறுவப்பட்டு வருகின்றது. பென்டகன் மற்றும் விண்வெளி பாதுகாப்பு துறை துணையுடன் வாகங்களில் இருந்து ஏவக்கூடிய ஏவுகணை எதிர்ப்பு அமைப்புகள் நிறுவப்பட்டு வருகின்றன.

இதுகுறித்து அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் சக் ஹெகல் தெரிவிக்கையில்:-

'வடகொரியாவின் செயற்பாடுகள் தென்கொரிய, ஜப்பான் மற்றும் அமெரிக்க நலன்களுக்கு எதிரானதாக உள்ளது. குவாம், ஹவாய் தீவுகள் மற்றும் அமெரிக்காவின் மேற்கு கடற்கரை பகுதிகளை தாக்குவோம் என அந்த நாடு மிரட்டி வருகின்றது. வடகொரியாவின் மிரட்டல்களை கடுமையாகவே எடுத்துக் கொள்வோம். வடகொரிய மிரட்டலால் எழுந்துள்ள நிலைமை குறித்து ஜனாதிபதி ஒபாமா கூர்ந்து கவனித்து வருகிறார்.

வடகொரியா அணு ஆயுதங்களைக் கைவிட்டு சமாதானப் பேச்சு நடத்த முன்வரவேண்டும். அதனால் மட்டுமே வடகொரிய மக்கள் நன்மைகளை அடையலாம். கொரிய தீபகற்பத்தில் பதற்றத்தை குறைக்க சீனாவுடன் இணைந்து செயல்பட்டு வருகிறோம். சீனாவும் இப்பிரச்சினைக்கு அமைதியான முறையில் தீர்வு காணவே விரும்புகிறது-என்றார்.(ற)

# வாக்குவாதம் முற்றி முகாமில் கலவரம்

## இந்தோனேஷியாவில் 8 பேர் சாவு

ஜகார்த்தா, ஏப். 6

இந்தோனேஷியாவின் சுமத்திரா தீவுகளில் உள்ள அகதிகள் முகாமில், மியான்மாரில் இருந்து வந்த முஸ்லிம் மற்றும் புத்த மதத்தைச் சேர்ந்த அகதிகளுக்கிடையே ஏற்பட்ட மோதல்களில் 8 பேர் உயிரிழந்தனர்.

இரும்புக் கம்பி, மரக் கட்டைகள் மற்றும் கத்தியைக் கொண்டு அவர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர். 2 மணி நேரம் நீடித்த இந்த மோதல் பின்னர் பொலிஸாரால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

அண்மையில் மியான்மாரில் புத்த மதத்தினருக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே நடந்த கலவரங்கள் குறித்து பேச்சு, பின்னர் வாக்குவாதமாகி இரு தரப்பினரும் மோதல்களில் ஈடுபட்டனர் என்று கூறப்படுகிறது. (ற)

# நேட்டோவின் தாக்குதலில் 5 பேர் சாவு

காபூல், ஏப்.6

ஆப்கனில், நேட்டோப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட வானூர்தித் தாக்குதலில் நான்கு ஆப்கன் பொலிஸார் உட்பட ஐந்து பேர் உயிரிழந்தனர்.

தலிபான் தாக்குதல் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தவறான கணிப்பின் காரணமாகவே சாதாரண உடையில் இருந்த பொலிஸ் அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்று நேட்டோ படைத்தரப்பின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்த விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

நேட்டோ படைகளின் தாக்குதல்களில் பொதுமக்கள் உயிரிழப்பது அதிகரித்துள்ளது என்று ஆப்கன் அரசு குற்றஞ்சாட்டியுள்ள நிலையில் இந்தத் தாக்குதல் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# நிலநடுக்கம்

மணிலா, ஏப்.6

பிலிப்பைன்ஸ் மற்றும் பாகிஸ்தானில் நேற்றுமுன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவின் வடகிழக்குப் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கம், 5.3 அலகுகள் ரிச்டர் அளவுகோலில் பதிவாகியுள்ளது.

அதேவேளை, பாகிஸ்தானின் மத்திய மற்றும் வடக்குப் பகுதிகளில் ஏற்பட்ட நிலநடுக்கம் 5.9 அலகுகளாக ரிச்டர் அளவுகோலில் பதிவாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் காலையில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் தாக்கம் இஸ்லாமாபாத், ராவல்பிண்டி, பெஷாவர், லாகூர், முஸ்பர்நகர், சித்ரல் மற்றும் மலாகந்த் ஆகிய நகரங்களில் உணரப்பட்டது.(ற)

# தெற்கு இஸ்ரேல் மீது ரொக்கெட் தாக்குதல்

ஜெருசலேம், ஏப்.6

இஸ்ரேலின் தெற்கு பகுதியில் ஹமாஸ் இயக்கம் ரொக்கெற் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள இஸ்ரேல் அரசு,

''இஸ்ரேல் மக்களின் பாதுகாப்பே முக்கியமாகும். பயங்கரவாதிகள் தொடர்ந்து ரொக்கெட் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதை அனுமதிக்க முடியாது. காசா பகுதியில் இருந்து மேற்கொள்ளப்படும் தாக்குதல்களைச் சமாளிக்கும் திறன் இஸ்ரேலுக்கு உள்ளது'' என்று தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் முதல் காசா பகுதியில் இருந்து இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பினர் தொடர்ந்து ரொக்கெட் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். அதற்கு இஸ்ரேல் இராணுவமும் அவ்வப்போது பதில் தாக்குதல் நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

# பராக் ஒபாமா - புடின் ஜூன் மாதம் சந்திப்பு

மொஸ்கோ, ஏப். 6

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் எதிர்வரும் ஜூன் மாதம் சந்தித்து பேச உள்ளார் என்று ரஷ்ய ஜனாதிபதியின் ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

ஜி-8 நாடுகளின் உச்சி மாநாடு வரும் ஜூன் மாதம் அயர்லாந்தில் நடைபெற உள்ளது. அந்த மாநாட்டில் அமெரிக்கா, ரஷ்யா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

அந்த மாநாட்டின் போது அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுடன் விளாடிமிர் புதின் சந்தித்துப் பேசவுள்ளார் என்று தெரிவித்துள்ள புதினின் அரசியல் ஆலோசகர் யூரி உஷா கோவ், ஏவுகணை பாதுகாப்பு, சிரியா உள்நாட்டுப் போர் உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக இருநாட்டு தலைவர்களும் ஆலோசனை நடத்த உள்ளனர் என்றும் தெரிவித்தார்.

விரைவில் மொஸ்கோ வரவுள்ள அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் டோம் டோனிலன் புடின்-ஒபாமாசந்திப்புத் தொடர்பாக உறுதிப்படுத்துவார் என்றும்கூறப் படுகிறது.(ற)

# அரிசி ஆலைக்குரிய காணி இராணுவத்தால் விடுவிப்பு

அக்கராயன்,ஏப். 6

தம் வசம் இருந்த அரிசி ஆலைக்குரிய காணியை இராணுவத்தினர் மீள ஒப்படைத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு ஒட்டங்குளம் அரிசி ஆலைக்குரிய காணியையே இராணுவத்தினர் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திடம் கையளித்துள்ளனர்.

கடந்த மாதம் 20 ஆம் திகதி இந்தக் காணிக் கையளிப்பு இடம்பெற்றது. மக்கள் மீள் குடியமர்ந்த காலத்திலிருந்து இக் காணியை விடுவிப்பதற் கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வந்தன. மேலும் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் ரி. பிருந் தாகரனும் இது தொடர்பாகப் பெரும் முயற்சி எடுத்திருந் தார். இதன் காரணமாக அரிசி ஆலைக்குரிய காணி கையளிக்கப்பட்டுள்ளது.

பனங்காமம் பற்று பல. நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற் குரிய இக்காணியில் உள்ள அரிசி ஆலையின் புனரமைப்புப் பணிகள் யூ.என்.டி.பி. யின் 75 லட்சம் ரூபா நிதி உதவியுடன் புனரமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க-18)

# மன்னாரில் முடங்கின நேற்று தனியார் பஸ்கள்

மன்னார் மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் நேற்று வெள்ளிக்கிழமை காலை தொடக்கம் தமது பணிப் புறக்கணிப்பை மேற்கொண்டு வருவதாக மன்னார் மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தர்மலிங்கம் ரமேஸ் தெரிவித்தார்.

எவ்வித முன் அறிவித்தல்களும் இன்றி மன்னார் மாவட்டச் செயலகத்தினூடாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மன்னார் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு வழித்தடத்துக்கும் அனுமதியைப் பெறுவதற்கு கேள்விக் கோரல் விடுத்துள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே நேற்று வெள்ளிக்கிழமை தொடக்கம் மன்னார் தனியார் போக்குவரத்துச் சங்கம் தனது சேவைகளை இடை நிறுத்தியுள்ளது.

உரிய பதில் மன்னார் மாவட்டச் செயலகத்தினால் தமக்குக் கிடைக்கும் வரை தமது பணிப் புறக்கணிப்பு தொடரும் எனவும் மன்னார் தனியார் போக்குவரத்துச் சங்கம் அறிவித்துள்ளது.



வெறிச்சோடிய நிலையில் பஸ் தரிப்பிடம்

## முடிவுக்கு வந்தது போராட்டம்

கேள்விக் கோரலை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தற்காலிகமாக நிறுத்தியதால் மன்னார் தனியார் பஸ் உரிமையாளர்களின் போராட்டம் முடிவுக்கு வந்தது.

நேற்று பிற்பகல் 4 மணியிலிருந்து தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடத் தொடங்கியதாக மாவட்டத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவரான தர்மலிங்கம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

இதனால் உள்ளூர் மற்றும் வெளியூர் போக்குவரத்துச் சேவைகள் பாதிப்படைந்துள்ளன.

பயணிகள் பல்வேறு இடையூறுகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக மீள் குடியமர்வு செய்யப்பட்ட மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட சகல கிராமங்களிலும் தனியார் போக்குவரத்துச் சேவைகள் இடம் பெற்று வந்த நிலையில் தனியார் பஸ்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளமையினால் குறித்த கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வேறு மாவட்டங்களில் இருந்தும் தனியார் பஸ்கள் மன்னாருக்கு வருவது நிறுத்தப்பட்டுள்ளதாகவும் மன்னார் மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

மன்னாரில் அரச போக்குவரத்துச் சேவைகள் மாத்திரமே தற்போது இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-12-14)

# பஸ் சேவை இன்றி சிரமம்

வவுனியா,ஏப். 6

வவுனியா பம்பைமடு பிரதேசத்துக்கு பஸ் சேவை இன்மையால் அந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதனால் 7 கிலோ மீற்றர் தூரம் நடந்து மன்னார் வீதிக்குச் சென்று வவுனியா வைத்தியசாலைக்கோ, அரச அலுவலகங்களுக்கோ செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தப் பிரதேசத்துக்கு செல்வதற்கான வீதி அண்மையில் புனரமைக்கப்பட்டது. இருந்தும் பஸ் சேவை இன்மையால் மக்கள் இடர்களை எதிர்கொள்கின்றனர். உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் எடுத்து இந்தப் பிரதேசத்துக்கு பஸ் சேவையை ஆரம்பிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(எ-402)

## கிளிநொச்சியில் களவாக மரங்கள் அழிப்பு

அக்கராயன்,ஏப்.6

கிளிநொச்சி வண்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் குளம் ஆகிய கிராமங்களில் களவாக மரங்களை அழிக்கும் செயற்பாடுகள் நடைபெற்று வருவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி இரு கிராமங்களும் உவர் ஆபத்தை எதிர்கொண்டுள்ளன. இந்தக் கிராமங்களின் உவர்ப் பரம்பலைத் தடுப்பதில் மரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மரங்கள் அழிக்கப்பட்டால் பருவம் தப்பிய மழை வீழ்ச்சி கூட உருவாகும். இந்த நிலையில் மரங்களைக் காப்பது மீளக்குடியமர்ந்த மக்களின் முக்கிய பொறுப்பாகும்.

இதேவேளை வீட்டுத் திட்டங்களுக்குக் கூட பிரதேச செயலரின் அனுமதியுடன் மட்டுமே மரங்கள் வெட்டுவதற்கு அனுமதி வழங்கப் படுகின்றது என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

(வ-18)



நெடுங்கேணி முருகன் ஆலயத்துக்கு அருகில் செல்லும் இறம்பைக்குளம் வீதி மோசமாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. (க-435)

# அம்பாள் முன்பள்ளிக்கு உபகரணங்கள் அன்பளிப்பு

கிளிநொச்சி,ஏப்.6

கிளிநொச்சி அம்பாள் முன் பள்ளிக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளையின் ஏற்பாட்டில் கனேடிய செம்பிறைச் சங்கத்தின் நிதியுதவியுடன் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் கிளிநொச்சி அம்பாள்குளம் அம்பாள் முன் பள்ளிக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த உபகரணங்களில் அலுமாரி, ஆசிரியருக்கான மேசை, கதிரை, மாணவர்களின் உபயோகத்துக்கான மேசை கதிரைகள் என்பன அடங்கியுள்ளன. இந்தப் பொருள்களைக் கையளிக்கும் நிகழ்வு கரைச்சிப் பிரிவுக்கான செஞ்சிலுவைச் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த முதலாம் திகதி மு.ப.10.30 மணியளவில் முன்பள்ளி ஆசிரியர் குளோறி சுகந்திகா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கரைச்சி செஞ்சிலுவைப் பிரிவின் தலைவர் தி.சிவரூபன், கிளிநொச்சிக் கிளையின் நிறைவேற்று அதிகாரி ரி.இராஜ சிறீகாந்தன், அம்பாள்குளம் கிராம அலுவலர் திருமதி நீலலோஜினி சிறீபத்மநாதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர். நன்றியுரையினை அம்பாள்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கிருஷ்ணசாமி நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் செஞ்சிலுவைச் சங்கத்தின் கரைச்சிப் பிரிவு செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் பெற்றோர் மற்றும் கிராம நலன்விரும்பிகள் கலந்து கொண்டனர்.

(க-405)

## தென்னியங்குளம் பாடசாலையை தரமுயர்த்தக் கோரிக்கை

அக்கராயன்,ஏப். 6

துணுக்காய் தென்னியங்குளம் பாடசாலையை தரம் உயர்த்துமாறு பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1974 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலையில் 1-9 வரையான வகுப்புகளே உள்ளன. தரம் 10, 11 மாணவர்கள் கோட்டைகட்டிய குளம், துணுக்காய் ஆகிய நீண்ட தூரத்திலுள்ள வேறு பிரதேசப் பாடசாலைகளுக்கு செல்கின்றனர்.

எனவே குறித்த பாடசாலையில் உயர் வகுப்புக்கள் நடத்தப்பட்டால் மாணவர்கள் பிற இடம் செல்ல வேண்டிய தேவை ஏற்படாது என்று பெற்றோர் மேலும் தெரிவித்தனர்.

(வ-18)

# கல்வியில் மட்டுமன்றி ஏனைய துறைகளிலும் மாணவர்கள் ஆர்வம் செலுத்த வேண்டும்

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

ஆசிரியர்கள் தனித்து வகுப்பறைக் கற்பித்தலோடு மட்டும் தம்மை மட்டுப்படுத்திக் கொள்ளாமல் கற்பித்தலுக்கு உரமூட்டும் இலக்கியம், நாடகம், எழுத்தாக்கம், நவீன தொழில்நுட்பம், உளச்சுகாதாரம், ஊடகவியல் போன்ற துறைகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளல் வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் தொடர்பியல் வித்தகர் அருணா செல்லத்துரை.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் மாணவ ஆசிரியர்களின் காலைக் கூட்டச் சிந்தனைகளை உள்ளடக்கி கடந்த சனிக்கிழமை வெளியிடப்பட்ட கல்லூரியின் பீடாதிபதி க.பேர்ணாட்டால் தொகுக்கப்பட்ட 'Be Positive' என்ற நூலின் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று கற்றலை இழந்தவர்களுக்கும், கற்றலில் இடர்பாடுகள் நிறைந்தவர்களுக்கும், கற்றலில் சிறப்பாக விளங்குவோருக்கும் அர்ப்பணிப்புடன் உதவ முடியும்.

வவுனியாவில் தனக்கென ஒரு பாரம்பரியத்தைக் கொண்டிருக்கும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களின் வினையாற்றலை இயலுமானளவு உயர்த்துவதில் பெரும் சாவால்களுக்கு மத்தியில் அர்ப்பணிப்புடன் இயங்கி வருவதற்கு இன்றைய நூல் வெளியீடு ஒரு நல்ல உதாரணமாகும்.

ஆசிரியர்கள் தமது மொழி மீது பற்றுடையவர்களாகவும், மொழியைப் பிழையின்றித் திருத்தமாக உச்சரிப்பவர்களாகவும், மொழியியல் பற்றிய ஆய்வு நோக்கு உடையவர்களாகவும் தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும்-என்றார்.

இதேவேளை பீடாதிபதி க.பேர்ணாட் தமது தலைமையுரையில்,

எதிர்காலத்தில் வினைத்திறன்மிகு ஆசிரியர்களாக மிளிர்வதற்கு இன்றே மாணவர், ஆசிரியர்கள் தம்மை நன்கு தயார்படுத்திக் கொள்ளல் வேண்டும். ஆசிரியர்கள் தமது உள்ளத்தில் ஊற்றெடுக்கும் சிந்தனைகளை உரையாகவும், எழுத்து மூலமும், நூலுருவிலும் வெளிப் படுத்த வேண்டும்.

ஆசிரியர்களின் படைப்புக்களே மாணவர்களின் நடத்தைகளை இலகுவாக மாற்றியமைக்கும் வல்லமை கொண்டவையாகும். இந்த நோக்கத்தின் அடிப்படையிலேயே மாணவர்கள் காலைக் கூட்டங்களில் ஆற்றிய உரைகள் அவர்களாலேயே எழுத்துருவாக்கப்பட்டு தம்மால் தொகுத்து வெளியிடப்படுகின்றது - என்றார்.

(வ)

## காணிப் பங்கீட்டில் தொடர்ந்து பிணக்குகள்

பூநகரி குடமுருட்டிக் குளத்தின் கீழ் சிறுபோக நெற்செய்கைக்கான காணியைப் பங்கீடு செய்வதில் தொடர்ந்தும் பிணக்குகள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குளத்தின் கீழ் 250 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தக் குளத்தின் கீழ் 48 குடும்பங்கள் தற்போது மீள்குடியமர்த்தப்பட்டுள்ளன. ஆனால் சிறுபோக நெற்செய்கையின் போது இந்த 48 குடும்பங்களும் முதன்மைப்படுத்தப்படாது பிற இடங்களில் இருந்து வருகை தருவோருக்கு காணிகளைப் பங்கீடு செய்வதில் அதிகாரிகள் முனைப்புக் காட்டுவதாகவும் தெரியவந்துள்ளது.

எனவே தமக்கு முன்னுரிமை அடிப்படையில் காணிகளை வழங்குமாறு மீள்குடியமர்ந்த குடும்பங்கள் தெரிவித்துள்ளன.

(க-18)

# இலங்கை- பாகிஸ்தானுக்கு இடையில் பலமான உறவு

## புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்து

கொழும்பு,ஏப்.6

இலங்கைக்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் பாதுகாப்பு, கல்வி, பொருளாதாரம், இராஜதந்திரம் உள்ளிட்ட பல விடயங்களில் பலமான உறவுகள் காணப்படுகின்றன என்று பாகிஸ்தானின் வெளிவிவகாரச் செயலர் ஜலில் அபாஸ் ஜிலானி தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையில் பல்வேறு விடயங்களில் ஒத்துழைப்பு காணப்படுகின்றது. இறைமையுள்ள நாடுகளென்ற ரீதியில் இரு நாடுகளும் பரஸ்பர புரிந்துணர்வுடன் செயற்பட்டு வருகின்றன என்றும் அவர் கூறினார்.

இலங்கைக்கும், பாகிஸ்தானுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் வெளிவிவகாரச் செயலாளர் ஜலில் அபாஸ் ஜிலானி மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலர் கருணாரட்ன அமுனுகம ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

**கல்வி, பாதுகாப்பு, இராஜதந்திரம் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளன.**

இது தொடர்பான நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்றது.

இந்த ஒப்பந்தத்துக்கு அமைய இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்புகள் மேலும் வலுப்பெறும் என்று பாகிஸ்தான் வெளிவிவகாரச் செயலர் குறிப்பிட்டார்.

பொருளாதாரம், கல்வி, பாதுகாப்பு, இராஜதந்திரம் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் தற்பொழுது ஆரம்பமான பேச்சு தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று அவர் கூறினார். (ச)



புதிதாக நிர்மாணிக்கப்பட்ட உற்பத்திகத்திறன் மற்றும் ஊக்குவிப்பு அபிவிருத்தி அமைச்சின் புதிய அலுவலகம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பத்தரமுல்லவில் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் உற்பத்தித்திறன் மற்றும் ஊக்குவிப்பு அபிவிருத்தி அமைச்சர் பசீர் சேகுதாவூத் கலந்துகொண்டு மங்கள விளக்கேற்றுகிறார்.

# நிறைவேற்று அதிகாரத்தை உடன் ரத்து செய்ய வேண்டும்

## அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகள் கோரிக்கை

கொழும்பு,ஏப்.6

இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ரத்து செய்ய வேண்டும் என்று கண்டி அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடாதிபதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நாட்டுக்கு பிரதமர் ஆட்சி முறைமையே மிகவும் பொருத்தமானது என்று அவர்கள் கூறினர்.

நிறைவேற்று அதிகார முறைமையை ரத்துச் செய்ய வேண்டும் என்று விடுக்கப்படும் கோரிக்கையை அரசு ஏற்றுக்கொள்ளத் தவறி யுள்ளது. நாம் கூறுகின்ற ஆலோசனைகளைச் செவி மடுப்பதுடன் விட்டு விடுகின்றது என்று அவர்கள் தெரிவித்தனர்.

தகுதியானவர்களுக்கு உரிய பதவிகள் வழங்கப்படுவதில்லை. தூதுவர் பதவிகளுக்கு தகுதியானவர்கள் அனுப்பி வைக்கப்படுவதில்லை என்று அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக வாக்குறுதிகள் அளிக்கப்பட்ட போதும், அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதில்லை என்று அவர்கள் மேலும் குறிப்பிட்டனர். (ச)

# சைப்பிரஸ் நாட்டுக்கு தொழிலாளரை அனுப்புவது இடைநிறுத்தம்

கொழும்பு,ஏப்.6

சைப்பிரஸ் நாட்டுக்கு இலங்கையிலிருந்து தொழிலாளர்களை அனுப்பும் பணி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

சைப்பிரஸ் நாட்டில் தற்போது நிலவும் மோசமான பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு மேம்பாட்டு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார். சைப்பிரஸில் நிதி நெருக் கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. அது தொடர்பில் நீண்ட ஆய்வு நடத்தி, தொழிலாளர்களை சைபிரஸ்ஸுக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். (ச)

## நெஞ்சைவிட்டு அகலாத ஓராண்டு நினைவலைகள்

தோற்றம்
17.11.1966



மறைவு
17.04.2012

## திருமதி பிறேமகுமார் செல்வராணி

(வேலணை - சுவிஸ்)

ஆண்டவன் அழிப்பினில் தவறுவோர் யாருமில்லை. கோலங்கள் மாறலாம்
காலங்கள் அழியலாம் கடமைகள் முடியலாம் நம் உள்ளத்தின் பாச கருவறையில்
உறவுகள் தொடரும் ஆனால் ஆண்டவன் படைப்பினிலே ஆண், பெண் இரு பிறவிகள்
அன்புடன் வாழ்ந்து பண்புடன் நடந்து உறவுகள் பெயர் சொல்லி உத்தமராய் வாழ்ந்த
எங்கள் குடும்பத்தின் ஒரு விளக்கு அணைந்து இன்று ஓராண்டு முடிந்தது.
நீர் பெற்றெடுத்த சிங்கங்கள் தலையெடுத்து குடும்பத்தை சிறப்பிக்கும் வேளைதனில்
கட்டிய கணவன் பெற்றெடுத்த பிள்ளைகள், கூடிப்பிறந்த உறவுகள், உடன் பிறவா
உள்ளங்கள் அத்தனையும் துடிதுடிக்க காலனின் கடும்பிடியில் சிக்குண்டு இறைவனடி
சேர்ந்தீரோ.... சுவிஸ் நாட்டில் உம் உயிர் பிரிந்த செய்திகேட்டு உள்ளங்கள்
துடிதுடிக்க கண்கள் விழிநீர் சொரிய வெந்தமனம் இன்னமும் ஆறவில்லை.
எம் உயிர் உள்ளவரை உம் நினைவுகள் அழியாது
எல்லாம் வல்ல பெருங்குளம் அன்னையின் பெயரால் உம்மை நினைத்துநிற்கும்.

கொட்டடி,
யாழ்ப்பாணம்.

க. பிறேமகுமார்
குடும்பத்தினர்

(35705) (45.6.7)

# பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் அதிரடி தீர்மானத்தால் நெருக்கடி

## ஸ்ரீ லங்கன் விமான நிறுவனம் கவலை

கொழும்பு,ஏப்.6

இலங்கை பெற்றோலிய வள கூட்டுத்தாபனம், உடன் பணத்துக்கு மாத்திரமே நிறுவனங்களுக்கு எரிபொருள்களை விநியோகிப்பது என்ற தீர்மானத்தை எடுத்துள்ளதால் ஸ்ரீ லங்கன் விமான நிறுவனம் எரிபொருள்களைப் பெறுவதில் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. பெற்றோலிய வளக் கூட்டுத்தாபனத் துக்குச் செலுத்தப்பட வேண்டியுள்ள கடன்களைச் செலுத்துவதற்கு திட்டமொன்று கைவசம் உள்ளது.

இது தொடர்பாக எதிர்வரும் நாள்களில் பெற்றோலிய வளங்கள் அமைச்சருடன் சந்திப்பு நடத்தப்படும் என்று ஸ்ரீ லங்கன் விமான நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தால் பெற்றோலிய வளங்கள் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்பட வேண்டியிருக்கும் ஒட்டு மொத்த நிலுவைக் கடன் தொகை 3000 கோடி ரூபாவைத் தாண்டியுள்ளது.

ஸ்ரீலங்கன் விமான நிறுவனம் உள்ளடங்கலாக அரச நிறுவனங்கள் சிலவற்றுக்கு கடனுக்கு எரிபொருள்களை வழங்குவது தொடர்பாக பெற்றோலிய வளங்கள் கூட்டுத்தாபனம் இலங்கை வங்கியிடம் 100 பில்லியன் ரூபா கடன் பட்டுள்ளது. (ச-22)

## மணமகள் தேவை

1974ஆம் ஆண்டு பிறந்த லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. இலக்கினம்-துலாம், உதயத்துச் செவ்வாய், கிரகபாவம் 19½, மணமகன் இலங்கையிலுள்ளார்.

உடன் தொடர்புக்கு: 077 631 4178

## தவறிவிட்டது

**புத்தடி கிழக்கு, விசுவமடுவில் வசிக்கும் இராசகுமார் ராகுலன்** என்பவருடைய தேசிய அடையாள அட்டை (880712 683V),வாகன சாரதி அனுமதிப் பத்திரம் (5B1511736) மற்றும் வரிச் சிட்டை, காப்புறுதிப்பத்திரம், மணிப்பேசுடன் கிளிநொச்சிக்கும் புதுமுறிப்புக்குமிடையில் 03.04.2013 அன்று இரவு தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள், **டிப்போ Road மின்னிலா மின்னியல் இலத்திரனியல் கடையில்** கொடுக்குமாறும் அல்லது கீழுள்ள இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் வேண்டுகின்றேன்.

தொடர்பு: 077 232 1660

## புங்குடுதீவு-நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ/து)

*சகல பொதுச்சபை உறுப்பினர்களுக்கும்.*

இன்று 06.04.2013 ஆம் திகதி நடைபெறவிருந்த எமது சங்கத்தின் பொதுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் நடைபெறமாட்டாது என்பதையும் கூட்டம் நடைபெறும் திகதி பின்னர் தங்களுக்கு அறிவிக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

*க.இராஜரெட்ணம்*
*தலைவர்.*

*செ.எ.செல்வவதனா*
*செயலாளர்.*

## யா/ வண்ணை நாவலர் மகா வித்தியாலய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தர்மகர்த்தா சபையின் பகிரங்க அறிவித்தல்

மேற்படி சபைக்கு சொந்தமான கே.கே.எஸ். வீதியில் அமைந்துள்ள ஆதனத்தில் பழைய கடைத்தொகுதிக்குப் பதிலாக வீதி அகலிப்பின் பின் புதிய கடைத்தொகுதியை அவசரமாக அமைக்க வேண்டியிருப்பதால் ஏற்கனவே இயங்கி வந்த கடைகளின் சொந்தக்காரர்கள்(கடை இலக்கம் 317,319,321,323,325 327,329,67ஏ,67பி) தமது கடையின் உடைமைகளை தாம் ஏற்கனவே ஒத்துக்கொண்ட சரத்துக்கு அமைவாக 15.04.2013 ஆம் திகதிக்கு முன்னர் அகற்றி புதிய கடைத்தொகுதி நிர்மாணத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

[illegible], சபைத்தலைவர்,
வலயக்கல்விப் பணிப்பாளர்.

க.சிவபாதசுந்தரம்
அதிபர்,சபைச் செயலாளர்.

(33704)(5-6-7)

## காலி மாநகர சபைக்குச் சொந்தமான
# விளையாட்டரங்குக்கான குத்தகைப் பணம் ரூ.48 லட்சம் கிரிக்கெட் சபையால் 'நிலுவை'

கொழும்பு,ஏப்.6

காலி மாநகர சபைக்கு இலங்கை கிரிக்கெட் கட்டுப் பாட்டுச்சபையினால் 47 லட் சத்து 60 ஆயிரம் ரூபா செலுத் தப்படவேண்டியுள்ளது.

காலி மாநகர சபைக்குச் சொந்தமான சர்வதேச கிரிக்கெட் விளையாட் டரங்கு இலங்கை கிரிக் கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் காலி மாநகர சபைக்குச் செலுத்த வேண்டிய 47 லட்சத்து 60 ஆயிரம் ரூபா இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினால் இதுவரை யிலும் செலுத்தப்படாது நிலுவையில் உள்ளது.

1998 ஆம் ஆண்டிலி ருந்து 2008 ஆம் ஆண்டு வரையிலான 10 வருட காலத்துக்கு குத்தகைப் பணம் செலுத்தாமையால் இந்த நிலுவை ஏற்பட் டுள்ளது.

ஆனால் இதனை அற விடுவதற்கு காலி மாநகர சபை எந்தவொரு நடவ டிக்கையையும் மேற்கொண் டதாகத் தெரியவில்லை.

10 வருட கால ஒப்பந் தம் முடிவடைந்துள்ள போதி லும் இலங்கைக் கிரிக் கெட் கட்டுப்பாட்டுச் சபை இன்று வரையிலும் புதிய ஒப்பந்தம் ஒன்றைக் மேற் கொள்ளவில்லை.

மேலும் நிலுவைத் தொகை மற்றும் இழப் பீட்டுத் தொகைகளையும் செலுத்தாததோடு விளையாட்டரங்கைத் தொடர்ந்து பயன்படுத்தி வரு வதாக காலி மாநகர சபை யின் 2011 ஆம் ஆண்டுக் கான கணக்காய்வாளர் திணைக்கள அறிக்கை யில் வெளிப்படுத்தப்பட் டுள்ளது. (க-22)

## ஆஸி. செல்ல முற்பட்டோர் கடற்படையிடம் சிக்கினர்

கொழும்பு,ஏப்.6

சட்ட விரோதமான முறையில் ஆஸ்திரேலியா செல்ல முற்பட்ட 38 பேர் கடற்படையினரால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை களுத்துறை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர். அவர்கள் குற்றப் புலனாய்வுப்பிரிவிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று கடற்படை தெரிவித்துள்ளது.

கைதானவர்களில் 35 பேர் தமிழர்களும், 2 சிங்கள வர்களும், ஒரு முஸ்லிமும் உள்ளடங்குகின்றனர்.

## டெங்கின் தாக்கம் கொழும்பில் அதிகம்

கொழும்பு,ஏப்.6

கொழும்பு மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் மீண்டும் தீவிரமடைந்துள்ளது என்று கொழும்பு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி திலகசிறிவர்தன தெரிவித்தார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது, இந்த வருடம் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 100 வீதமாக அதிகரித்துள்ளது என்று அவர் கூறினார்.

கொலன்னாவைப் பகுதியிலேயே டெங்கின் தாக்கம் பெருமளவில் அதிகரித்துள்ளது. இந்த விடயத்தில் பொது மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று அவர் கோரியுள்ளார். (ச)

## கோல்டன் கீ நிறுவன முதலீட்டாளருக்கு நிவாரணத் திட்டத்தை செயற்படுத்துங்கள்
### உயர் நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு,ஏப்.6

கோல்டன் கீ நிதி நிறுவ னத்தில் நிதி முதலீடு செய்த வர்களுக்கு நிவாரணம் வழங்கு வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள செயற்பாட்டுத் திட்டத்தை உடனடியாக நடைமுறைப் படுத்துமாறு உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை மத்திய வங்கி நிதியச் சபைக்கு உத்தரவிட்டது.

இதன் பேரில் வைப்புப் பணத்தை இழந்து போயுள்ள, 3 லட்சம் ரூபாவுக்கு மேல் வைப்பு செய்துள்ள, சகல வைப்பீட்டா ளர்களுக்கும் சமமான கொடுப் பனவை விரைவில் வழங்க வேண்டும். கோல்டன் கீ நிதி நிறுவனத்துக்கு புதிய பணிப் பாளர் சபையை நியமிப்பதற் கும், தற்போது நடைமுறைப் படுத்தப்படும் லக்ஷ்மன், வட் டவல குழுவைக் கலைத்து மத்திய வங்கியின் கண்காணிப் பின் கீழ் புதிய பணிப்பாளர் சபை ஊடாக இயக்கவும் நடவ டிக்கை எடுக்கப்படும்.

இந்த செயற்பாட்டுத் திட் டத்தை பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், நீதியரசர் களான பீ. ஏ. ரத்நாயக்க, பிரிய சாத் டெப் ஆகியோரைக் கொண்ட நீதியரசர்கள் குழு

**கோல்டன் கீ நிதி நிறுவனத்துக்கு புதிய பணிப்பாளர் சபையை நியமித்து அந்த சபை எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதி பொறுப்புகளை ஆரம்பிக்க வேண்டும்.**

நடைமுறைப்படுத்த அனுமதி வழங்கியுள்ளது. புதிய பணிப்பா ளர் சபை எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதி பொறுப்புகளை ஆரம்பிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் முன்னாள் தலைவர் லலித் கொத்தலாவலை, சிசிலியா கொத்தலாவல உட்பட பணிப்பாளர்களுக்குப் பிணை வைக்கும்போது செய்து கொள் ளப்பட்ட இணக்கப்பாடும், பிணை நிபந்தனைகளை மீறுவதனால் அவர்களின் முழுச் சொத்துக் களைத் தடை செய்யும் நடவ டிக்கை எடுக்கப்படும் என்று உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இதற்காக பொலிஸ் அதிகாரி ஒருவரை நியமிக்கவும் இந்தத் திட்டத்தில் யோசனை தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச)

## திருமதி சவரிமுத்து திரேஸ் அன்னமேரி (தங்கமணி) அவர்களின்
## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நிறைவு நாளின் நினைவுநாள் இன்று

**06.04.2013**



மூத்தவளாய்ப் பிறந்தாய் - எதிலும்
முன்னுதாரணமாய் நடந்தாய்-அதிலும்
தங்கமணியாய்ப்
பலருக்கும் பலனளித்தாய்
பறந்தாய், திரிந்தாய் - இன்று
மறைந்தேவிட்டாய் - ஏனோ?
இறைவன் வகுத்த வழியே.

ஆண்டவர் மரித்த நாளிலே
நீயும் மரித்தாய் - அன்று
ஆண்டவரோடு அருகமர்ந்து
நீயும் வாழ்கின்றாய் - இன்று.

அனைவரோடும் அன்பாய்
நீயும் வாழ்ந்தாய் - அன்று
ஆண்டவரோடு இன்பமாய்
நீயும் வாழ்கின்றாய் - இன்று

இந்த உலகத்தில் அன்னமேரியாய்
நீயும் வாழ்ந்தாய் - அன்று
அந்த உலகத்தில் அன்னை மரியோடு
நீயும் ஆனந்தமாய் வாழ்கின்றாய் இன்று
அதுவே போதும் எங்களுக்கு
அன்றல்ல
நேற்றல்ல
இன்றல்ல
நாம் உன்னை
நினைக்காத நேரமுண்டோ?
இல்லை. இல்லவே இல்லை.

(34951)(10.6)

மலர்வு 19.07.1947 உதிர்வு 06.04.2012

"தாய் வீடு"
4ஆம் குறுக்கு வீதி,
பருத்தித்துறை.

உன் மறைவால்
உள்ளம் கலங்கி வாழ்கின்ற
உனது குடும்பத்தினர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
## அமரர் T.றொபேட்



ஆண்டொன்று ஆனாலும்
ஆறவில்லை உம் பிரிவுத்துயர்.
உணர்கின்றோம் எப்போதும்
உம் அன்பின் ஆழத்தை
மங்காத உம் முகத்தை
மறவோம் எம் மூச்சுள்ளவரை
வாழ்கின்றீர் எப்போதும் - எம்
வாழ்வோடு ஒன்றாகி.

இவரின் ஆன்ம
இளைப்பாற்றிக்காக
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

மலர்வு 08*03*1957 உதிர்வு 06*04*2012

இல. 18, 3 ஆம் குறுக்குத் தெரு,
பாஷையூர், யாழ்ப்பாணம்.
(38634)(10.6)

சகோதரிகள்,
மைத்துனர்கள்,
மருமக்கள்.

## மரண அறிவித்தல்
## அருளப்பு மரியதாஸ் (தங்கராசா)

(ஓய்வுபெற்ற முன்னாள் மாநகரசபை ஊழியர்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 43, 4 ஆம் குறுக்குத்தெருவை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட அருளப்பு மரியதாஸ் (04.04.2013) வியாழக் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளப்பு (இராசையா) - எலிசபேத் தம் பதியரின் மகனும், கபிரியேல் செல்லையா (அல்லைப்பிட்டி) தம்பதியரின் மருமக னும், கமலாவின் அன்புக் கணவரும், ஜெயபாலன் (பிரான்ஸ்), ஜெயந்தி, அன்ரன் ஜெயக்குமார் (பிரான்ஸ்), ரஜனி, அன்ரன் சுரேஸ் (சுவீடன்) ஆகியோரின் தந்தையும், மஞ்சு, மரியதாஸ், ஜெனி, ஜெயக்குமார், மஞ்சுளா ஆகியோரின் மாமனும் ஜெலுசா, ஜெலுசன், ஜெனிவன், டினுசன், சலோமி, தோமஸ், ஜெசிக்கா, ஜெறோசா, ஜெசூரன், சொப்யா ஆகியோரின் நேசமுள்ள பேர னும், யேசுதாசன் (ராசா), பேக்மன்ஸ் (ஜெயராசா), சூசைதாசன் (புகழ்), அருள்ராணி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை (08.04.2013) திங்கட் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கொட்டடி இலங்கை பெந்தகோஸ்தே சபை சேமக்காலையில் நல்லடக்கம் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

43, 4 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(35682)(2.6.7)

தகவல்: மனைவி,
பிள்ளைகள்.



இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள சீனாவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் சூகிங் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷவை சந்தித்தபோது...

# இனிமேல் மாவட்ட அடிப்படையில் ஆள்பதிவு திணைக்கள சேவைகள்

## ■ நேரில் சென்று தகவல்களை திரட்டுவர் அதிகாரிகள்

கொழும்பு,ஏப்.6

ஜி.சீ.ஈ உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டையை வழங்குவதற்காக மாவட்ட அடிப்படையில் ஆள்பதிவுத் திணைக்கள அதிகாரிகள் பாடசாலைக்கு நேரில் சென்று தேவையான தகவல்களைத் திரட்டும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதுகுறித்து சகல பாடசாலை அதிபர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு அமைய மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டைக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பாடசாலைகளுக்கு நேரடியாக சென்று ஆள்பதிவுத் திணைக்கள அதிகாரிகள் பெற்றுக் கொள்ளவுள்ளனர். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களில் பிழைகள் இருக்குமாயின் அந்த இடத்திலேயேஅவர்களால் வேண்டிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

இதன் மூலம் பாடசாலை அதிபர்கள் ஆள்பதிவுத்திணைக்களத் தலைமை அலுவலகத்துக்குச் செல்ல வேண்டியிராது என்று ஆள்பதிவுத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார்.

இந்த நடைமுறை ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கும் நடைமுறைப்படுத்தப்படும் என்று அவர் அறிவித்துள்ளார்.

அதனடிப்படையில் கல்முனை மாவட்ட பாடசாலைகளுக்கு ஆள்பதிவுத் திணைக்கள அதிகாரிகள் எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் வருகை தரவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# நடத்தப்பட்ட தாக்குதல் அராஜகத்தின் வெளிப்பாடு

## சுவாமிநாதன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்.6

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஜனநாயகத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலாகக் கொள்ளத்தக்க என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்ட மக்கள் சந்திப்பு நிகழ்வின் போது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள தாக்குதல் அராஜகத்தின் வெளிப்பாட்டை தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டு வருகின்ற இன்னல்கள் குறித்து இலங்கை, சர்வதேச மட்டத்தில் பலதரப்பட்ட விசாரணைகளுக்கு முகம்கொடுக்க நேர்ந்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் இவ்வாறான தாக்குதல்கள் நாட்டின் நற்பெயரை மேலும் பாதிக்கும்.

இந்த விடயங்களை கருத்தில் கொண்டு அரசு செயற்பட வேண்டும்.

இந்தத் தாக்குதலை மேற்கொண்டவர்களை உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.

இந்தத் தாக்குதலை மேற்கொண்டவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்காவிடின் தாக்குதலுக்கான முழுப் பொறுப்பையும் அரசே ஏற்க வேண்டிவரும்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் பல்வேறுபட்ட சந்தேகங்கள் எழுந்துள்ளதனால், அரசு உடனடியான விசாரணைகளை மேற்கொண்டு சட்டத்தை நிலை நாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சீன மொழியை கற்பிப்பதற்கு அரசு ஒத்துழைப்பு வழங்கும்

## பிரதமர் சொல்கிறார்

கொழும்பு,ஏப்.6

இலங்கை மக்களுக்கு சீன மொழியை கற்பிப்பதற்கு சீனா ஆரம்பிக்கவிருக்கும் உத்தேச வேலைத்திட்டத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசின் ஒத்துழைப்பு பூரணமாக உண்டு என்று பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்தார்.

மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்திருக்கும் உப ஆளுநர் டிங் ஷஓசின் உட்பட 15 பேரைக் கொண்ட சீனநாட்டுத் தூதுக்குழுவினர், பிரதமரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.



பொருளாதார நடவடிக்கைகள், அடிப்படை வசதிகளின் அபிவிருத்தி உட்பட பல்வேறு நடவடிக்கைகளுக்கு சீனாவின் ஒத்துழைப்பை கடந்த காலங்களைப் போன்றே தற்போதும் இலங்கை எதிர்பார்த்துள்ளது என்றும் பிரதமர் கூறினார். (ச)

# கைக்குண்டு வெடித்து 4 பேர் காயம்

கொழும்பு,ஏப்.6

பொலறுவையில் கைக்குண்டு வெடித்து நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பொலநறுவை, கதுருவெல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்தப் பிரதேசத்தின் வீடொன்றின் முற்றத்தில் கைக் குண்டு வெடித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் இரண்டு பெண்களும், இரண்டு ஆண்களும் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச)

# மூச்சுக்காற்றை பரிசோதித்தால் இனி நோயைக் கண்டறியலாம்

## ■ ஆய்வில் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.6

மனிதரொருவரது மூச்சுக்காற்றைப் பரிசோதனை செய்வதன் மூலம் அவருக்கு என்ன நோய் இருக்கிறது என்பதை அறிய முடியும் என்று சுவிட்சர்லாந்து நாட்டின் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

மூச்சு வெளியேறும் போது, அதிலிருந்து வெளிவரும் இரசாயனப் பொருள்களை ஆய்வு செய்த, ஜூரிக்கிலுள்ள ஸ்விஸ் ஃபெடரல் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜியின் ஆய்வாளர்கள், மூச்சுக்காற்றிலிருக்கும் பொருள்கள் ஒவ்வொரு தனி நபருக்கும் தனித் தன்மை வாய்ந்ததாக இருக்கும் என்று கண்டறிந்துள்ளனர்.

எதிர்காலத்தில் இரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனைகளுக்குப் பதிலாக, மூச்சுக்காற்று பரிசோதனை செய்தாலே போதும் என்கிற நிலை உருவாகக் கூடும் என்று அந்த ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

ஒரு நோயாளிக்கு எந்த அளவுக்கு மயக்க மருந்து கொடுக்கப்பட வேண்டும் என்பதை கணிக்க மூச்சுக்காற்று பரிசோதனை செய்தால் போதும் எனும் நிலை ஏற்படக் கூடும் என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

மூச்சுக்காற்றைப் பரிசோதனை செய்வதன் மூலம் ஒவ்வொருவரின் தனிப்பட்ட உடலியல் தன்மைக்கேற்ப, தனிப்பட்ட முறையில் மருத்துவ முறைகளை வடிவமைக்க முடியும் என்றும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ச)

# மீள் திருத்தத்துக்கு விண்ணப்பிக்கலாம்

## பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு

2012ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில் விடைத்தாள் மீள் திருத்தத்துக்கு மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எதிர்வரும் மேமாதம் 10ஆம் திகதி வரை மாணவர்கள் தங்கள் மீள் திருத்த விண்ணப்பங்களை அனுப்ப வைக்கலாம் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பாடசாலை பரீட்சார்த்திகள் அதிபர் மூலம் தங்களது விண்ணப்பத்தை அனுப்பிவைக்க முடியும். தனியார் பரீட்சார்த்திகள் நேரடியாக பரீட்சைகள் திணைக்களத்துக்கு தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் காலை 6 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
நந்தினி பாம்
இராஜ வீதி, கல்வியங்காடு. (35684) (45.6.7)

**காணி விற்பனைக்கு**

கோப்பாய் மத்தி, கோப்பாயில் நல்ல சுற்றாடலில் குறைந்த விலையில் 2பரப்பு 12 குளி காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0774285 777, 077 3561 322
(35688)(45.6.7)

☎ 0215671111
advt@uthayan.com

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

4½ பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. இடம் இல. 76, அரசடி றோட், யாழ்ப்பாணம். (IDEAL LODGE)
தொடர்பு: 071 4275 724 (35660) (45.6.7)

உ




வில்லிசைக் கலைமாமணி
டாக்டர் சிவஸ்ரீ சாம்பசிவ சோமாஸ்கந்த குருஜியின்
**ஆகமச் சித்திரங்கள் பாகம் 7**
(சிவமூர்த்தங்களும் சிவ தத்துவங்களும்)
**நூல் அறிமுக விழா**

| | |
|---|---|
| இடம் | : நல்லை ஆதீன மணிமண்டபம் |
| காலம் | : இன்று (06.04.2013) சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணி |
| தலைவர் | : பிரம்மஸ்ரீ ப.சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம்) சர்வானந்தமய பீடம். |
| அருள் உரை | : நல்லைக் குருமணி 2ஆவது குரு மஹா சந்நிதானம் |
| தலைமை உரை | : பிரம்மஸ்ரீ ப. சிவானந்தசர்மா |
| அறிமுக உரை | : நூல் ஆசிரியர் சிவஸ்ரீ சாம்பசிவ சோமாஸ்கந்த குருஜி (கனடா) |
| வாழ்த்துரை | : திருமதி சுகந்தினி ஸ்ரீ முரளிதரன் (இந்து நாகரிகத் துறை சிரேஸ்ட விரிவுரையாளர். யா/பல்கலைக்கழகம்) |
| நன்றியுரை | : நூல் வெளியீட்டாளர் சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள் (வல்வை) |

பிரதிகள் வழங்கல்
சிவாச்சாரிய குருமார்கள், கல்விசார் அறிஞர்கள், பல்கலைக்கழக மாணவர்கள். ஆலய பரிபாலன சபையினர்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நூல் வெளியீட்டாளர்
குடும்பத்தினர்.
(35687)(10.6.7)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



மயிலணி சுன்னாகத்தைச் சேர்ந்தவரும் யாழ்.மத்திய கல்லூரி புவியியல் ஆசிரியரும், சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரியம்மன் (வடலி அம்மன்) தேவஸ்தான பிரதம சிவாச்சாரியாருமான
**பிரம்மஸ்ரீ நாகேஸ்வரசர்மா சிவசங்கரசர்மா** அவர்கள்
அகில இலங்கை சமாதான நீதிவானாக 22.03.2013 அன்று மல்லாகம் மாவட்ட நீதிபதி, உயர்திரு ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்தமையைப் பாராட்டி மேன்மேலும் பல பதவிகள் பெற்று பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல அம்பிகையைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துபவர்கள் :- மயிலணி ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான நிர்வாக சபைத் தலைவர், நிர்வாக சபையினர். (35679)(6.7)

# கூகுள் தேடுபொறியில் நீங்கள் விரும்பிய படத்தை நிறுவ......

கணினி, கைபேசி என்று அனைத்துத் தொழில் நுட்பச் சாதனங்கள் வழியாகவும் இணையத்தளம் பயன் படுத்தும் அதிகளவானோர் செல்லும் முதல்தளம் கூகுள் தான்.





நாம் தினம் பயன்படுத்தும் இந்தக் கூகுள் தேடுபொறியில் உங்களுக்குப் பிடித்த புகைப்படத்தை நிறுவலாம். இதற்கு நீங்கள் கூகுள் குரோம் உலாவியை (Browser) பயன்படுத்தவேண்டும்.

அதனால் கூகுள் ஹோம் பேஜின் பின்புறத்திலுள்ள திரையை மாற்றி உங்களுக்குப் பிடித்தமான அழகிய படத்தை வைக்கமுடியும்.

முதலில் கூகுள் குரோம் நீட்சியை உங்களுடைய கணினியின் உலவியில்(Browser) நிறுவவேண்டும். இதை நிறுவ கூகுள் குரோம் நீட்சி பக்கத்துக்குச் சென்று அதை பதிவு செய்யவும்.

# ZTE அறிமுகப்படுத்தும் Grand Memo ஸ்மார்ட் கைபேசிகள்



சீனாவைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் ZTE நிறுவனமானது, Grand Memo எனும் தனது புதிய 'ஸ்மார்ட்' கைபேசிகளை அறிமுகப்படுத்துகின்றது.

இந்தக் கைப்பேசிகள் 1.7 ஏத் வேகத்தில் செயலாற்றல் Qualcomm Snapdragon S4 Pro Quad&Core Processor மற்றும் பிரதான நினைவகமாக 1GB RAM ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

மேலும் கூகுளின் Android 4.1 Jelly Bean இயங்குதளத்தில் செயற்படக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ள Grand Memo கைபேசியானது, 13 மெகாபிக்சல் உடைய கமராவை உள்ளடக்கியுள்ளதோடு சேமிப்பு நினைவகமாக 16GB கொள்ளளவையும் கொண்டுள்ளது. இவற்றின் பெறுமதி 432 அமெரிக்க டொலர்களாகும்.

# நீங்கள் பயன்படுத்தாத நேரத்தில் உங்களது கணினியை கண்காணிப்பதற்கு.........



உங்களது கணினியை வேறு நபர்கள் உபயோகித்தால், அவர்களது செயற்பாடுகள் குறித்து எளிதில் அறிந்து கொள்ளலாம்.

இதற்கு Key logger என்ற மென்பொருள் பயன்படுகிறது. கணினியில் ஒருவர் என்னென்ன செய்கிறார் என்ற அனைத்தையும் அறிந்து கொள்ளலாம்.

பெற்றோர் தங்கள் குழந்தைகளைக் கண்காணிப்பதற்கு இந்த மென்பொருளை உபயோகிக்கலாம். இந்த மென்பொருள் குறிப்பிட்ட ஒரு நேரத்துக்கு ஒருமுறை கணினியின் செயற்பாடுகளை ஸ்கிறீன்ஷொட் எடுத்து வைத்திருக்கும். அத்துடன் Chat History, History Log File என்பவற்றையும் சேமித்து வைத்திருக்கும்.

இதன் சிறப்பம்சங்கள்:


Record Each Keystroke: தட்டச்சில் அழுத்தப்படும் அத்தனை எழுத்துக்களையும் பதிவு செய்து வைக்கிறது.

Instant Chat Messages Recording: பேஸ்புக், Google Talk, Yahoo Messenger போன்றவற்றில் நீங்கள் சாட் பண்ணுபவற்றை அப்படியே பதிவு செய்கிறது.

Track Emails: கணினியில் இருந்து அனுப்பப்படும், பெறப்படும் மின்னஞ்சல்களைக் கண்காணிக்கிறது.

Monitor Websites: கணினியில் இருந்து உலவும் இணையத்தளங்களைக் கண்காணித்து பதிவு செய்து வைக்கிறது.

Review Every Downloaded File: தரவிறக்கம் செய்யும் ஒவ்வொரு File பற்றிய தகவல்களையும் பதிவு செய்கிறது.




# HP அறிமுகப்படுத்தும் Slate 7 அன்ரோயிட் ரேப்லட்

கணினி உற்பத்தியில் முன்னணியில் திகழும் நிறுவனங்களுள் ஒன்றான கூகுளின் அன்ரோயிட் இயங்குதளத்தில் செயற்படக்கூடிய Slate எனும் புத்தம் புதிய ரேப்லட்டை அறிமுகம் செய்துள்ளது. ரேப்லட் ஆனது Cortex A9 Dual Core Processor, பிரதான நினைவகமாக 1GB RAM என்பவற்றுடன் 8 GB சேமிப்பு நினைவகம் ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது.

மேலும் Android 4.1 Jelly Bean இயங்குதளத்தில் செயற்படக்கூடியதாகக் காணப்படும் இந்த ரேப்லட் ஆனது, 3 மெகாபிக்சல் உடைய கமரா ஒன்றையும், வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கென VGA கமரா ஒன்றையும் கொண்டதாகக் காணப்படுகின்றது.

# பேஸ்புக்கில் பேஜ் ஒன்றில் Threaded Comment வசதியை பெற்றுக் கொள்வதற்கு




முன்னணி சமூக வலைத்தளமான பேஸ்புக்கில் உருவாக்கக் கூடியதாகக் காணப்படும் பக்க அம்சத்தில் திரிபுற்ற கருத்துக்களை (Threaded Comment) தெரிவிக்கும் வசதி தற்போது அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இதன் மூலம் பேஸ்புக் பக்கம் ஒன்றில் பகிரப்படும் 'போஸ்ட்' ஒன்றுக்கு தெரிவிக்கப்படும் கருத்துரைகளுக்கு நேரடியாகவே அதன் கீழ் பதில் (Reply) தர முடியும்.

இந்தப் புதிய வசதியானது தற்போது வரையறுக்கப்பட்ட பேஸ்புக் பக்கங்களுக்கே கொடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் ஜூலை 10 ஆம் திகதிக்குப் பின்னர் செயற்படுத்த முடியாததாகவும் காணப்படுகின்றது.

இதேவேளை 10,000 இற்கு மேற்பட்ட 'லைக்' எண்ணிக்கையைக் கொண்ட பக்கங்களுக்கு இந்த வசதி சுயமாகவே செயற்படுத்தப்படுவதுடன் ஏனைய பக்கங்களுக்கு சில மாற்றங்களை மேற்கொள்ளவதனூடாக செயற்படுத்தக்கூடியவாறு காணப்படுகின்றது.

அவ்வாறு செயற்படுத்துவதற்கு பேஸ்புக் தளத்தினுள் உள்நுளைந்து, குறித்த பக்க பகுதிக்கு செல்லவும். அங்கு 'Edit page' என்பதை கிளிக் செய்து தோன்றும் மெனுவில் Manage Permissions என்பதைத் தெரிவு செய்யவும்.

அதன் பின்னர் தோன்றும் படிவத்தில் Replies என்பதைத் தெரிவு செய்து Save changes பொத்தானை அழுத்தவும்.

இப்போது அந்தப் பக்கத்துக்கான திரிபுற்ற கருத்துக்களைத் தெரிவிக்கும் வசதி வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டிருக்கும்.

உதயன் தொடர்புகளுக்கு

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' – மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, ஜோதி க் சென்டர் – மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை வடக்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'கோரி லைலக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அம்பரசன்' சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571.

## காவலர்களின் பட்டியல்

அந்தப் பண்ணையில் நிறைய மந்தைகள் இருந்தன. ஆயினும் பண்ணைக்காரனுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு கொள்ளையர்கள் அவற்றை ஏதோ ஒரு வழியில் களவாடிக் கொண்டே இருந்தார்கள். பண்ணைக்காரனுக்கு வேறு வழி தெரியவில்லை. அவனுக்குத் தோட்டத்தில் நிறைய வேலைகள் இருந்தன. அதனால் அல்லும் பகலும் விழித்திருந்து மந்தைகளைக் காப்பது என்பது முடியாத காரியம் . எனவே ஒரு காவலாளியைப் பணிக்கு அமர்த்தினான்.

காவலாளி கவனமாக மந்தைகளைப் பேணத் தொடங்கினான். இதனால் கொள்ளையர்களின் கைவரிசை குறையத் தொடங்கியது. பண்ணைக்காரனுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. காவலாளி தங்குவதற்கென்று பண்ணையில் வீடொன்றை அமைத்துக் கொடுத்தான்.

இன்னொரு முறை கொள்ளையிட முயன்ற ஒருவனை காவலாளி பிடித்துவிட்டான். இதற்குப் பிரதியுபகாரமாக காவலாளிக்கு ஒரு பஞ்சணையைப் பண்ணைக்காரன் பரிசளித்தான். சில நாள்களின் பின்னர் பண்ணைக்குள் புகுந்த ஓநாய்க் கூட்டத்தை காவலாளி தனியே சென்று விரட்டியடித்தான். இதற்குக் கைமாறாக காவலாளிக்கு ஓர் அழகிய பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்தான் பண்ணைக்காரன். காவலாளிக்கு எல்லா வசதிகளும் கிடைத்தன.

அதன் பின்னர் முன்னரைப் போன்று மந்தைகள் காணாமல் போகத் தொடங்கின. பண்ணைக்காரனுக்கு இது புரியாத புதிராக இருந்தது. வாரம் தவறாமல் காவலாளி பண்ணைக்காரரிடம் சென்று கடந்த வாரம் களவாடப்பட்ட மந்தைகளின் பட்டியலைக் கொடுப்பது வாடிக்கையாகிப் போனது. இப்படியே காவலாளி வாரா வாரம் வந்து கொண்டிருந்ததால், பண்ணைக்காரனுக்கு எரிச்சலும் ஆத்திரமும் மேலிட்டது.

''மந்தைகள் களவு போகாமல் இருப்பதற்காகத் தானே உன்னை வேலைக்கு அமர்த்தினேன். நீ என்னடாவென்றால் களவு போன மந்தைகளின் பட்டியலைத் தருகிறாயே தவிர அவற்றைத் தடுப்பதாக தெரியவில்லையே?'' என்று கேட்டான்.

அதற்குக் காவலாளி ''நான் காவல் காத்தாலும் எப்படியோ களவாடி விடுகிறார்கள். அதற்கு நான் ஒன்றும் செய்ய முடியாது.'' என்று அலட்சியமாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டான். இதனைக் கவனித்துக் கொண்டிருந்த பண்ணைக்காரனின் நண்பன் ''அவனை நீ காவலாளியாக மட்டும் வைத்திருந்திருக்க வேண்டும். அவனுக்கு வீடு, மனைவி, பஞ்சணை என்று வசதி வழங்கி சுக போக வாசியாக மாற்றிவிட்டாய். அதனால் தான் அவனால் தன்னுடைய பணியைச் சரிவரச் செய்ய முடியவில்லை.'' என்றுகூறினான். அப்போது தான் பண்ணைக்காரனுக்கு தான் செய்த தவறு புரிந்தது.

இதே போன்றுதான் யாழ்ப்பாணத்தில் பொலிஸாரின் காவல் காக்கும் திறனும் உள்ளது. வாரந்தோறும் செய்தியாளர்களை அழைத்து ''இந்த வாரம் இத்தனை லட்சம் களவெடுத்துவிட்டார்கள், போன வாரம் அத்தனை லட்சம் எடுத்தார்கள்'' என்று களவாடப்பட்ட பொருள்களின் விவரத்தைப் பட்டியலிட்டு கொள்ளைக்காரர்களின் கெட்டித்தனத்தை வெளிப்படுத்திக் கொள்கிறார்கள். மக்களின் காவலர்கள் தாமே என்பதை மறந்து, பட்டியல் போடும் ''கிளாய்க்'' வேலையை மட்டுமே பார்க்கிறார்கள் எனலாம்.

தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி மக்களின் இழப்புக்களைத் தடுக்கும் அக்கறையை கொள்ளைக்காரர்களை ஒடுக்குவதில் காட்டினால் வாரா வாரம் பொலிஸார் வெளியிடும் பட்டியல்களில் உள்ள தொகை மீதியாக குறைந்து விடுமே?

# பங்களாதேஷும் போர்க் குற்ற விசாரணையும்

போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும். ஆனால் இவ்வாறான விசாரணைகள் அரசியல் செல்வாக்குகளோ அல்லது அரசியல் அழுத்தங்களோ இன்றி சுயாதீனமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

மனிதப் படுகொலைகளும் பாலியல் வன்புணர்வுகளும் 42 ஆண்டுகளுக்கு முன்னர் பங்களாதேஷில் இடம்பெற்றன. இவை முன்னைய யூகோசிலோவியா, சூடான், றுவண்டா போன்ற நாடுகளில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகள் மற்றும் பாலியல் வன்புணர்வுகளை விட மிகவும் மோசமானவை. இந்த உலகம் இவ்வாறான இனப்படுகொலைகள் மற்றும் பாலியல் வன்புணர்வுகளை கவனிக்கத் தவறியது. இதனால் இவை இன்றும் தொடர்கின்றன.

பங்களாதேஷ் தற்போது தனது கடந்த கால பயங்கர அனுபவத்திலிருந்து வெளியில் வர முயற்சிக்கிறது. தனது நாட்டில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகள் தொடர்பாக பங்களாதேஷ் தற்போது கண்ணீர் விட்டாலும் கூட, இதனால் அந்த நாட்டின் பொருளாதாரம் என்பது அழிக்கப்பட்டுள்ளது என்பதே உண்மையாகும்.

கடத்தல், துன்புறுத்தல், பாலியல் வன்புணர்வு மற்றும் படுகொலைகள் போன்றவற்றில் ஈடுபட்ட மற்றும் இவற்றுக்கு உதவி புரிந்த மூன்று பேருக்கு போர்க் குற்றங்களுக்கான நீதிமன்றம் தண்டனை வழங்கியுள்ளது. இவர்களில் இருவருக்கு மரண தண்டனையும் மற்றையவருக்கு ஆயுட்காலத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. இதே போன்ற குற்றங்களில் ஈடுபட்ட மேலும் ஏழு பேர் மீது விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.

போர்க் குற்றவாளிகள் இருவருக்கு வழங்கப்பட்ட மரணதண்டனையை எதிர்த்து பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் ஆர்ப்பாட்டம் செய்துவருகின்றனர். போர்க் குற்றங்களுக்கான நீதி மன்றானது எவ்வளவு தூரம் நம்பகமாக விசாரணைகளை மேற்கொண்டிருக்கும் என்பது தொடர்பாக மக்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

**பங்களாதேஷ் உதயம்**

1971இல் பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் பிரியும் போது இடம்பெற்ற யுத்தத்தில் மக்கள் பல்வேறு பாதிப்புக்களைச் சந்தித்தனர். 1947இல் பிரிட்டன், இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கிய போது பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் பிரிவினைக்கான அடித்தளம் இடப்பட்டது. அதற்கு முன்னர் 1905 இல் பெங்காலி மொழியைப் பேசுகின்ற மக்களை'' இந்து மேற்கு வங்காளம்' மற்றும்'' முஸ்லிம் கிழக்கு வங்காளம்' எனவும் இருவேறு பிரிவுகளாக பிரித்தானிய அதிகாரி லோர்ட் கோர்சன் பிரித்தார். இது பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய இரு நாடுகள் வேறு வேறாகப் பிரிவதற்கு காரணமாகியது.

பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் முடிவில் இந்தியா முஸ்லிம் பாகிஸ்தான் மற்றும் இந்து இந்தியா என இரண்டாகப் பிரிந்த போது முஸ்லிம் பேசும் வங்காள தேசம் கிழக்கு பாகிஸ்தானாக மாறியது. கிழக்கு மற்றும் மேற்கு பாகிஸ்தான் மத ரீதியாக ஒன்றாக இருந்த போதிலும் மேற்கு பாகிஸ்தான் அதிகாரத்தை தனது கையில் எடுத்துக் கொண்டது. இவ்விரு பாகிஸ்தான்களும் இந்தியாவிலிருந்து 1600 கி.மீற்றர் தூரத்தால் பிரிக்கப்பட்டிருந்தது. கிழக்கு பாகிஸ்தான் தொடர்ந்தும் அடிமைப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில், இங்கு இடம்பெற்ற தேர்தல் ஒன்றில் கிழக்கு பாகிஸ்தானைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியற் கட்சி பெரும்பான்மை வெற்றியைப் பெற்றதையடுத்து அதனை மேற்கு பாகிஸ்தான் ஏற்க மறுத்தது. இதனால் இரு பாகிஸ்தானுக்கும் இடையில் யுத்தம் ஆரம்பமானது. இவ்விரு தரப்புக்களும் வார்த்தைகளால் கூறமுடியாத பல்வேறு போர் மீறல்களை மேற்கொண்டன. இவ்விரு தரப்புகளுக்கும் இடையில் இடம்பெற்ற போர் இராணுவ ரீதியாக இந்தியா தலையிட்டதை அடுத்து முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

**போர் காரணமான இழப்புக்கள்**

இந்த போரில் மூன்று லட்சம்பேர் வரையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். போர் முடிவடைந்ததை அடுத்து பல்வேறு விசாரணைகளும் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. தற்போதைய பங்களாதேஷ் அரசு மூன்று மில்லியன் மக்கள் கொல்லப்பட்டதுடன், 200,000 வரையானவர்கள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதாக கூறுகின்றது.

பங்களாதேஷின் முதலாவது பிரதமர் முஜிபுர் ரஹ்மான் 1975இல் இராணுவ வீரர்களால் படுகொலை செய்யப்பட்டார். இவரைப் படுகொலை செய்தவர்களில் ஒருவர் 2001இல் குற்றவாளியென நிரூபிக்கப்பட்டு மரணதண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்ட போதிலும் அவர் வேறு நாடொன்றில் வசித்ததால் அதற்கான தண்டனை வழங்கப்படவில்லை. தற்போது இவர் ரொரன்ரோவில் வாழ்கிறார். இவருக்கான அகதிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட போதிலும், மரணதண்டனை வழங்கப்பட்ட ஒருவரை கனடா அவரது நாட்டுக்குத் திருப்பி அனுப்புவதில்லை என்பதால் அவர் தொடர்ந்தும் கனடாவில் வாழ்கிறார்.

இதேபோன்று ரஹ்மானுக்குப் பிறகு இவரது இடத்தை நிரப்பிய ஜெனரல் ஒருவர் 1981இல் படுகொலை செய்யப்பட்டார். இதன் பின்னர் ரஹ்மானின் மகளான சேய்க் ஹஸீனா மற்றும் கொல்லப்பட்ட ஜெனரலின் மனைவி காலிடா ஸியா ஆகியோர் இரு தடவைகள் பிரதமர்களாக பதவிவகித்தனர். பின்னர் 2007இல் பங்களாதேஷின் ஆட்சியை இராணுவம் கைப்பற்றிக் கொண்டது. இதனால் ஷேய்க் ஹஸீனா மற்றும் காலிடா சியா ஆகியோர் மீது இலஞ்ச ஊழல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இருவரும் சிறையிலடைக்கப்பட்டனர்.

பின்னர் 2008இல் இடம்பெற்ற தேர்தலில் ஹஸீனா மீண்டும் வெற்றி பெற்று நாட்டின் பிரதமரானார். இவர் தனது தேர்தல் பரப்புரையின் போது வாக்களித்தது போன்று போர்க் குற்றங்களுக்கான நீதிமன்றம் ஒன்றை நிறுவி குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவதாக அறிவித்திருந்தார். அதனைத் தற்போது செயற்படுத்தி வருகிறார்.

இந்த நீதிமன்றின் தலைமை நீதிபதி பங்களாதேஷைச் சேர்ந்த பெல்ஜியத்தின் Brussels நகரில் வதியும் சட்டவாளர் ஒருவருடன் மின்னஞ்சலின் மூலம் தொடர்பு கொண்டு தீர்ப்பை வழங்குகிறார்.

இந்தவிசாரணையின்போது அனைத்து சாட்சியங்களின் வாக்குமூலங்களைக் கேட்பதற்கு முன்னர் தலைமை நீதிபதி தனது தீர்ப்பை வழங்க வேண்டிய நிலையிலுள்ளார். இவ் விசாரணையை மிகத் துரிதமாக முடிக்குமாறு அரசாங்கம் தன்மீது அழுத்தம் கொடுப்பதாக நீதிபதி தெரிவித்துள்ளார். சரிவர விசாரிக்காது நீதியை வழங்குவது முட்டாள்தனமானது. அரசு இவ்வாறான முட்டாள்தனமான நடவடிக்கையை மேற்கொள்கிறது என போர்க் குற்றங்களை விசாரணை செய்யும் தலைமை நீதிபதி தெரிவித்துள்ளார்.

போர்க் குற்றவாளிகள் எனக் குற்றம் சுமத்தப்பட்ட 10 பேரில் எட்டுப் பேர் இஸ்லாமியக் கட்சியைச் சேர்ந்தவர்களாவர். மீதி இருவரும் காலிடா சியாவின் கட்சியைச் சேர்ந்தவர்களாவர். இதனால் இவர்கள் மீதான வழக்குகள் மேற்கொள்ளப்பட்டு தண்டனை வழங்கப்படுவதால் பிரதமர் ஹஸீனாவுக்கு எதிரானவர்கள் இதனை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும். ஆனால் இவ்வாறான விசாரணைகள் அரசியல் செல்வாக்குகளோ அல்லது அரசியல் அழுத்தங்களோ இன்றி சுயாதீனமாக மேற்கொள்ளப்பட வேண்டும். அதாவது பழைய காயங்களை ஆற்றுவதற்குப் பதிலாக மேலும் புதிய காயங்களை ஏற்படுத்துவது போன்று விசாரணைகள் மேற்கொள்ளப்படாது ஆராய்ந்து அதற்கேற்ற படிமுறைகளின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

பங்களாதேஷ் உருவாவதை இஸ்லாமியக் கட்சி எதிர்த்திருந்தது. ஆனால் இங்கு இடம்பெற்ற இனப்படுகொலையில் இக்கட்சி ஈடுபடவில்லை எனக் கூறப்படுகிறது. போர்க் குற்றங்கள் புரிந்ததாக குற்றம் சாட்டப்படும் இஸ்லாமியக் கட்சி உறுப்பினர்கள் மீது சுயாதீனமான, நீதியான, நேர்மையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இக்கட்சி ஆதரவாளர்கள் கோருகின்றனர்.

முன்னைய யூகோசிலேவியா மற்றும் றுவாண்டாவில் மேற்கொள்ளப்பட்ட அனைத்துலக சுயாதீன போர்க் குற்ற விசாரணைகள் போன்று பங்களாதேஷில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என கோரப்படுகிறது.

தற்போதைய அனைத்துலக குற்றவியல் நீதிமன்ற விளக்கவுரையானது 2002ஆம் ஆண்டுற்குப் பிற்பட்டதொன்றாகையால் பங்களாதேஷில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும். கம்போடியா மற்றும் சியாராலியோன் போன்ற நாடுகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டது போன்று பங்களாதேஷில் குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரணை செய்வதற்கு சிறப்பு நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். ஆனால் இவ்வாறான சிறப்பு நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என பங்களாதேஸ் கோரிக்கை விடுக்கவில்லை.

ஏனெனில் கம்போடிய ஆணைக்குழுவின் ஆண்டுச் செலவானது 44 மில்லியன் டொலராகும். இதே போன்றதொரு பெரியளவிலான தொகையை செலவிடக் கூடிய பொருளாதார வலு பங்களாதேஷிடம் இல்லை.

உலகிலுள்ள வறிய நாடுகளில் ஒன்றான பங்களாதேஷில் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தக அமைப்புக்கள் சிறப்பாக இயங்கிவருகின்றன. அடுத்த சீனாவாக வரவேண்டும் என்ற இலக்கை வைத்து இவ்வாறான வர்த்தக அமைப்புக்களை பங்களாதேஷ் இயக்கி வருகின்ற போதிலும் தற்போது நாட்டில் எழுந்துள்ள எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் அரசியற் சூழலானது இந்த இலக்கு ஆபத்தைச் சந்தித்துள்ளதை காண்பிக்கின்றது.

(நன்றி: புதினப்பலகை)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** முக்கியமான விடயத்தில் சுமுக மானதீர்வு பெறுவீர்கள். மனதில் உற்சாகம், நம்பிக்கை பிறக்கும். தொழிலில், திட்டமிட்ட இலக்கை எளிதில் நிறைவேற்றுவீர்கள். பணப் பரிவர்த்தனை திருப்திகரமாகும். பணியாளர்களுக்கு சலுகைப்பயன் கிடைக்கும்.

**இடபம்:** நண்பரின் மாறுபட்ட விமர் சனத்தால், கவலை கொள்வீர்கள். சூழ்நிலைக் கேற்ப பொறுப்புணர்வுடன் செயற்படுவதால், நன்மை கிடைக்கும். பணவரவை முக்கிய செலவுக்கு பயன்படுத்துவது நல்லது.

**மிதுனம்:** சிலர் சுயலாபத்துக்காக, பணம் கடனாகக் கொடுக்க முன்வருவர். அவ சியமற்ற பணக்கடன் பெற வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத் தைப் பாதுகாப்பது நல்லது. சேமிப்பு பணம், செலவுக்கு பயன்படும்.

**கடகம்:** உங்களுக்கு அனுசரணையாக உதவுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக் கும். திட்டமிட்ட பணிகளை நிறை வேற்று வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும்.

**சிங்கம்:** உங்கள் மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். இயலாதவர்களுக்கு கருண்[illegible]துடன் உதவுவீர்கள். பணப் பரிவர்த்தனையில் முன்னேற்றம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு எதிர்ப்பாளரால் இருந்த தொல்லை விலகும்.

**கன்னி:** முக்கியமான பணி ஒன்றை நிறைவேற்ற வேண்டிய கட்டாய சூழ்நிலை உருவாகலாம். பிறரது விமர்சனத்தை பொருள்படுத்த வேண்டாம். தொழில், வியாபாரம் சுமாரான அளவில் இருக்கும். பிறர் பார்வையில் அதிக பணம் செலவு செய்ய வேண்டாம்.

**நாளை**

*பங்குனி-25 ஞாயிற்றுக்கிழமை 07.04.2013*
*திதி: துவாதசி பி.ப. 04.37 வரை*
*நட்சத்திரம்: சதயம் மு.இ. 08.35 வரை*
*சுபநேரம்: 09.07- 10.37 வரை*
*இராகுகாலம்: 04.37- 06.07 வரை*

**துலாம்:** தன்னைச் சார்ந்தவர்களின் அபிப்பிராயம் உணர்ந்து, கருத்து வெளியிடுவது நல்லது. தொழில், வியாபார நடைமுறை சீராக, சில சீர்திருத்தம் செய்வீர்கள். தகுந்த ஓய்வு, மனம் புத்துணர்வு பெற உதவும்.

**விருச்சிகம்:** உங்களை முன்னர் அவ மதித் துப் பேசியவர், தன்குறை உணர்ந்து அன்பு பாராட் டுவார். பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொள் வீர் கள். தொழில், வியாபார வளர்ச்சிப்பணி திட்ட மிட்ட படி நிறைவேறும். கூடுதல் பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** உங்கள் முன் இடம்பெறும் மாறு பட்ட நிகழ்வால், மனவருத்தம் கொள்வீர்கள். குடும்ப உறுப்பினரின் ஆறுதல் வார்த்தை நம்பிக்கை தரும். முக்கிய செலவுக்கு, சிறிதளவு பணக்கடன் பெறுவீர்கள்.

**மகரம்:** பொதுநல சிந்தனையுடன் செயற்படுவீர்கள். மாறுபட்ட மனம் உள்ளவரும், உங்களை மதிப்புமிக்கவராகக் கருதுவர். தொழில், வியாபாரம் செழித்து, வாழ்வில் மறுமலர்ச்சியை உருவாக்கும். பணவரவு திருப்திகரமாகும்.

**கும்பம்:** உங்களின் தனிப்பட்ட சிரமங் களை, பொது இடத்தில் நண்பரிடம் சொல்லி ஆறுதல் தேடவேண்டாம். எதிரியின் பார்வை, உங்கள் மீது இருக்கும். கவனம் தேவை. பணவரவை விட, செலவு அதிகரிக்கும்.

**மீனம்:** நண்பர், உறவினர்களின் நல்ல கருத்துக்களை ஏற்றுச் செயற்படுவீர்கள். உங்கள் மீதான நன்மதிப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை அதிகரித்து புதிய சாதனையை உருவாக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | | 5 | | | | 7 |
| 7 | | | 9 | 3 | | | 4 | |
| | 6 | 1 | 8 | | | | | |
| | 9 | | | 1. | | 6 | 5 | |
| 8 | 3 | | 2 | | 5 | | 1 | 9 |
| | 4 | 5 | | 8 | | | 7 | |
| | | | 1 | | 8 | 5 | 2 | |
| | 1 | | | 9 | 2 | | | 4 |
| 5 | | | | 4 | | | 9 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 8 | 7 | 9 | 4 | 3 | 2 | 6 |
| 7 | 6 | 4 | 2 | 3 | 5 | 9 | 1 | 8 |
| 2 | 9 | 3 | 1 | 6 | 8 | 4 | 8 | 7 |
| 4 | 2 | 5 | 6 | 8 | 9 | 7 | 3 | 1 |
| 8 | 1 | 9 | 3 | 5 | 7 | 2 | 6 | 4 |
| 6 | 3 | 7 | 4 | 1 | 2 | 5 | 8 | 9 |
| 5 | 4 | 6 | 9 | 2 | 1 | 8 | 7 | 3 |
| 9 | 8 | 1 | 5 | 7 | 3 | 6 | 4 | 2 |
| 3 | 7 | 2 | 8 | 4 | 6 | 1 | 9 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத் தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# நினைவஞ்சலிகள்

**முதலாம் ஆண்டு** | **6ஆம் ஆண்டு**

*1948.09.18* தோற்றம் *1956.04.06*
*2012.04.16* மறைவு *2007.02.25*







**பொன்னையா இராமநாதன்**
(முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாணப் பணிப்பாளர், தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை)

**இராமநாதன் பிரேமளாதேவி**

**எங்கள் வளவின் பூஞ்செடிகள் வாழ்கின்றன**

எங்கள் வளவின் பூஞ்செடிகள் ஒரு நாள் வாடின!
நாங்கள் ஆறாத் துயரில் ஆற்றுவார் இன்றி அழுதோம்!
அம்மம்மா வந்து ஆறுதல் சொன்னார்,
பூஞ்செடிகள் ஒன்றும் அழியவில்லையென்று.

அதன் கிளைகள் என் வீட்டில் செழித்து வளர்ந்திருக்க,
எப்படி மூலச் செடிகள் அழிந்ததாய் கொள்வீர்!
இது போல், அப்பாவின் கருவாய் அம்மாவின் கருமுட்டையாய்
அண்ணன் தம்பியாய் நாம் வளர்கின்றோம்.....

சிரஞ்சீவி அப்பாவின் அறிவுரைகள் அம்மாவின் அன்பு ஆகியவற்றுடன்
அவர்களின் அழியாத கருவாய் கருத்தாய் வளர்வோம்.......!
உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

**39, விதானையார் வீதி,**
**சுண்டுக்குளி,**
**யாழ்ப்பாணம்.**

(35676)(10.6.7)

**மகன்மார் மற்றும் குடும்பத்தினர்.**

**கடை விற்பனைக்கு**

ஸ்ரான்லி வீதி, வெலிங்டன் சந்தியில் அமைந்துள்ள கடை விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 711 1400
(35647)(5.6.7)

**விற்பனைக்கு**

ஐஸ்கிறீம் கடைக்கு உகந்த குளிர்சாதனப் பெட்டிகளும் ஐஸ்கிறீம் உற்பத்தி செய்யும் இயந்திரமும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 7115 419
(35653) (45.6.7)

**காணி விற்பனைக்கு**

கோப்பாய் கிளுவானை ஒழுங்கையிலுள்ள 5 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)
தொடர்பு: 077 3967 334
(35585) (45.6.7)

**கார் விற்பனைக்கு**

நல்ல நிலையில் தனிப்பாவனையிலுள்ள 13X X X X தொடர் இலக்கமுடைய MITSUBISHI LANCER உடன் விற்பனைக்கு
தொடர்பு: 077 9773 533
பார்வையிடும் நேரம் – 06.04.2013, 07.04.2013 } 7Am - 6 Pm
(35663) (45.6.7)

**விற்பனைக்கு**

20 X X X X மிற்சுபிசி டெலிக்கா வான் Full Sheet புதிதாக பெயின்ரிங் செய்யப்பட்டது. விலை: 10.60/= பேசித் தீர்மானிக்கலாம்.
071 221 4114
150, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**The Jaffna Education Centre**
**யாழ்ப்பாணக் கல்வி நிலையம்**
(சீயோன் தேவாலயத்துக்கு அருகில்)

Spoken English with Grammar
**சிங்களம்**
Short - hand Typing
ESOL, ILETS போன்ற பரீட்சைக்கு தயார் செய்துவிடல்.
ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன.
★ புதிய பிரிவுகள் இன்று ஆரம்பம் (06.04.2013)
ஆசிரியர்: இ.லோகநாயகி
தொ.பே. 077 6779 340 (35890) (45.6.7)

**TV கள் மலிவு விற்பனை**

யாழ். நகரில் எங்குமில்லாத மலிவு விலையில் SONY Wega Flat TV கள் 21"- 12000/= முதல், 25"- 13600/=, , 29"- 16000/=
Panasonic (பனசோனிக்) 29" -15000/= DTS அம்பிளிபயர், Box வகைகள், DVD -3000/=
தொடர்பு: 0770440570 (அப்பாஸ்)
சோனி ரேட் சென்ரர் (கொமர்சல் வங்கி எதிரில்)
56, K.K.S வீதி, சுன்னாகம்.
(35881)(2.6)

**கார் விற்பனைக்கு**

NISSAN FB 151 EX-SALOON. (WP JL) DOCTOR OWNED, 2001/2004 NOVEMBER, SUPER WHITE, BEINGE INTERIOR.
T.P. 077 7250 931
(35664) (45.6.7)

**வான் விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள 56 - XXXX இலக்கமுடைய டொல்பின் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 3001 119
(35649) (45.6.7)

**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பம், 28 வயது 12 இல் செவ்வாய், கிரக பாவம் 74, பரணி B.Com பட்டதாரி அரச பணி மணமகனுக்கு மணமகள் தேவை.
Senthuran2006@gmail.com
077 923 2455
(35540)(6.7.11)

**வீடு விற்பனைக்கு/வாடகைக்கு**

கோயில் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் வீடு விற்பனைக்கு அல்லது வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 231 9635
35672) (45.6.7)

**வவுனியாவில் கடை வாடகைக்கு உண்டு**

58 அடி நீளமும், 11¼அடி அகலமும் கொண்ட கடை (ஆதி விநாயகர் முன்பாக) வாடகைக்கு விடப்படும்.
★ தனியார் வகுப்புகள் மற்றும்
★ வெளிநாட்டு பயண ஒழுங்குகள் செய்வதற்கு பொருத்தமானது.
★ தரகர்கள் தேவையில்லை
முகவரி: இல. 66 1/1, இரண்டாவது மாடி, புகையிரத நிலைய வீதி, வைரவபுளியங்குளம், வவுனியா.
தொ.பே. 024 2220 112 (26207) (45.6.7)

## 20 இலட்சம் பேருக்கு தூக்கமின்மை நோய்

கொழும்பு,ஏப்.6

நாட்டின் சனத்தொகையில் இரண்டு மில்லியன் களுக்கும் மேற்பட்டோர் தூக்கமின்மை நோயால் பாதிக்கப்படுகின்றனர் என்று கொழும்பு ரிஜ்வே சிறுவர் மருத்துவமனையின் பணிப்பாளர் ரத்னசிறி.பீ.ஹேவகே தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

எதிர்பார்க்க இயலாத அளவுக்கு ஒரு தொகையினர் தூக்கமின்மை நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நோயால் சிறார்களும் பாதிப்படைகின்றனர்.

தூக்கமின்மை நோயால் சிறார்களுக்கு ஏற்படும் தாக்கங்கள் இனம் காணப்பட்டுள்ளன. தூக்கமின்மை நோயால் அவதிப்படும் சிறார்கள் சம்பந்தப்பட்ட மருத்துவர்களின் பரிசீலனைக்கு உள்ளாக்கப்படவுள்ளனர். அதனையடுத்து அவர்களுக்குத் தேவையான சிகிச்சை வழங்கப்படும். தூக்கமின்மை நோயால் அவதிப்படும் சிறார்கள் உரிய சிகிச்சைக்கு உள்ளாக்கப்படுவது மிகவும் அவசியமானது.-என்றார். (ச-22)




அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் யாழ்.மாவட்ட கிளை அங்குரார்ப்பணக் கூட்டம் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது சங்கத்தின் மூத்த உறுப்பினரும் வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்குப் பொறுப்பான இணைப்பாளருமான ஏ.அன்ரனிக்கு சங்க ஆலோசகர் ஏ.எல்.எம்.சலீம் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம். (ச-14)

# கூட்டமைப்பு- மு.காங்கிரஸ் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்

## தமிழ்-முஸ்லிம் உறவை கட்டியெழுப்ப இதுவே வழி என்கிறார் ஹாபீஸ் நஸீர்

திருகோணமலை,ஏப்.6

தமிழ் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அரசியல் வேறுபாடுகளை மறந்து, தமிழ்-முஸ்லிம் சமூகங்களுக்கு இடையிலான நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிப்பது அவசியமாகும்.

இவ்வாறு கிழக்கு மாகாண விவசாய, கால்நடை உற்பத்தி, சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடக்கு, கிழக்கில் தமிழ்-முஸ்லிம் மக்கள் ஆரம்ப காலம் தொட்டு அண்ணன்- தம்பி உறவையே பேணி வந்துள்ளார்.

இரு சமூகத்தினரும் ஒரே மொழியைத் தாய்மொழி யாகக் கொண்டவர்கள். அந்த மொழியிலேயே சிந்தித்து, செயற்படுபவர்கள்.

தமிழர்களுக்காக முஸ்லிம்களும், முஸ்லிம்களுக்காக தமிழர்களும் உதவியும் ஒத்துழைத்தும் வாழ்ந்து வந்துள்ளனர்.

புத்தளம் ஜும்ஆ பள்ளிவாசலில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டபோது அதற்காகப் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பியவர்கள் தமிழ்த் தலைவர்கள் தான்.

இவ்வாறு இரு சமூகத்தவர்களுக்குமிடையிலான நல்லுறவையும், ஒற்றுமையையும் சுட்டிக்காட்டி நிறைய உதாரணங்கள் உள்ளன.

தமிழ் மக்களின் அரசியல் போராட்டம் ஆயுதமயமானதைத் தொடர்ந்து இரு சமூகத்தினரதும் நல்லுறவையும், ஒற்றுமையையும் சீர்குலைக்கக் கூடிய சூழ்ச்சிகளும், சதிகளும் முன்னெடுக்கப்பட்டன. அதனால் சதியாளர்கள் பயனடைந்தார்கள்.



இரு சமூகத்தவர்கள் மத்தியிலும் ஐயங்களும், வீணான சந்தேகங்களும் உருவாகின. இதன் விளைவாகப் பலர் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவை மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மைகள். எனினும் இரு சமூகத்தவர்களும் மீண்டும் பழைய உறவு நிலைக்குத் திரும்ப வேண்டும். அவர்கள் தொடர்ந்தும் விலகி இருக்க முடியாது.

ஆகவே இரு சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமையையும், ஐக்கியத்தையும், புரிந்துணர்வையும் மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரஸும் அரசியல் பேதங்களுக்கு அப்பால் நின்று ஒன்றுபட்டு உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

அதற்கான கலந்துரையாடல்களை அடிமட்டத்திலிருந்து ஆரம்பிப்பது அவசியம். மொழி, கலை, கலாசாரம், பண்பாடு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பணிகளை ஆரம்பிக்க முடியும்.

இந்த விடயத்தில் இரு சமூகங்களினதும் அரசியல் தலைவர்கள் கவனம் செலுத்துவது அவசியம்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# எதிர்பார்த்த சம்பள உயர்வு எமக்குக் கிடைக்கவில்லை

## பெருந்தோட்டத் தொழிலாளர்கள் கவலை

நுவரெலியா,ஏப்.6

கூட்டு ஒப்பந்தம் மூலம் கிடைத்துள்ள சம்பள உயர்வு தொடர்பில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். எதிர்பார்த்த சம்பள உயர்வு கிடைக்கவில்லை என்று அவர்கள் கவலை தெரிவித்தனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் கூட்டு உடன்படிக்கையில் கைச்சாத்திடுகின்ற தொழிற்சங்கங்களும், முதலாளிமார் சம்மேளனமும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மேற்கொண்ட தீர்மானத்துக்கு அமைய நாளாந்த தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளம் 70 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் 2013 - 2014 ஆம் ஆண்டுகளுக்கான இந்த உடன்படிக்கையின்படி 380 ரூபா அடிப்படை சம்பளம் 70 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 450 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று மேலதிக கொழுந்துக்கான கொடுப்பனவு கிலோகிராமுக்கு 17 ரூபாவில் இருந்து 20 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

இதற்கமைய பெருந்தோட்டத் தொழிலாளர் ஒருவரின் நாளாந்த மொத்த சம்பளம் 515 ரூபாவிலிருந்து 620 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், பெருந்தோட்ட தொழிற்சங்க கூட்டமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகளும் முதலாளிமார் சம்மேளனப் பிரதிநிதிகளும் சம்பள உடன்படிக்கையில் நேற்றுமுன்தினம் மாலை கைச்சாத்திட்டனர்.

**தேயிலை உற்பத்தியின் வினைத் திறனை அதிகரிப்பதன் ஊடாகவே மேலதிக செலவை ஈடுசெய்ய முடியும் என்கிறார் முதலாளிமார் சம்மேளனத் தலைவர்**


இதேவேளை பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சம்பள உயர்வால் 52 பில்லியன் ரூபாவை மேலதிகமாகச் செலவிட நேரிட்டுள்ளது என்று முதலாளிமார் சம்மேளனம் அறிவித்துள்ளது.

அதனால் தமது சம்மேளனத்தின் கீழ் இயங்கும் 20 பெருந்தோட்ட நிறுவனங்கள் சவாலை எதிர்நோக்கியுள்ளன என்று அதன் தலைவர் தெரிவித்தார்.

தேயிலை உற்பத்தியின் வினைத் திறனை அதிகரிப்பதன் ஊடாகவே மேலதிக செலவை ஈடுசெய்ய முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ச)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
31 ★ 10 ★ 1946



மறைவு
16 ★ 04 ★ 2012

### சபாபதி பாஸ்கரன்

*என் அருமை அப்பாவே!*
*எத்தனை ஆண்டுகள் சென்றாலும்*
*உங்கள் பசுமையான நினைவுகள்*
*என்றும் எம்மை விட்டு அகலாது*

இன்று (06.04.2013) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

23,கண்ணாபுரம்,கொட்டடி,
யாழ்ப்பாணம்.
(35699)(5.6.7)
குடும்பத்தினர்.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம்,சுண்டிக்குளி,புனித யுவானியர் தேவாலயத்துக்கு அருகில் நிலப்பரப்பு 1 குளி 3.95 அளவு கொண்ட காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 163 6394, 075 508 5715

(35694)(5-6-7)

## கை மாறிவிட்டது

சாவகச்சேரி பஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள கடைக்கு அருகில் 02.04.2013 முக்கிய ஆவணங்களுடன் வைக்கப்பட்டிருந்த கைப் பை தவறுதலாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. தயவு செய்து எடுத்தவர்கள் அதில் உள்ள முக்கிய ஆவணங்களையும், திறப்பையும், அடையாள அட்டையையும் மட்டும் தந்துதவினால் போதும்.

தொடர்பு: 077 537 0979

(27810)(15-6-7)

## மீசாலை ஆலடிப்புலம் - நடராஜ முருகமூர்த்தி கோயில் மண்டலாபிஷேக பூர்த்தி விஞ்ஞாபனம்

மங்களகரமான நந்தன வருஷம் பங்குனி 25 (07.04.2013) ஞாயிற்றுக்கிழமை காலை அஷ்டோத்தர சங்காபிஷேகமும் அன்னதானமும் நடைபெறும்.
மாலை: **விஷேட மேளக்கச்சேரியும்,** தொடர்ந்து 8 மணிக்கு விஷேட கலை நிகழ்ச்சியாக வில்லுப்பாட்டும் இடம்பெறும்.
அகில உலக புகழ் "**வில்லிசைச் சக்கரவர்த்தி**" 'கலைமாமணி'
டாக்டர் - S.S. சர்மா (குருஜீ) அவர்களின் நல்லூர்/ **ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரின் "வள்ளி திருமணம்" வில்லிசை** நடைபெறும்.
அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

(35696)(45-6-7)
ஆலய அறங்காவலர்.

## காணி விற்பனைக்கு

வண்ணார்பண்ணை சிவன்கோயில், வைத்தீஸ்வராக் கல்லூரி ஈழநாடு Press ஆகியவற்றுக்கு அருகில் உள்ள வெள்ளாந்தெருவில் 2பரப்பு 13குளி காணி விற்பனைக்குண்டு.

This property is very close to grand bazar and ideal for business or residential use.
For details **contact (519) 433-3654**
**Contact in Jaffna: +94 21 221 2115 / +94 21 490 7069**

(35697)(5-6-7)

## கொலைச் சந்தேகநபர்கள் ஒரு வருடத்தின் பின் கைது

யாழ்ப்பாணம்,ஏப். 6

தலையில் கொட்டனால் தாக்கிக் கொலை செய்யப்பட்ட சம்பவமொன்று தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒரு வருடம் கழிந்த நிலையில் 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவில் மல்லாகம் கோணாப்புலம் முகாமைச் சேர்ந்த முத்துராசா சந்திர மோகன் என்பவர் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி தடியால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் அவர் உயிரிழந்திருந்தார். தலையில் தடியால் தாக்கப்பட்டதன் காரணமாகவே அவரது மரணத்தை சம்பவித்ததாக உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இதனை அடுத்து ஒரு வருட காலம் கழிந்த நிலையில் தெல்லிப்பழை பகுதியைச் சேர்ந்த 3 பேர் சந்தேகத்தின் பேரில் கடந்த பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர். சந்தேக நபர்கள் 3 பேரும் தடுப்புக் காவலில் மேலதிக விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-14)

## அச்சுவேலி பொலிஸ் நிலையம் புதிய இடத்துக்கு மாற்றம்

அச்சுவேலி பொலிஸ் நிலையம் புதிய மாடிக்கட்டடத்துக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது. பொலிஸ் நிலையம் செயற்படத் தொடங்கிய காலப் பகுதியில் இருந்து இதுவரை காலமும் பழைய வீடு ஒன்றில் செயற் பட்டு வந்தது.

தற்பொழுது முன்னர் செயற்பட்ட கட்டடத்துக்கு கிழக்கு புறமாக உள்ள மாடி கட்ட டத் துக்கு பொலிஸ் நிலையம் இட மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அச்சுவேலி பொலிஸ் நிலையத் துக்கு நிரந்தரமான சொந்தக் கட்டடத்தை நிறுவுவதற்கு பொலிஸ் திணைக்களம் முயற்சி எடுத்திருந்தது. எனினும் பொருத்த மான இடத்தில் காணி கிடைக்காமையினால் நீண்ட கால குத்தகை அடிப்படையில் இந்தக் கட்ட டம் பெறப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (ந-11)

## ஊட்டப் பாடசாலைகள் அபிவிருத்தி; சாவகச்சேரியில் நேற்று நிகழ்வுகள்



தென்மராட்சி,ஏப்.6

5000 ஊட்டப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் தென்மராட்சி கல்வி வலயத்தில் இரண்டாம் கட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 18 பாடசாலைகளிலும் அபிவிருத்திப் பணிகள் நேற்று வெள்ளிக்கிழமை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், தென்மராட்சி பிரதேச செய லர் திருமதி அ.சாந்தசீலன், வலயக் கல்விப்பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், சாவ கச்சேரி நகரசபை உறுப்பினர் ஆ.அலெக்ஸாண்டர், கோட் டக் கல்வி அலுவலர் கு.சிவா னந்தா உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

தெரிவு செய்யப்பட்ட 18 பாடசாலைகளிலும் தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆசிரிய ஆலோசகர்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் கல்வி அமைச் சின் ''இன்று மரக்கன்றுகளை நடுவோம், நாளை பயன் பெறுவோம்'' என்னும் திட்டத்தின் கீழ் பெற்றோருக்கு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (ஒ-9)


VACANCIES

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications upto 22.04.2013 from suitably qualified persons for the under mentioned posts on Temporary basis.

FACULTY OF SCIENCE

**Temporary Lecturer / Temporary Demonstrator** in Botany / Chemistry/ Physics / Zoology / Fisheries

**Temporary Lecturer / Temporary Instructor** in Mathematics / Statistics / Computer Science

**Temporary Instructor in Computing** (Computer Unit)

**Note: Candidates who are awaiting the results of the final degree examinations may also apply for the post of Temporary Demonstrator/ Temporary Instructor.**

| POST | SALARY SCALE |
|---|---|
| Temporary Lecturer | Rs.26,020/= p.m. (Fixed) |
| Temporary Demonstrator/Instructor | Rs.21,370/= p.m. (Fixed) |

In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self -addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna**.

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**Registrar,**
University of Jaffna,
Sri Lanka.
05.04.2013

(தி/8206) (6.7)


## ஒரு வருடத்தின் பின் அதிகரித்தது இலங்கை ரூபாவின் பெறுமதி

ஒரு வருட காலத்திற்குப் பின்னர் இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளது. கடந்த வருடம் ஏப்ரல் மாதத்திற்குப் பின்னர் முதல் முறையாக அமெரிக்க டொலருக்கு சமமாக இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளது.

இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று முன்தினம் 1.6வீதத்தால் அதிகரித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வேலைக்குச் சென்றுள்ள இலங்கை பணியாளர்கள் புதுவருடத்திற்கு தங்கள் வீடுகளுக்கு பணம் அனுப்பியமை மற்றும் ஏற்றுமதி வருமானம் என்பவையே ரூபாவின் பெறுமதி அதிகரிப்புக்கு காரணமாகும்.

கடந்த வருடத்தில் ரூபாவின் பெறுமதி 10.77 வீதத்தால் குறைந்திருந் தது. இன்று அமெரிக்க டொலர் ஒன்றின் இலங்கை பெறுமதி 125.97 ரூபாவாக காணப்படுவ தாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ந)

## வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி பத்து இலட்சம் ரூபா மோசடி

யாழ்ப்பாணம்,ஏப். 6

இத்தாலிக்குச் செல்லும் ஆசையில் 10 இலட்சம் ரூபா பணத்தைக் கொடுத்து ஏமாந்த சம்பவம் ஒன்று தொண்டமானாறு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கெருடாவில் தொண்டமானாறுப் பகுதியைச் சேர்ந்த ஒருவரிடம் இத்தாலி நாட்டுக்கு அனுப்புவதற்கு உதவுவதாகக் கூறி 10 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்று ஏமாற்றியுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வருடம் மே மாதத்துக்கும் ஓகஸ்ட் மாதத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் இடம் பெற்றதாக பணத்தை இழந்த நபர் கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவில் முறைப்பாடு கொடுத் துள்ளார்.

சந்தேக நபர் வேப்பங்குளம் பகுதியைச் சேர்ந்தவர் . இவர் தற்போது தலைமறைவாகி யிருப்பதால் இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-14)


தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவி சாதனை



எமது மகளிர் இல்லத்தில் வாழும்
சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மாணவி
செல்வி
**தேவதர்சினி தர்மகுலராஜா**
க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையில் சகல பாடங்களிலும் 9A எடுத்து எமது இல்லத்துக்கு பெருமை சேர்த்துள்ளார். அவரின் சிறந்த பெறுபேற்றுக்காக் உழைத்த அனைவருக்கும் நன்றி கூறுவதோடு, சிறந்த பெறுபேறு பெற்ற எமது இல்ல மாணவிக்கு எம் இனிய பாராட்டுக்கள் உரித்தாகுக.

ஆறு. திருமுருகன்
தலைவர்.

நிர்வாகசபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

(35711)(45.6.7)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# குற்றச் சந்தேகநபர்கள் 128 பேர் கடந்த வாரம் மட்டும் கைதாகினர்

யாழ்ப்பாணம்,ஏப்.6

யாழ். மாவட்டத்தில் கடந்த வாரம் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் 128 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம். எம்.ஜிப்ரி தெரிவித்தார்.

வாராந்த ஊடகவியலாளர்களுக்கான சந்திப்பு நேற்று யாழ். பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது. இதன்போது அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் கடந்தவாரம் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 12 பேரும், சந்தேக நபர்கள் 15 பேரும், குடிபோதையில் வாகனம் செலுத்திய 4 பேரும், ஏனைய குற்றச் செயல்கள் தொடர்பாக 37 பேரும் உள்ளடங்கலாக 68 பேர் கைது செய்யப்பட்டுள்ள னர்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் பியாணை பிறப் பிக்கப்பட்ட 6 பேரும் திருட்டுடன் தொடர்புடைய ஒருவரும், சட்டவிரோத மது விற்பனையில் ஈடுபட்ட 5 பேரும், வீதியில் விபத்துக்களை ஏற்படுத்திய 3 பேரும், அடித்துக் காயப்படுத்திய குற்றங்களுடன் தொடர்புடைய 19 பேரும், மது போதையில் குற்றம் புரிந்த 3 பேரும், அத்துமீறி வீட்டில் புகுந்த ஒருவரும், குடி போதையில் வாகனம் செலுத்திய 5 பேரும், சூழலை மாசடையக் கூடிய தாக வைத்திருந்த 5 பேரும், பொது இடத்தில் மதுபானம் அருந்திய 2 பேரும், சிறு குற்றவாளிகள் 11 பேரும், அரச உத்தியோகத்தரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்திய ஒருவரும், கொலை செய்வ தற்கு உடந்தையாக இருந்த ஒருவரும், பல மோசடிகளில் ஈடுபட்ட ஒருவரும் உள்ளடங்கலாக 60 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை, யாழ்ப்பாணம் ஆகிய பொலிஸ் பிரிவுகளில் கைது செய்யப்பட்ட 128 பேரும் நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-14)

# உதயன் மீதான தாக்குதலால் தமிழ் மக்கள் பெரிதும் அச்சம்

## சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப்.6

தமிழ் மக்களின் குரலாக ஒலித்துக்கொண்டிருக்கும் உதயன் பத்திரிகை மீதான தாக்குதல் தமிழ் மக்களை மிகவும் அச்சமடையச் செய்துள்ளது. தமிழர்கள் தமது சுதந்திரமான கருத்துக்களைக் கூறக் கூடிய சூழல் உருவாக வேண்டும்.

உதயன் பத்திரிகை மீதான தாக்குதலைக் கண்டித்து சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் மேற்கண்டவாறு தெரிவித்து கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்தக் கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சர்வதேச சமூகத்தினது பார்வை இலங்கை மீது அதிகமாகச் செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இந்தச் சூழலில், தொடர்ந்தும் வன்முறைச் சம்பவங்கள் நடத்தப்படுவது எதிர்காலத்துக்கு ஆரோக்கியமானதாக அமையாது. இவ்வாறான சம்பவங்கள் மேலும் மேலும் விரோதத்தை ஏற்படுத்துமே தவிர புரிந்துணர் வையோ, சமாதானத்தையோ ஏற்படுத்தப் போவதில்லை.

தமிழ் மக்களின் விருப்புக்களை வென்றெடுக்க வன்முறைகளைக் கட்டுப்படுத்தி ஜனநாயக நீரோட்டத்தில் அனைவரும் வாழக்கூடிய நிலையை அரசு ஏற்படுத்த வேண்டும். உதயன் மீது நடத்தப்பட்ட வன்முறை கண்டிக்கப்பட வேண்டியதுடன் ஈடுபட்டோர் நீதிக்கு முன் கொண்டு வரப்பட வேண்டும். இனி வரும் காலத்தில் இது போன்ற சம்பவங்கள் நிகழாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# தென்கொரியாவிலுள்ள இலங்கையருக்கு பாதுகாப்பு

## கருணாதிலக்க அமுனுகம சொல்கிறார்

கொழும்பு,ஏப்.6

தென் கொரியாவில் போர் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில் அங்குள்ள இலங்கையர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தென் கொரியாவில் இருக்கின்றனர். அவர்கள் தொடர்பிலான விவரங்கள் வெளிவிவகார அமைச்சில் இருக்கின்றன. அவர்கள் தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமும் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றது.

தென் கொரியாவில் போர் ஏற்படுமாயின் ஜனாதிபதி மற்றும் வெளிவிவகார அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நான் செயற்படுவேன்.

அது மட்டுமன்றி தொழிலுக்கு சென்று வேலைத்தலத்திலிருந்து பிறிதொரு இடத்துக்கு தப்பிச் சென்றவர்கள் தொடர்பில் எந்த விதமான தகவல்களும் வெளி விவகார அமைச்சிடம் இல்லை.- என்றார். (ச)

# வருடாந்த பெருந் திருவிழா

யாழ்ப்பாணம்,ஏப்.6

மண்கும்பான் வெள்ளைப் புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் திருவிழாவில், 13 ஆம் திகதி சனிக்கிழமை மாலை வேட்டைத் திருவிழாவும் இரவு சப்பரத் திருவிழாவும் இடம்பெறும்.

14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந)

# துர்க்காபுரம் இல்ல மாணவிக்கு 9ஏ



யாழ்ப்பாணம்,ஏப்.6

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவி செல்வி தர்மகுலராஜா தேவதர்சினி ஜி.சி.ஈ சாதாரணதரப் பரீட் சையில் சகல பாடங்களிலும் 9ஏ சித்தி பெற்றுள்ளார். இவர் இராமநாதன் கல்லூரி மாணவி ஆவார். (ம)

# 10 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை கடந்த வாரம் மோசடி

யாழ்ப்பாணம்,ஏப்.6

யாழ். மாவட்டத்தில் கடந்த வாரம் மட்டும் 10 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலைகள் மோசடி செய்யப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம். ஜிப்ரி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 3 ஆம் திகதி யாழ். நகர் விடுதியில் உள்ள கடை ஒன்றில் கணக்கில் பணம் வைப்பில் இல்லாத நிலையில் 4 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை கொடுத்து மோசடி செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம், உடுவில் பகுதியில் கடந்த முதலாம் திகதி வாகனம் வாங்குவதற்காக மானிப்பாய் வீதி, மருதனார் மடத்தைச் சேர்ந்த நபர் ஒருபர் 6 இலட்சம் ரூபா பெறுமதி யான காசோலையைக் கொடுத்து மோசடி செய்துள்ளார்.

சந்தேகநபர்கள் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-14)



புனரமைக்கப்பட்ட சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தினையும் அங்கு தென்னம்பிள்ளைகளை நகரசபை தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, உப தலைவர் கு. சதாசிவமூர்த்தி ஆகியோர் நாட்டுவதையும் காணலாம். (ந-9)

# சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு விளையாட்டு விழா துரையப்பா அரங்கில்

யாழ்ப்பாணம்,ஏப்.6

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவின் ஏற்பாட்டில் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

வீதியோட்டம், சைக்கிளோட்டம் உட்பட பாரம்பரிய விளையாட்டுக்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்கள் உட்பட பொதுமக்களும் இந்தப் போட்டிகளி பங்குபற்றலாம் என்று [illegible]க்கப்பட்டுள்ளது. (ஒ-14)

# ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஏப்.6

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை 2012 பெறுபேறுகள். நேற்று முன்தினம் வெளியாகியிருந்தன. அதனடிப்படையில் பாடசாலை ரீதியாக எமக்குக் கிடைத்த பெறுபேறுகள் வருமாறு:-

**தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி**

கி.விஷ்ணுகா- 9ஏ, ஜெ.மயூரன்- 8ஏசி, ஆ.கிருஷா- 8ஏசி, வா.விதுஷா-8ஏசி, லி.நேருஜா- 7ஏ2பி, ப.கௌதமன்-7ஏபிசி, ஜெ.பரணிதா- 7ஏபிசி, சு. சஷானா- 6ஏ2பிசி, த.மதுரன்- 6ஏ2பி, ஞா.டிலக்ஷன்- 5ஏபி2சிஎஸ், லோ.ஷயிதா- 5ஏபி2சிஎஸ், ம.லோஜினி- 4ஏ3பி2சி, ச.அபிசயனி- 4ஏ2பி3சி, ப.ஜஸ்வர்யா- 4ஏபி3சி, உ.வினோதினி- 3ஏ3பிசி2எஸ், இ.ஷண்ராஜ்- 3ஏ3பி2சி, ப.லக்ஷனா- 3ஏ2பி2சி2எஸ், தி.மிதிலா- 3ஏபி4சிஎஸ், ஆ.மதுரங்கன்-3ஏபி3சிஎஸ், ஷா.லக்ஜியா- 3ஏ3சி2எஸ், தி.ரிஷகேஷன்- 2ஏ3பி3சி, ஸ்ரீ.கபிலன்- 2ஏ3பி4சி, சோ.சோபிதன்- 2ஏபி3சி2எஸ், ஆ.நவராஜி- 2ஏ3பி4சி, ந.சிவரஞ்சினி- 2ஏபி2சி3எஸ், ம.பியூட்டிக்கா- 2ஏ3பி3சி, ஈ.நவிசா- 2ஏ2பி4சிஎஸ், ப.மிதுஷா- 2ஏபி3சி3எஸ், ஞா.கம்சினி-2ஏபிசி4எஸ், பா.மேதினி-2ஏ3சி4எஸ்.

**சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி**

**தமிழ் மொழி மூலம்**

ராஜதுரை சிவராமன்-9ஏ, டிலக்சனா பன்னீர்ச்செல்வம்-9ஏ, கிருஷ்ணவேணி யோகராஜா-8ஏபி, திரவரங்கன் வேணுராஜ்-8ஏசி, நிருஜா குமரவேல்-6ஏ2பி சி, ரவிச்சந்திரன் நிரோஜன்-5ஏ3பிசி, நிலக்சிகா தவராஜா-5ஏ3பிசி, கதிரவேல் சயந்தன்-5ஏ2பி2சி, ஜெகதீஸ்வரன் நேசக்குமாரன்-4ஏ3பிசிஎஸ், பங்கயா சுரேஷ்-3ஏ4பிசிஎஸ், உலகநாதன் ஸ்ரீரங்கநாதன் -3ஏ3பி2சிஎஸ், திருச்செல்வம் செந்தூரன்-3ஏ2பி4சி, வைத்தியநாதன் கஜன்-2ஏ4பி3சி, தர்மினி ராஜசுந்தரம்-2ஏ4பி3சி, பரமநாதன் பிரதீஸ்-2ஏ3பிசி3எஸ், ஜெயவாணி ரவிந்திரன்-2ஏ3பிசி2எஸ், சிவஞானம் சுகந்தன்-2ஏ2பி5சி, ராஜேந்திரம் நிரோஜன்-2ஏபி5சிஎஸ், சிவரஞ்சினி திருநாதன்-2ஏபி3சி2எஸ், சர்மிலா லக்ஸ்மணமூர்த்தி-2ஏ2சி3எஸ்.

**ஆங்கில மொழி மூலம்**

தாரணி திருநாவுக்கரசு-7ஏபிஎஸ், ருபிணி பாலச்சந்திரன்-6ஏ2பிசி, திருநாவுக்கரசு அனோஜன்-4ஏ3பிசிஎஸ், மதுவந்தி பாலச்சந்திரன்-4ஏ2பி2சிஎஸ், ஜசிந்தா சண்முகநாதன்-2ஏ4பி2சி.

**மானிப்பாய் மகளிர் கல்லூரி**

**ஆங்கில மொழி மூலம்**

தனுசியா கருணாகரன்- 8ஏபி, ஆரபி ஸ்ரீரங்கவாசன்- 8ஏபி, கம்சத்வனி குகலோயன்- 6ஏ2பிசி, ரிசாயா தயாபரன்- 4ஏ2பி3சி, நிரோஷா ராஜமோகன்- 3ஏ4பி2சி,

**தமிழ் மொழி மூலம்**

சர்மிளா பரமேஸ்வரன்- 9ஏ, நவநீதா சிவனேசநாதன்- 8ஏபி, அனிக்கா சிவபாலன்- 4ஏ2பி3சி, நிதர்சனா நகுலேஸ்வரன்- 4ஏபி3சி, கம்சப்பிரியா உதயகுமார்- 3ஏ2பி2சிஎஸ், கீர்த்தனா லோகேஸ்வரன்- 3ஏ2பி3சி, அபிரா அம்சபாலநமூர்த்தி- 3ஏபி5சி, கஸ்தூரி இந்திரன்-3ஏ3சி2எஸ்.

**யாழ். இந்து மகளிர் கல்லூரி**

தமயந்தி ரங்கநாதன்- 9ஏ, வேணுஜா நவரட்ணராஜா- 9ஏ, டிஜீர்த்தனா ஜெயானந்தராஜா-9ஏ, பிரதாஜினி தரநேசன்- 9ஏ, தனறோஜினி இராமலிங்கம்- 8ஏபி, தனுப்பிரியா பாலேந்திரன்- 8ஏசி, சுபலக்ஷ்மி செல்வராஜன்-(ஆங்கில மொழி மூலம்), பரணிகா சற்குணராஜா- 8ஏசி, சாம்பவி ஸ்ரீதரன்- 7ஏ2பி, கல்பனா விஜயகுமார்- 7ஏ2பி, சருண்ஜா சிங்கராஜா- 7ஏ2பி, ஸ்ரீசங்கமீரா ஸ்ரீஸ்கந்தராஜா- 7ஏ2பி, அனுத்திகா துரைராஜசிங்கம்-7ஏபிசி, விஷ்ணுகா கணேசலிங்கம்- 6ஏ3பி, சுபாங்கி பூபராஜா- 6ஏ3பி, டட்ஷாஜினி கணநாதன்- 6ஏ3பி, விஷாலினி கணேசநாதன்- 6ஏ2பிசி, சாருஷா ரட்ணகுமார்- 6ஏ2பிசி, பவிதா சிவலோகநாதன்- 6ஏ2பிசி, துஷாங்கி பாலச்சந்திரன்- 6ஏ2பிஎஸ், நிவின்ஷனா சுந்தரமூர்த்தி- 6ஏ2பிஎஸ், கௌதமி சுந்தரமூர்த்தி- 6ஏசி2எஸ்.

**நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்**

**தமிழ் மொழி மூலம்**

கி.சாய்ரூபன்- 9ஏ, க.மதனாகரன்- 9ஏ, சிறி.கார்த்திக்- 9ஏ, க.பூங்குன்றன்- 8ஏசி, வி. சத்தியப்பிரியன்-8ஏசி, த.அனோசன்- 8ஏஎஸ், கி.அபிரா- 8ஏஎஸ், ச.விதுர்ஷா- 8ஏஎஸ், நே.ராஜமனோகரி- 8ஏஎஸ், ர.செந்தூரன்- 7ஏ2பி, த. தினேஸ்- 7ஏபிசி, யோ.சஜந்தன்- 7ஏபிசி, பி.ராம்கி-7ஏபிசி, ச.சுதாகர்- 7ஏபிசி, சி.சுஜீபன்-7ஏபிசி, அலன்றொக்ஸி-6ஏ2பிசி, சி.கோகுலன்-6ஏ2பிசி, தி.நிருசன்- 6ஏ2பிசி, நா. துஷானி-5ஏ4பி, பா.ஆதர்சன்- 5ஏ2பி2சி, சி.தனுசன்-5ஏபி3சி, அ.அஜித்தா- 5ஏபி3சி.

**ஆங்கில மொழி மூலம்**

த.துவாரகா- 8ஏபி, லி. விதுர்ஷா-7ஏபிசி, ம. ஆரணி- 6ஏ2பிசி, பி.மயூரியா- 6ஏ2பிஎஸ்.

**உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி**

ரவீந்திரன் ராகவேந்திரன்-8ஏபி, விக்னேஸ்வரன் விதுஷன்-7ஏ2பி, கிரிதரன் அமிர்தவர்ஷன்-6ஏ2பிசி, பாஸ்கரன் நிஷாந்- 5ஏ3பிசி.

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**

பிரியங்கா கந்தசாமி-9ஏ, கஜானி கிருஷ்ணகுமார் -8ஏ பி, வராயினி சுப்பிரமணியம்-8ஏபி, ரம்யஜா சுபாஸ்கரன்-8ஏபி. (ந-253)

# மக்கள் வங்கி அதிக இலாபம் ஈட்டுவதற்கு அதிக வாடிக்கையாளர்களை இணைத்தவர்

## முகாமையாளர் பத்மநாதனை பாராட்டி உரை

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ்.பிராந்தியத்தில் மக்கள் வங்கி அதிக இலாபத்தை ஈட்டுவதற்கும் அதிகளவான வாடிக்கையாளர்களை இணைத்துக் கொள்வதற்கும் தனது சேவைக் காலத்தில் அயராது கடமையாற்றியவர் ஓய்வுபெற்ற யாழ்.பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன்.

இவ்வாறு மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் கே.சுசீந்திரன் தெரிவித்தார்.

கடந்த 38 வருடகாலமாக மக்கள் வங்கியின் சேவையாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதனுக்கான சேவைநலன் பாராட்டு விழா கடந்த 3 ஆம் திகதி கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு வாழ்த்துரை நிகழ்த்தும் போதே புதிய முகாமையாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் வங்கியின் உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமையாளர்கள் பலர் அர்ப்பணிப்பான சேவையை வழங்கியுள்ளார்கள். அந்த வகையில் கடந்த 38 வருடங்களாக வங்கியுடன் இணைந்து தனது முழுப் பங்களிப்பையும் வங்கியின் வளர்ச்சிக்காக பிராந்திய முகாமையாளராகக் கடமையாற்றிய பத்மநாதனும் வழங்கி இருந்தார். இவரது சேவையை ஏனைய வங்கியாளர்களும் பின்பற்றி வங்கியின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்கினோம் என்றார்.



இந்த நிகழ்வில் மக்கள் வங்கிக் கிளைகளின் முகாமையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் வாழ்த்துரையும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து மக்கள் வங்கி ஊழியர்களின் நிதி அனுசரணையுடன் சுகாதாரம், கல்வி மற்றும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களின் வாழ்வாதார உதவிகளை வழங்கும் நோக்குடன் யாழ்.பிராந்தியத்துக்கான மக்கள் வங்கி நிதியம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இதன் போது ஆரம்பக் கட்டமாக யாழ்.போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் விடுதியில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் மருத்துவத் தேவைகளுக்காக 50 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது. இந்த நிதி யாழ். போதனா வைத்தியசாலை புற்றுநோய் வைத்தியர் எஸ்.ஜெயக்குமரனிடம் கையளிக்கப்பட்டது. அத்துடன் வறுமைக்கோட்டுக்குட்பட்ட 3 பயனாளிக்கு வாழ்வாதார உதவிக் கொடுப்பனவாக தலா 20 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து மக்கள் வங்கியின் நடவடிக்கைகள் மற்றும் நடை முறைப்படுத்தப்படும் சமூக சேவைகள், வங்கியின் வியாபார நடவடிக்கைகள் என்பன உள்ளடக்கியதான காலாண்டு சஞ்சிகையாக 'யாழ்.மக்கள் வங்கியாளர்' எனும் சஞ்சிகையும் வெளியிடப்பட்டது. (எ-14)

# பருத்தித்துறை கோட்ட தமிழ்த்தின எழுத்தாக்கப் போட்டி முடிவுகள்

வடமராட்சி,ஏப்.6

பருத்தித்துறை கோட்ட மட்ட தமிழ்த்தினப் போட்டியில் எழுத்தாக்கப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

அப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களினதும், பாடசாலைகளினதும் விவரம் வருமாறு:-

**பிரிவு 1 தரம் 4,5**
**ஆக்கம் எழுத்து:**

மோ.ரமணன்- மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தி., பா.சாகித்தியா- பருத்தித்துறை வட இந்து ஆரம்பப் பாடசாலை, வி.துவாரகா- கெருடாவில் இந்து த.க.பா.

**பிரிவு-2, தரம் 6, 7**
**கட்டுரை வரைதல்**

செ.ஆர்த்திகா-வல்வெட்டித்துறை மகளிர் ம.வித்தி., பி.கிருஷாந்தினி- வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி, இ.நிதர்சனா- கொற்றாவத்தை அமெரிக்க மிசன் த.க.பா.

**பிரிவு-3, தரம் 8, 9**
**கட்டுரை வரைதல்**

செ.நிருஷாந்-ஹாட்லிக் கல்லூரி, ந.லக்சிகா-வட இந்து மகளிர் கல்லூரி, ச.தர்சனா- பருத்தித்துறை செ்ன். தோமஸ் றோ.க.மகளிர் பாடசாலை, ர.ரவீந்திரா-கொற்றாவத்தை அமெரிக்க மிசன் த.க.பா.

**பிரிவு-4, தரம் 10, 11**
**கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்**

வி.அஜிந்தன்-பருத் தித்துறை ஹாட்லிக் கல்லூரி, வ.துஷாளினி-தும்பளை சிவப்பிரகாச ம.வி., உ.சகானா பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

**பிரிவு 5 தரம் 12,13**
**தமிழியற் கட்டுரை, இலக்கியம் நயத்தல்**

வி.பிரவீன் -பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம், பா.பகீரதன்- பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, சு.அர்ச்சனா-தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்

**பிரிவு-4 தரம் 10,11**
**இலக்கணப் போட்டி**

பா.நர்மதா -பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, செ.சோவிசா- பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, கு.கீர்த்தனா- தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

**பிரிவு-5 தரம் 12,13**
**இலக்கணப் போட்டி**

க.கோபிகா -பருத்தித் துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, லோ.ஜெசோதா- பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, ஈ.சாந்தரூபன்- பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம்

**பிரிவு-5 தரம் 12,13**
**திறனாய்வுப் போட்டி**

சு.சுபகரி -பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரப் பாடசாலை, வி.றஜீபன்- பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம், க.கங்காதேவி- தொண்டமனாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயம்.

**பிரிவு 4 தரம் 10,11**
**குறுநாடக ஆக்கம்**

நா.பிரியா -தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம், வி.ஜதீஸ்- தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், செ.சரண்யா- வல்வெட்டித்துறை மகளிர் மகா வித்தியாலயம்

**பிரிவு-5 தரம் 12,13**
**குறுநாடக ஆக்கம்**

வி.பிரியங்கா -பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, க.அஜித்குமார்- பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம், செ.லக்ஷிகா- தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயம்

**பிரிவு-4 தரம் 10,11**
**கவிதை ஆக்கம்**

சி.சிந்துஜா-பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, லு.துஷாயினி- பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, ஜெ.ஜெயதீபா-வல்வெட்டித்துறை மகளிர் மகா வித்தியாலயம்.

**பிரிவு-5, தரம் 12,13**
**கவிதை ஆக்கம்**

தெ.நிரோஜன்-வல்வெட்டித்துறை சிதம்பராச் கல்லூரி, வி.சிவதரன்-பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம், நி.லோசிதா- தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியா லயம்.

**பிரிவு-4, தரம் 10,11**
**சிறுகதை ஆக்கம்**

க.கவீந்திரன்-வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி, ஜெ.விவேகா- பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம், வி.பவித்திரா- தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியால யம்.

**பிரிவு 5, தரம் 12,13**
**சிறுகதை ஆக்கம்**

ப.கலைமதி- தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம், க.மேரியஸ்ரினா-வல்வெட்டித்துறை ம்களிர் மகா வித்தியாலயம், பொ.நிசாந்-புலோலி புற்றளை மகா வித்தியாலயம். (ஒ-8)

# கண்காட்சிக்கு புகைப்படங்கள் அனுப்பலாம்

யாழ்ப்பாணம்,ஏப்.6

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் 'பெண்கள் சட்டகத்துக்கு வெளியே' எனும் தொனிப் பொருளில் புகைப்படக் கண்காட்சி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இந்தப் புகைப்படக் கண்காட்சி எதிர்வரும் ஜூலை மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை லயன்ஸ் வென்ற் சித்திரக் கூடத்தில் நடைபெறவுள்ளது. புகைப்படக் கண்காட்சியில் பங்குபெறும் போட்டியாளர்கள் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் புகைப்படங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

சாதாரண பொது வழக்கத்துக்குப் புறம்பான புகைப்படங்களே எதிர்பார்க்கப்படுகிறது. பெண்கள், பெண்களின் அனுபவங்கள் அவர்கள் சம்பந்தமான பிரச்சினைகள் என்பவற்றின் ஆக்க பூர்வமான கருத்தாழமிக்க புகைப்படங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. புகைப்படங்களை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் outoftheframe.si @ gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-13)

# பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்கள் வடக்கைப் போலவே கிழக்கிலும் இயங்கும்

## பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.6

வடமாகாணத்தில் பனை தென்னை வள கூட்டுறவு சங்கங்கள் இயங்குவது போன்று, கிழக்கு மாகாணத்திலும் சங்கங்கள் இயங்குவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பனை அபிவிருத்தி சபை தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் 19 சங்கங்களைச் சேர்ந்த 6 ஆயிரம் சீவல் தொழிலாளர்கள் உள்ளனர். இவர்களிடமிருந்து ஒரு நாளைக்கு 3 லட்சம் லீற்றர் கள் கிடைக்கின்றது.

இதேபோன்று கிழக்கு மாகாணத்திலும் பனை, தென்னை சீவல் தொழிலாளர்களைக் கொண்டு சங்கங்கள் அமைப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பாக மட்டக்களப்பு, மாங்காடு, பட்டிருப்பு, வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களில் அண்மையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

சங்கத்துடன் இணைந்தால் தொழிலாளர்கள் அனைவருக்கும் தொழில் வழங்கப்படும். சங்கத்தில் இணைந்தால் தொழில் காலங்களில் விபத்து ஏற்பட்டால் 10 ஆயிரம் ரூபாவும், மரணம் ஏற்படும் பட்சத்தில் குடும்பத்தினருக்கு 20 ஆயிரம் ரூபாவும் உடனடியாக பணமாக வழங்கப்படும்.

மதுவரி திணைக்களத்தினூடாக தொழிலாளர்களுக்கு வழங்கப்படவுள்ள அனுமதிப் பத்திரங்களுக்கான செலவினையும் இதர செலவுகளையும், குத்தகை ஒப்பந்தகாரரே பொறுப்பேற்க வேண்டும். கள்ளு விற்பனை வீழ்ச்சியடையும் போது தேங்கி நிற்கும் கள்ளிற்கு தொழிலாளர்கள் பொறுப்பேற்கமாட்டார்கள். ஒரு போத்தல் கள்ளின் கொள் விலை 57 ரூபாவாக வழங்குதல் போன்ற தொழில் நடைமுறைகள் கிழக்கிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்று தெரிவித்தார். (ந-13)

# வசந்தவிழா போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப்.6

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வலி.வடக்கு கலாசாரப் பேரவையால் வசந்தவிழா பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 16ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு சந்திரமௌலீஸ்வரர் ஆலய முன்றிலில் இந்தப் போட்டிகள் நடைபெறும்.

தயிர்முட்டி உடைத்தல், போர்த் தேங்காய் அடித்தல், மரதன், கைக் கொடிச் சவாரி, பலம் பார்த்தல் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்தப் போட்டிகளில் தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்டவர்கள் கலந்துகொள்ளலாம்.

போட்டிகளில் பங்கு பற்றுபவர்கள் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்க முடியும் என கலாசார பேரவைத் தலைவர் அறிவித்துள்ளார். (ந)

# தொழில்துறை முயற்சி வழிகாட்டி நூல் பெறலாம்

யாழ்ப்பாணம், ஏப்.6

இலங்கையில் தொழில் துறை முயற்சிகளில் முதலீடு செய்பவர்களுக்கான வழி காட்டி நூல் வெளிவந்துள்ளது.

தொழில் முயற்சிகளில் ஈடு படுபவர்களுக்கும், ஈடுபட ஆர்வம் உள்ளவர்களுக்குமான வழிகாட்டியாக இந்த நூல் அமைந்துள்ளது.

இந்த நூலை யாழ்ப்பாணம், கண்டி வீதியில் அமைந்துள்ள இலங்கை முதலீட்டுச் சபையின் வடமாகாண காரியாலயத்தில் இலவசமாகப் பெறலாம் எனப் பிரதிப் பணிப்பாளர் ஆர்.ஜெயமனோன் தெரிவித்துள்ளார். (ந)

# பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு யாழ். மாவட்டத்தில் பற்றாக்குறை

யாழ்ப்பாணம்,ஏப். 6

யாழ். மாவட்டத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ஆளணிப் பற்றாக்குறை நிலவுகின்றது என்று யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.எம் ஜிப்ரி தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் தற்போது கடமையில் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலர் நீதிமன்றம், ஆளுநர் அலுவலகம் மற்றும் அரச நிறுவனங்களில் பாதுகாப்புக் கடமைகளில் உள்ளனர்.

தற்போது இருக்கக் கூடிய ஆளணியைக் கொண்டு இலகுவாகக் கடமைகளைச் செய்ய முடியாதுள்ளது.

மக்களுக்கு உரிய நேரத்தில் சேவைகளை வழங்க பொலிஸ் உத்தியோகத்தர்கள் மேலதிகமாகத் தேவையாக உள்ளனர்.- என்று மேலும் கூறினார். (ம-14)

# வறியோருக்கான கொடுப்பனவு

கொழும்பு, ஏப். 6

பஸ் மற்றும் ரயில் நிலையங்களில் நடமாடித் திரியும் மிக வறியவர்களுக்கான கொடுப்பனவு அலரி மாளிகையில் கடந்த 20 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் வழங்கப்பட்டது.

இந்தக் கொடுப்பனவைப் பெறாதவர்களின் தலா 3 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் யாழ்.மாவட்ட செயலக சமுர்த்தி கிளைக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதாக சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இந்தக் கொடுப்பனவை பெறாதவர்களான அனுமுத்துகே செல்ரன், ஏ.எச்.எம். சனும், வை.கர்மான்திரான் , டபிள்யூ செல்வக்குமார், தே.கிருஷ்ணகுமார், எல். நிமல்சிறீ, எஸ்.லெப்பை, ஜே.மோகனதாஸ், ஜே.இராஜநேசன் ஆகியோர் தங்களுக்கான காசோலையை அடையாள அட்டையை காண்பித்து யாழ். மாவட்ட சமுர்த்தி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பொதுக்கூட்டம்

யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பொதுக்கூட்டத்தில் சகல பெற்றோர்களையும் கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார். (ந)

# உணவகங்களின் தரத்தை மேம்படுத்த உடன்படிக்கை

## யாழ்.மாநகர சபையினர் – உணவக உரிமையாளர்கள் கைச்சாத்து

யாழ்ப்பாணம்,ஏப். 6

உணவு கையாளும் நிலையங்கள், உணவு விடுதிகள், சிற்றுண்டிச்சாலைகள், வெதுப்பகம், உணவு உற்பத்தி நிலையங்களின் தரத்தை மேம்படுத்துவது குறித்த நல்லெண்ண உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

யாழ். மாநகர சபையினருக்கும் உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுக்கும் இடையில் நேற்று வெள்ளிக்கிழமை இந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இது தொடர்பான கூட்டத்தில் மூன்று பிரிவுகள் வகுக்கப்பட்டன.

முதலாவது 'அ' பகுதியில் உரிமத்தைப் பெற்றுக் கொள்ளல், சுற்றுப்புறத்தையும் வடிகால்களையும் சுத்தமாக வைத்திருத்தல், கலப்படமற்ற உணவுகள், உணவு தயாரிப்பதற்கான பொருள்களை களஞ்சியப்படுத்தல், பூச்சிகள், தூசிகளில் இருந்து உணவுகளைப் பாதுகாத்தல், தொற்று நோய்கள் பீடிக்கப்பட்டவர்களை வேலையில் இணைத்துக் கொள்ளாமை, எந்த நேரத்திலும் முதல்வர், ஆணையாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் பரிசோதனைக்கு ஒத்துழைத்தல், உற்பத்தியிலும் விநியோகத்திலும் ஈடுபடும் தொழிலாளர்களுக்கான மாநகர மருத்துவ அடையாள அட்டை பெற்றுக் கொள்ளல், புகைத்தலை முற்றாகத் தடை செய்தல் போன்ற விடயங்கள் குறித்து தெரிவிக்கப்பட்டன.

பகுதி 'ஆ' வில் உணவு விடுதிகளில் இருந்து உணவு கொண்டு செல்லும் போது மாநகரசபை அங்கீகாரம் பெற்றுச் செயற்படுதல், கட்டடத்தை காற்றோட்டமும் வெளிச்சமும் உள்ளதாக வைத்திருத்தல், ஆண்டுக்கு இரு தடவை சீலிங்குக்குத் தீந்தையிடுவதுடன் தேநீர், கோப்பி, பால் தயாரிக்கும் இடம் மாபிள்கற்களால் அமைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்தல், கட்டடத்தில் எலி மற்றும் கொறிப்பான்கள் புகாத வகையில் பாதுகாத்தல், சகல பணியாளர்களுக்கும் உணவு கையாளுதல், பரிமாறுதல், வாடிக்கையாளர்களுடன் நல்லுறவைப் பேணுதல் போன்ற விடயங்கள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

பகுதி 'இ' யில் போதிய வடிகால் வசதிகளை ஏற்படுத்துதல், கழிவு அகற்றலுக்கு உரிய மூடியுள்ள குப்பைத் தொட்டி, போதிய மலசலகூட வசதிகள் ஏற்படுத்தல் போன்ற விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

இந்த விடயங்கள் குறித்து இரு சாராரும் உடன்படிக்கை செய்துள்ளனர். இருதடவை அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் குற்றங்கள் இனங்காணப்பட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டால் உரிமத்தை நிரந்தரமாக இழப்பார்கள் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த நல்லெண்ண உடன்படிக்கையில் முதல்வர், ஆணையாளர், நிலையங்களின் உரிமையாளர்கள் கைச்சாத்திட்டனர். (ம-7)

## உடுவில் கோட்டத்தில் 3 பாடசாலைகள் தெரிவு

வலி.வடக்கு, ஏப்.6

மஹிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் ஆரம்பப் பாடசாலைகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஐயாயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு உடுவில் பிரதேச கல்விக் கோட்ட மட்டத்தில் உள்ள மூன்று பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம், சுன்னாகம் ஸ்கந்தவரோதய ஆரம்பப் பாடசாலை மற்றும் சுன்னாகம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை என்பனவே தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளாகும்.

இந்தப் பாடசாலைகளுக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தலா ஐந்து லட்சம் ரூபா நிதியும் உடுவில் பிரதேச செயலகம் ஊடாக வழங்கப்பட்டுள்ளது என்று மேலும் கூறப்பட்டது. (ம-86)

## அங்கத்தவர்களுக்கு தேவையறிந்து உதவி

வலி.வடக்கு, ஏப்.6

அங்கத்தவர்களின் அங்கத்துவப் பணக் கொடுப்பனவுகளிலும் பார்க்கக் கூடிய உதவிகளை அங்கத்தவர்களுக்கு தேவை அறிந்து வழங்கி வருவதாக உடுவில் பிரதேச பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோர் தெரிவித்தனர்.

உடுவில் பிரதேச செயலக வளாகத்தில் இயங்கும் இந்தப் பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் கடந்த ஆண்டில் ஊழியர்களுக்கான பல்வேறு சேவைகளையும் வழங்கியுள்ளது.

வைத்திய உதவிகளை அங்கத்தவர்கள் பெற்றுக் கொள்ளும் வகையில் 12 பேருக்கு இருபத்தொன்பதாயிரத்து முந்நூறு ரூபாவும் மரண உதவிகள் கொடுப்பனவாக 12 பேருக்கு 70 ஆயிரத்து 600 ரூபாவும் வழங்கப்பட்டது.

அங்கத்தவர்களின் பிள்ளைகளின் உயர் கல்விக்கான உதவித் தொகையாக இரண்டு பிள்ளைகளுக்கு ஆறாயிரம் ரூபாவையும் வழங்கியுள்ளதாக நிதியத்தின் தலைவர் சே.இராசவல்லவன், செயலாளர் ப.மகேந்திரதாசன் ஆகியோர் தெரிவித்தனர். (ம-86)

## பிரதேச மட்ட இலக்கு நோக்கிய கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஏப். 6

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட துறை சார்ந்த திணைக்களங்களதும் மற்றும் பிரதேச செயலக வெளிக்கள உத்தியோகத்தர்கள் பங்கு பற்றிய விளைவுகள் மற்றும் இலக்கு நோக்கிய பிரதேச மட்ட திட்டமிடல் கருத்தரங்கு செயலமர்வு கடந்தவாரம் இடம்பெற்றது.

இந்தக் கருத்தரங்கில் சேவை வழங்கலை விருத்தி செய்தல், வீடுகள் மற்றும் சார்புடைய வசதிகளை விருத்தி செய்தல், கல்விசார் அபிவிருத்தி, வறுமை ஒழிப்பு, சுகாதார அபிவிருத்தி போன்ற இருபத்து இரண்டு முக்கிய துறைகள் குறித்து திணைக்களத் தலைவர்களுடன் கலந்துரையாடப்பட்டது.

நல்லூர் பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன், உதவிப் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

திணைக்களத் தலைவர்களுடன் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் முன்னுரிமை ஒழுங்கில் பட்டியலிடப்பட்டு தொடர்ச்சியாக ஐந்து வருடங்களுக்குச் செயற்படுத்தப்படவுள்ளது. (ம-7)




சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 37 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கைதடி நவீல்ட் பாடசாலைச் சந்தியில் (ஏ-9 வீதியில்) கழகத்தினால் அமைக்கப்படவுள்ள பஸ் தரிப்பிடத்துக்கான அடிக்கல்லை சர்வதேச லயன்ஸ் கழக 3061 மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.எஸ்.தங்கராஜா நடுகிறார். (ம-9)

## யாழ்.கடற் பிரதேசங்களில்

# கடற்பாசி வளர்ப்பை மேற்கொள்ளத் திட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.6

யாழ்.மாவட்டத்தில் கடற்பிரதேசங்களில் கடற்பாசி வளர்ப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

'திவிநெகும' வாழ்வெழுச்சித் திட்டத்தின் ஊடாகத் தேசிய நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபையின் வழிகாட்டலின் கீழ் கடற்பாசி வளர்ப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்த கடற்பாசி வளர்ப்புத் திட்டம் கடந்த 2011 ஆம் ஆண்டு புங்குடுதீவு கடற்பிரதேசத்தில் பரீட்சிக்கப்பட்டது. நீரில் அதிக உவர்த் தன்மை மற்றும் கூடுதலான வெப்பநிலை காரணமாக கடற்பாசி உற்பத்தித் திட்டம் வெற்றியளிக்காது போனது.

தற்போது தேசிய நீரியல்வள அபிவிருத்தி அதிகார சபையின் வழிகாட்டலில் பட்டதாரி பயிலுநர்கள் மற்றும் பிரதேச செயலர்கள் இணைந்து இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தவுள்ளனர்.

இதற்காகப் பயனாளி ஒருவருக்கு 3 ஆயிரத்து 600 ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடற்பாசியை வடமராட்சிப் பகுதிகளில் பெருங்கடற் பகுதிகளில் வளர்ப்பதற்கான சூழல் இல்லை. ஆழம் குறைவான கடற்பகுதிகளும் அலையோட்டம் அற்ற கடல் பகுதிகளுமே கடற்பாசி உற்பத்திக்கு உகந்த இடங்களாகும்.

– அதனடிப்படையில் யாழ். குடாப்பகுதி, தீவுப் பகுதி ஆகிய கடற்பகுதிகள் பாசி வளர்ப்புக்கு ஏற்ற பகுதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அதிகமாக மட்டக்களப்பு கடற்பகுதிகளில் கடற்பாசி வளர்ப்பு கூடிய வெற்றியைப் பெற்றுள்ளது. அந்தப் பகுதிகளில் இருந்து தாய்த் தாவரத்தை இங்கு எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடற்பாசி என்பது தாவர இனத்தைச் சேர்ந்தது. இவற்றின் தண்டுப் பகுதியைக் கடலில் மிதக்க விடும் பட்சத்தில் அது மூன்று மாத காலத்தில் வளர்ச்சி பெற்றுவிடும் என்று கூறப்படுகிறது.

கடற்பாசி இனம் யாழ்.மாவட்டத்தில் முதன்முதலாக பொருளாதார உற்பத்திக்காக வளர்க்கப்படவுள்ளது. கடற்பாசியைப் பிரித்தெடுத்து உணவுப் பொருள் சுவையூட்டல், ஜெலி, ஐஸ்கிறீம், முகப்பூச்சு ஆகியவற்றுக்கு மூலப்பொருளாக உபயோகப்படுத்த முடியும்.

இலங்கைப் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு கடற்பாசி வளர்ப்பு உதவும் என நம்பப்படுகின்றது. இயற்கையானவை என்பதால் அனேகமாக வேறு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய முடியும் என்றும் கூறப்பட்டது. (ம-13-17)

# சமூகத்துக்குத் தேவையானவற்றை நீங்களே தீர்மானித்துச் செய்யுங்கள்

## பட்டதாரிகளுக்கு அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப். 6

இந்த சமூகத்துக்கு உங்களால் என்ன செய்ய முடியும் என்பதை நீங்களே தீர்மானித்துச் செய்யுங்கள். யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

விவசாய அமைச்சால் உள்வாங்கப்பட்ட ஐம்பது பயிலுனர் பட்டதாரிகளுக்கான நியமனக்கடிதங்களை வழங்கும் நிகழ்வு வியாழக்கிழமை நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. நிகழ்வில் தலைமையுரையாற்றும் போதே அரச அதிபர் மேற்கண்டவாறு கூறினார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த மாவட்டத்தைப் பொறுத்தவரை மூன்றில் இரண்டு பங்கு மக்கள் விவசாயத்துறை சார்ந்தவர்கள். எமது விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட நெல், மரக்கறி, பழ வகைகள் உற்பத்தி கடந்த இரண்டு வருடங்களில் மிக வேகமாகவும், துரிதமாகவும் அபிவிருத்தி கண்டு வருகிறது.

விவசாயத்துறை மேலும் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளது. மாவட்ட சனத்தொகை நுகர்வுக்கு ஏற்ப எமது நெல் உற்பத்திகள் குறைவாகவே உள்ளன. அது அதிகரிக்கப்பட வேண்டும்.

பழச் செய்கையின் வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்யக்கூடியதாக கவனம் செலுத்த வேண்டும். விவசாயத் துறையை மேம்படுத்தக் கூடியதாக நாங்களே அவர்களுக்கான வசதிகளையும் தொழில் நுட்ப வளங்களையும் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும்.

இதற்கு அர்ப்பணிப்பான சேவை தேவை. ஐம்பது பேர்கள் விவசாயத்துறைக்கு உள்வாங்கப்பட்டுள்ளீர்கள். மக்களுடன் நெருங்கிப் பழகும் கூடுதல் பொறுப்பும் அவர்களது பொருளாதாரத்தை வளப்படுத்தும் உங்களது செயற்பாடுகளும் உங்களது நியமனத்தை வரவேற்கிறது.

2013 காலப்பகுதியில் உள்ள நிலையிலும் எதிர் வரும் காலங்களிலும் விவசாயத்துறையின் உற்பத்திகளில் பெரியளவில் மாற்றம் தேவை. விவசாயத்துறையின் மேம்பாடுகள், தேவைகள் குறித்து என்னென்ன செய்ய வேண்டும் என்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டும் என்று கூறினார். (ம-7)

## மரண அறிவித்தல்

### திருமதி இந்திராணி சுகுணானந்தன்



நீர்வேலியைப்பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் தற்போது கனடா மார்க்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணி சுகுணானந்தன் நேற்றுமுன்தினம் (04.04.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் (நீர்வேலி)-சிவஞானவதியார் தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை (உரும்பிராய்)-இராசலட்சுமி தம்பதியரின் மருமகளும் அப்புத்துரை சுகுணானந்தனின் (இளைப்பாறிய ஆசிரியர்-வசாவிளான் மத்திய கல் லூரி) அன்பு மனைவியும், சுகன்யா, சுனேஜா ஆகியோரின் பாசமிகு தாயும், நவநீதனின் அன்பு மாமியும், யோகராணி (கொழும்பு), ஆனந்தநடேசன் (கனடா), விமலராணி (நீர்வேலி), ஜெயராணி (ஜேர்மனி), அருமைநாதன் (கனடா), இராசேந்திரன் (ஜேர்மனி), செல்வ ராணி(நீர்வேலி), பத்மராணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தில்லைநடராஜன், சுகுணாம் பிகை, சண்முகதேவன், உமாபதி சிவம், கிருபானந்தி, சரோஜினிதேவி, பாலசிங்கம், குகராஜன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று(06.04.2013) சனிக்கிழமை மாலை 5.00மணிமுதல் 9.00மணி வரை (கனடா நேரப்படி) Chapel Ridge Funeral Home (8911 Woodbine Avenue, Woodbine ave & Highway 7) இலும் நாளை (07.04.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணிமுதல் 11.00மணி வரை (கனடா நேரப்படி) அதே முகவரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
(கனடா) - +16475887842
நீர்வேலி- 021 223 0063,
021 321 8877. (c/8209)(8.14.6)

தகவல்:
குடும்பத்தினர்.

# பாடசாலை கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

கிளிநொச்சி,ஏப்.6

முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரியின் மூன்று மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெற்றது.

கிளிநொச்சி கல்வி வலயத்துக்குட்பட்ட முதன்மையான கல்லூரிகளில் ஒன்றாக விளங்கும் முருகானந்தாக் கல்லூரியில் சுமார் 450 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வரும் நிலையில் போதிய கட்டட வசதிகள் இன்றி பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றது.

இந்த நிலையில் குறித்த கல்லூரிக்கான மூன்று மாடிக் கட்டடம் அமைக்கும் பணிகள் இசுறு திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுக் காலை 8 மணிக்கு கல்லூரி முதல்வர் தி.வரதன் தலைமையில் நடைபெற்றது. இதில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் கண்டாவளைப் பிரதேச செயலர் ரி.முகுந்தன், வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல், கோட்டக் கல்வி அதிகாரி வீ.இராஜகுலசிங்கம், ஓய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராசா உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

மூன்று கோடியே எழுபது லட்சம் ரூபா செலவில் அமையவுள்ள குறித்த மூன்று மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்ட நிலையில் குறித்த நிகழ்வு அரசியல் தலையீடு காரணமாக நிறுத்தப்பட்டு மீண்டும் நேற்று நடைபெற்றுள்ளது.

## இசை நிகழ்ச்சி யாழ் நகரில் நாளை

யாழ்ப்பாணம்,ஏப்.6

அருணோதயக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் நடத்தப்படவுள்ள 'அருணோதயாவின் இன்னிசை மாலை 2013 நிகழ்வு திட்டமிட்டபடி நாளை ஞாயிற்றுக் கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிந்திய திரைப்படப் பாடகர் மதுபாலகிருஸ்ணன் 'எயார்ரெல் சுப்பர் சிங்கர்' புகழ் அல்கா அஜித், ஸ்ரீ நிஷா, பிரியங்கா, சுகன்யா, ஆகியோர் கலந்துகொள்ளும் இந்த நிகழ்வு நாளை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும்.

தென்னிந்திய பாடகர்கள் நட்சத்திரங்கள் நேற்றைய தினம் கொழும்புக்கு வருகைதந்துள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஒ-5)

## புவியியல் பட்டதாரிகள் பழைய மாணவர் சங்கம்

யாழ்ப்பாணம்,ஏப்.6

யாழ்.பல் கலைக்கழக புவியியல் துறையின் ஏற்பாட்டில் புவியியல் பட்ட தாரிகள் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பண மும் முகா மைத்து வக் குழுத் தெரி வும் இன்று சனிக்கி ழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை மண்ட பத்தில் நடை பெறும்.

துறைத் தலைவர் பேரா சிரியர் எஸ்.ரி.பி. இராஜேஸ்வரன் நிகழ் வுக்குதலமை வகிப்பர். (ந)

## வான் விற்பனைக்கு

252 டொல்பின் 12/A/C
அஜஸ்மென்சீற், எலோவீல்
லீசிங் வசதியுடன் 30 இலட்சம்.
இல 06, கற்பக விநாயகர் வீதி,
கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம். (35723)(8.6)
தொடர்பு
0212228604,
0756508660

## விற்பனைக்கு

ஒரு வயதுடைய நல்லின நாம்பன் கன்றும், மாட்டு எருவும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
0213214927

## விற்பனைக்கு

1 வயது நிரம்பிய ஜேமன் சப்பேட் அல்சேசன் ஆண், பெண் நாயும், பொமேரியன் ஆண், பெண் நாயும், டாசோன் ஆண், பெண் நாயும், 2 மாதம் பூர்த்தியான பொமேரியன் குட்டியும், டாசோன் குட்டியும், மணிதாரா, இனிபிக்
தொடர்பு: லி.மயூரன்.
புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ஆயக்கடவை பிள்ளையார் கோயிலடி (டயலொக் ரவர் அருகில்)

## கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தித் தருகின்றோம். அழையுங்கள்- 0779086737
GUNAA BEST PC 52, HOSPITAL ROAD, JAFFNA.

## வாடகைக்கு

யாழ். வைத்திலிங்கம் துரைச்சாமி வீதியில் கொலி பமிலி கொன்வென்றுக்கு முன்னால் 3 அறைகள், குளியல் அறை உட்பட சகல வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 808 4916
(35713)(5-6-7)

## பணியாளர்கள் தேவை

★இயந்திர இயக்குநர்கள் (Ryobi, Davidson)
★முகாமையாளர்கள்(பெண்கள்)
★கணினி இயக்குநர்கள்(இருபாலரும்)
★அலுவலக உதவியாளர்கள்
(அச்சக அனுபவம் உள்ளவர்கள் மட்டும்)
08.04.2013 திங்கள் காலை 09.00மணிக்கு தங்கள் சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.
ஷாம்பவி பதிப்பகம்
276, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 4143
C8214414

## அக்கராயன் ம.வியில் இவ்வருடம் கணித, விஞ்ஞானப் பிரிவுகள் ஆரம்பம்

### கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

அக்கராயன்,ஏப்.6

அக்கராயன் மகா வித்தியாலயத்தில் உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பிரிவுகள் இந்த ஆண்டில் ஆரம்பிப் பதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித் துள்ளார்.

அக்கராயன் மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவில் முதன்மை விருந்தி னராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய மட்டத்தில் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் 69 வீத மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்கு சித்தி பெற்றுள்ளனர். ஆனால் அக்கராயன் மகா வித்தியா லயத்திலேயே 79 வீத மாண வர்கள் சித்தியடைந்துள்ளனர். தேசிய மட்டத்தை விட அதி கமாக 10 வீதமா னோர் சித்தியடைந் துள்ளீர் கள் என்பது பாராட் டுக்குரிய விடயம்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 21 உயர்தர பாட சாலைகள் உள்ளன. உயர் தரத்தில் கணித, விஞ்ஞான பிரி வுகளில் கற்பிக்கக் கூடிய 10 ஆசி ரியர்கள் கடமைக்கு வரவுள்ளனர். இதில் நான்கு ஆசிரியர்கள் அக்கராயன் மகாவித்தியாலயத்துக்கு வரவுள்ளனர். அத்துடன் 70 லட்சம் ரூபா செலவில் இரு மாடிக் கட்டடங்கள் இந்தப் பாடசாலையில் அமைக்கப்படவுள்ளன. அந்தக் கட்டடங்களுக் கான அடிக் கல் விரைவில் நடப்படவுள் ளது- என்றார். (வ-18)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சிவன் கோயில் வடக்கு வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
0775409938

## காணி விற்பனைக்கு

37, ஸ்ரேசன் வீதியில் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகில்.
தொடர்பு:
0778900225, 0213210626

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணர்

(தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை)



மணியகாரன் வீதி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் இணுவில் - மானிப்பாய் வீதி, பாலாவோடை, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணர் நேற்று (05.04.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் பாலகிருஷ்ணரின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சி.பொன்னையா, சி.நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும் ந.இந்திராணி (ஓய்வுநிலை பிரதம லிகிதர், நல்லூர் பிரதேச செயலகம்), காலஞ்சென்ற ப.நிர்மலராணி மற்றும் பா.இராஜசேகரன் (ஓய்வுநிலை கணித ஆசிரிய ஆலோசகர், யாழ். வலயம்), சந்திரசேகரன் (அதிபர் யா/தெல்லிப்பளை சைவப்பிரகாச வித்தியாசாலை), கௌ.ரஞ்சிதராணி, பா.ஞானசேகரன், பா.சிவபாலசேகரன் (ஓய்வுநிலை நில அளவையாளர்), சி.விஜயராணி ( ஆசிரியை, யா/குடத்தனை கரையூர் றோ.க.த.பாடசாலை), கெ.தேவிகாராணி (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச சபை, நல்லூர்), பா.உதயசேகரன், பா.சர்மிளா (ஆசிரியை, யா/யாழ்ற்றன் கல்லூரி, காரைநகர்) ஆகியோரின் பாசமிகு தாயும் இ.நடராஜசுந்தரம் (சீமெந்துக் கூட்டுத்தாபனம்), சு.பஞ்சரத்தினம் (ஓய்வுநிலை, நிதி உதவியாளர்), இ.வடிவாம்பிகை, ச.ஜெயந்தி, ச.கௌரிசங்கர் (நீர்ப்பாசனத் திணைக்களம், கொழும்பு), ஞா.ரஞ்சிதா, சி.உமாரதி (அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர், பிரதேச செயலகம், கரவெட்டி), தி.சிவகடாட்சம் (முகாமைத்துவ உதவியாளர், வலயக் கல்லி அலுவலகம், வடமராட்சி), க.கெங்காதரன் ஆகியோரின் அன்பு மாமியும் ந.வாணி, ப.வித்யா, கௌ.சத்யன், ந.சங்கீதா, இ.ஜதுசன், ச.நிதர்சன், ச.பிரதீபன், ஞா.திவ்யகஜன், சி.சிவனிகா, சி.நிரோசிகா, ஞா.ரம்யகஜன், நி.நிரேஸ், ஞா.பிரவீனகஜன், ச.சனுசா, ச.சானுகா, கெ.சஞ்சீவன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சு.பாக்கியம், கி.தங்கரத்தினம், சி.பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.04.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில், மானிப்பாய் வீதி,
பாலாவோடை, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
0770712178







# 25 ஆயிரம் இலங்கையர்களுக்கு கொரிய தீபகற்பத்தில் பாதுகாப்பு

## இலங்கை அரசு நடவடிக்கை

**25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தென்கொரியாவில் பணியாற்றுகின்றனர்.**

கொழும்பு, ஏப். 6

கொரிய தீபற்பத்தில் போர் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் தென்கொரியாவிலுள்ள 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்துள்ளார்.

கொரியாவில் யுத்தம் ஏற்படுமாயின், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு அமைய தான் செயற்படுவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தென்கொரியாவில் பணியாற்றுகின்றனர். இவர்கள் தொடர்பான அனைத்து விவரங்களும் வெளிவிவகார அமைச்சில் இருக்கின்றன. அத்துடன், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமும் இது விடயம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தி வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

அது மட்டுமன்றி, கொரியாவுக்குத் தொழிலுக்கு சென்ற வேலைத்தளத்திலிருந்து பிறிதொரு இடத்திற்குச் தப்பிச்சென்றவர்கள் தொடர்பில் எவ்விதமான தகவல்களும் வெளிவிவகார அமைச்சிடமோ அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திடமோ இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (சி)

# சாரதி, நடத்துநருக்கு 270 வருடகால சிறை

## 41 பேர் பலியான விபத்து வழக்கில்

41 பேரின் உயிரைப் பறித்த பஸ் சாரதிக்கும், நடத்துநருக்கும் 270 வருட சிறைத் தண்டனையும் ஒரு இலட்சத்து 35 ஆயிரம் ரூபா அபராதமும் குருநாகல் மேல்நீதிமன்ற முன்னாள் நீதிபதி பிரசன்ன பிரனாண்டோ நேற்று விதிக்கப்பட்டுள்ளது.

2005ஆம் ஆண்டு ஏப்ரல் 27 ஆம் திகதி அலவ்வ - யாங்கல்மோதர பகுதியில் பஸ்ஸொன்று மூடப்பட்டிருந்த ரயில் கடவை உடைத்துக் கொண்டு சென்று ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளான சம்பவத்தில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட குறித்த பஸ்ஸின் சாரதி மற்றும் பஸ் நடத்துநர் ஆகியோருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அவ்விருவர் மீதும் 27 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்ததுடன், ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் 10 வருடங்கள் என தலா 270 வருடங்கள் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஒரு குற்றச்சாட்டுக்கு 5 ஆயிரம் ரூபா வீதம் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

அபராதப் பணத்தைச் செலுத்தத் தவறின் ஒரு குற்றச்சாட்டுக்கு ஒரு மாதம் என்ற வீதத்தின் அடிப்படையில் மேலும் 27 மாதங்கள் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

41 பயணிகள் பலியான இவ் விபத்தில், பஸ்ஸின் சாரதியும் நடத்துநரும் காயங்களுடன் உயிர்பிழைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சீன நீர்மூழ்கிகளின் ஊடுருவல் இலங்கைக்கு தெற்கே அதிகரிப்பு

புதுடில்லி.ஏப் 06

இலங்கைக்குத் தெற்கே, சீனாவின் அணுசக்தி நீர்மூழ்கிகளின் நடமாட்டத்தை இந்தியக் கடற்படை அவதானித்துள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இந்து சமுத்திரத்தில் சீனாவின் அணுசக்தி நீர்மூழ்கிகள் தொடர்ச்சியாக ஊடுருவி வந்துள்ளதாகவும், இலங்கைக்கு தெற்கே குறைந்தது 13 தடவைகள் இந்த ஊடுருவல் நிகழ்ந்துள்ளதாகவும் இந்தியக் கடற்படை தெரிவித்துள்ளது.

ஆகப் பிந்திய ஊடுருவல் கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்றுள்ளது. இந்து சமுத்திரத்தில் உள்ள அமெரிக்க மற்றும் இந்திய சோனார் கருவிகளில் 22 அடையாளம் தெரியாத நீர்மூழ்கிகளின் நடமாட்டம் கண்டறியப்பட்டுள்ளதாக இந்தியக் கடற்படை வட்டாரங்கள் கூறியுள்ளன.

இந்தப் பிராந்தியத்தில், செயற்படத்தக்க ஏனைய ஒரே கடற்படை சீனாவினது மட்டுமேயாகும். இந்த ஊடுருவலை இந்திய மற்றும் அமெரிக்க புலனாய்வு அமைப்புகள் உறுதிப்படுத்தியுள்ளன.

இந்து சமுத்திரத்தில் சீன நீர்மூழ்கிகளின் இந்த ஊடுருவல் இந்தியக் கடற்படைக்குப் பெரிய பிரச்சினையாக இருக்கும். சந்தேகத்துக்குரிய ஒரு சீன நீர்மூழ்கி இந்தியக்கரையில் இருந்து 90 கிலோ மீற்றர் தொலைவில்- அந்தமான், நிகோபார் தீவுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஆறு தடவைகள் மலாக்கா நீரிணைக்கு வடமேற்கிலும், 13 தடவைகள் இலங்கைக்கு தெற்கிலும், இரண்டு தடவைகள் அரேபியன் கடற்பகுதியிலும் இந்த சீன நீர்மூழ்கிகளின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டுள்ளது.

முதல் தடவையாக, சீன நீர்மூழ்கியின் நடமாட்டத்தை கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம், இந்து சமுத்திரத்தில் ரோந்து சென்ற இந்திய, அமெரிக்க போர்க்கப்பல்கள் அடையாளம் கண்டன. இந்து சமுத்திரத்தின் தென் பகுதியில் இந்த இரு கடற்படைகளும் மட்டுமே ரோந்து செல்கின்றன.

சீனக் கடற்படை சொந்தமாகத் தயாரித்துள்ள அணுசக்தி நீர்மூழ்கிகள் கடலுக்கு அடியில் 10 ஆயிரம் மைல்கள் பயணம் செய்யத்தக்கவை என்று தகவல்கள் கூறுகின்றன.

தென் சீனக்கடலில் உள்ள சன்யா என்ற தளத்தில் இருந்தே இவை செலுத்தப் படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# குடிபோதையில் பரீட்சை எழுத வந்த மாணவர் 7 பேர்

அனுராதபுரம், ஏப். 6

தவணைப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு மதுபோதையில் பாடசாலைக்கு வந்த உயர்தர வகுப்பு மாணவர்கள் 7 பேர் ஆசிரியர்களால் திருப்பி விடப்பட்டுள்ளனர்.

அனுராதபுரம் முன்னணிப் பாடசாலை ஒன்றில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கடந்த 3 ஆம் திகதி பாடசாலை தவணைப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக வந்திருந்த மாணவர்கள் ஐவரும் மறுநாள் இரு மாணவர்களும் மது அருந்திய நிலையில் வந்திருந்தனர் என்று அந்தப் பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

பாடசாலைக்குப் பெற்றோருடன் வரும் வரையில் அவர்கள் பாடசாலை வளாகத்துள்ளே நுழைவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் அதிபர் அறிவித்துள்ளார். (ஒ-22)

# குளிர்சாதன இயந்திரங்களை நிறுத்துங்கள் 50 வீத மின்சாரத்தைச் சேமிக்கலாம்

## அமைச்சர் சம்பிக்க கூறுகிறார் அறிவுரை



கொழும்பு, ஏப். 6

குளிர்சாதன இயந்திரங்களை நிறுத்திவிடுவதன் மூலமாக 50 சதவீதமான மின்சாரத்தைச் சேமிக்க முடியும் -

இவ்வாறு கருத்துத் தெரிவித்திருக்கிறார் முன்னாள் மின்சக்தி, எரிசக்தி அமைச்சரும் தற்போதைய தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் அணுசக்தி அமைச்சருமான சம்பிக்க ரணவக்க.

இதுதொடர்பாக அமைச்சர் மேலும் தெரிவித்திருப்பதாவது :-

மொத்த மின்சார விநியோகத்தில் 40 வீதத்தை குளிர்சாதன இயந்திரங்கள் உறிஞ்சி விடுகின்றன.

மேலும் சார்க் நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கை மின்சார சபை குறைந்தளவு நட்டத்தையே எதிர்கொள்கின்றது. ஆனால் சார்க் பிராந்தியத்திலேயே சிறந்த மின் கட்டமைப்பை இலங்கை கொண்டுள்ளது. மேலும் கிழக்கு ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது மின்சாரக் கட்டணங்களும் இங்கு குறைவாகவே காணப்படுகின்றன.

இந்தியா தரம் குறைந்த நிலக்கரியைப் பயன்படுத்துவதால் குறைந்த மின்சாரக் கட்டணத்தை நடைமுறைப்படுத்த முடிகின்றது. ஆனால் இந்தத் தரக்குறைவான நிலக்கரியைப் பயன்படுத்துவதால் சுற்றுச்சூழலுக்குப் பெரும் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. ஆனால் நாம் சுற்றுச்சூழல் விடயத்தில் அதிக கவனம் செலுத்தி வருகின்றோம்.

மேலும் 2030 ஆம் ஆண்டளவில் அனைத்து நிலக்கரி மின் நிலையங்களும் மூடப்பட்டுவிடும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஒ-க)

# இலங்கைக் கடற்பகுதியில் சீன அணு நீர் மூழ்கிக் கப்பல்கள்

## இந்தியக் கடற்படை கண்டுபிடித்தது

**இந்து சமுத்திரத்தினுள் இரகசியமாக இவ்வளவு தொகையான சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் சுதந்திரமாக நடமாடும் விடயம் இந்திய கடற்படைக்கு தலையிடியை ஏற்படுத்திய உள்ளது.**

இந்து சமுத்திர பகுதியில் சீனாவுக்குச் சொந்தமான அணு நீர்மூழ்கி கப்பல்கள் அடிக்கடி வந்துபோவதாகவும், அத்தகைய சீன நீர் மூழ்கிப் கப்பல்களை இலங்கைக்கு நேர் தெற்கே 13 தடவைகள் இந்தியக் கடற்படையினர் அவதானித்துள்ளனர் என்றும் இந்திய பத்திரிகையான 'ஹெட்லைன்ஸ் ருடே' தெரிவித்துள்ளது.

இனங்காணப்படாத 22 நீர்மூழ்கிகளை நீரில் மூழ்கியிருக்கும் பொருள்களை காட்டும் இந்திய மற்றும் அமெரிக்க கருவிகள் இந்து சமுத்திரத்தில் பதிவு செய்துள்ளன என்று இந்திய கடற்படைத்தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்து சமுத்திரத்தினுள் இரகசியமாக இவ்வளவு தொகையான சீன நீர்மூழ்கிக்கப்பல்கள் சுதந்திரமாக நடமாடும் விடயம் இந்திய கடற்படைக்கு தலையிடியை ஏற்படுத்திய உள்ளது.

அந்தமான் தீவிலிருந்து 90 கிலோமீற்றர் தூரத்திலும் மலாக்க நீரிணைக்கு அண்மையிலும் இலங்கைக்கு தெற்கிலும் இத்தகைய சீன நீர்மூழ்கிக்கப்பல்கள் வந்துபோயுள்ளன.

சீன மக்கள் விடுதலைச் சேனையின் கடற்படைப்பிரிவு அதிநவீன அணு நீர்மூழ்கிகளை 10000 மைல் ஆழ்கடல் பயணத்தில் ஈடுபடுத்திவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன நீர்மூழ்கி கப்பல்கள் இந்தியாவை அண்மித்த கடலில் இரகசியமாக நுழைய தயாராகிவருவதாக புலனாய்வு செய்திகள் தெரிவிக்கின்றன. சில சமயங்களில் இவை இந்து சமுத்திர பிராந்தியத்தில் நிரந்தரமாக நிலைக்கொள்ளவும் முயற்சிக் ம் என்றும் 'ஹெட்ை ருடே' செய்தி வெளியிட் ாது.

# வேம்படி மகளிர் கல்லரி க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள்

### ஆங்கில மொழி மூலம் (9ஏ)

பாவனா சிவயோகன், ஜனுஜா திருச்செல்வம், கவிதா செல்வசேனக்குருக்கள், நிக்கலின் ஸ்டநிஷா அன்டன், சலோம் துஷ்யந்தி குருபாதம், தேனுகா உருத்திரமூர்த்தி

### தமிழ்மொழி மூலம் (9ஏ)

சுவேதா சுகுமார், தனுஷியா மகேந்திரன், கம்சவாகினி செந்தில்நடராஜா, சுஜானி குமாரமூர்த்தி, கம்சா பாஸ்கர ஐயர், கீதாஜினி சிவமூர்த்தி, சுலக்சனா முருகதாஸ், லக்சனா சிவகுமாரன், சுகிந்தா ஸ்ரீகலாதர், தர்சனி சூரியகுமார்

### ஆங்கல மொழி மூலம் (8ஏ)

டக்ஷனா விஜயநாதன் 8 ஏ,பி, கஜவதனி பஞ்சலிங்கம் 8 ஏ,பி, பிரியந்தினி சிவசுப்பிரமணியம் 8 ஏ,சி, ரேவதி ரகுராஜன் 8 ஏ,சி , சுயோதமி யோகநாதன் 8 ஏ,பி, தர்சிகா லோகேஸ்வரன் 8 ஏ,சி, தர்வஜோதி சர்வோதயசிவம் 8 ஏ,பி, திவ்யா சந்திரலிங்கம் 8 ஏ,சி, உமையாள் ஸ்ரீஸ்காந்தராஜா 8 ஏ,பி, விதுஷா பாஸ்கரன் 8 ஏ,சி, சபார்த்தினி சிவபாலன் 8 ஏ,சி.

### தமிழ் மொழி மூலம் (8ஏ)

மிதுஷா திருக்கேதீஸ்வரன் 8 ஏ,சி, நயனிதா விஜயகுமாரன் 8 ஏ,பி, சரணியா செல்வநேசன் 8 ஏ,சி, சிந்துஜா அருட்செல்வன் 8 ஏ,சி, ஸ்ரீநாகசாயினி சூரியகுமார் 8 ஏ,சி, வித்தியா சிவசங்கரநாதன் 8 ஏ,சி, பவித்திரா புவனேந்திரராஜா 8 ஏ,பி, கதிர்தர்ஷினி பரமேஸ்வரன் 8 ஏ,பி, தாட்சாயினி சந்திரசேகரன் 8 ஏ,பி, ஜனனி கணேசன் 8 ஏ,சி, ஜெயவதனி செல்வரட்னம் 8 ஏ,பி, சரண்யா லோகனாதன் 8 ஏ,பி, சங்கவி வரதராஜா 8 ஏ,சி, தர்மிலா குணரத்தினம் 8ஏ,பி, யாழினி கைலாயபதி 8 ஏ,பி, ஹரினா தருமராசா 8 ஏ,சி, கஜப்பிரியா சிவகணநாதன் 8 ஏ,சி, கீர்த்திகா உருத்திரலிங்கம் 8 ஏ,பி, மயூரி புவனேந்திரன் 8 ஏ,பி, பவித்திரா முருகானந்த சர்மா 8 ஏ,பி, பிரவீனா சிவஷண்முகராசா 8 ஏ,பி, சாகித்தியா செல்வராஜா 8 ஏ,பி, ஷாலினி ராகேஸ்வரன் 8 ஏ,சி, சுகன்யா சிவகுமாரன் 8 ஏ,பி, வனோஜா குகநேசன் 8 ஏ,சி, விதுஷா மோகனராஜன் 8 ஏ,பி, பவப்ரியா லோகேஸ்வரன் 8 ஏ,பி, கீர்த்திகா ரவீந்திரன் 8 ஏ,பி, கோசிகா ரகுநாதன் 8 ஏ,சி, குகாயினி மகேந்திரராசா 8 ஏ,சி, பிரியங்கா ஜெயகாந்தன் 8 ஏ,சி, (ஙு)

# சாவகச்சேரி பொது மைதானத்தில் அங்காடி வியாபாரிகளுக்கு இடம்

## நகர சபைக் கூட்டத்தில் தீர்மானம்

தென்மராட்சி, ஏப். 06

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சாவகச்சேரி நகரசபையின் பொதுச் சந்தைக்கு வரும் அங்காடி வியாபாரிகளுக்கு சாவகச்சேரி பொது விளையாட்டு மைதானத்தில் இடம் வழங்க நகர சபையில் நேற்று நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

பொதுச் சந்தையிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் அங்காடி வியாபாரிகளுக்கான பொருத்தமான இடம் கிடைக்கவில்லையென தலைவர் சி.தேவசகாயம்பிள்ளை சபையில் கூறியபோது, அங்காடி வியாபாரிகள் மட்டுமல்ல உடுபுடைவைகள் கொள்வனவு செய்ய வரும் பொதுமக்களின் நலன்கருதிச் சந்தைக்கு அருகில் அங்காடி வியாபாரிகளுக்கு இடம் ஒதுக்க வேண்டுமெனவும், அதற்குப் பொருத்தமான இடம் விளையாட்டு மைதானமே எனவும் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஏகோபித்த குரலில் தெரிவித்தனர்.

இதனையடுத்து நகர சபையின் பொது விளையாட்டு மைதானத்தை புத்தாண்டு வியாபாரத்துக்காக அங்காடி வியாபாரிகளுக்கு வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டதாக தலைவர் அறிவித்தார். (த-9)

# 'நாயகர்களின் போர்'

## பந்துவீச்சாளர்கள் வசம் நேற்றைய ஆட்டம்

பதின்மூன்றாவது ஆண்டாக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையே இடம்பெறும் நாயகர்களின் போர் ரசிகர்களை ஏமாற்றியது.

முதல்நாளிலேயே இரு அணிகளும் தமது முதல் இன்னிங்ஸை முடித்துக் கொண்டன.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கந்தவரோதயக் கல்லூரி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதையடுத்து துடுப்பெடுத்தாடத் தொடங்கிய மகாஜனக் கல்லூரியின் இலக்குகள் மளமளவென சரியத் தொடங்கின. ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான பிரசாந்-மயூரன் 35 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றபோதும் அணியின் மற்றைய வீரர்கள் சோபிக்கவில்லை.

பிரசாந் 96 பந்துகளை சந்தித்து 44 ஓட்டங்களையும், கஜந்தன் 18 ஓட்டங்களையும், ரமேஸ்கரன் 14 ஓட்டங்களையும், சுபதீபன் 12 ஓட்டங்களையும், மயூரன் 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

ஏனைய வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் வெளியேற, 43.1 பந்துப்பரிமாற்றங்கள் அனைத்து இலக்குகளையும் இழந்து 126 ஓட்டங்களை பெற்றது மகாஜனக் கல்லூரி. உதிரிகளாக 11 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் சார்பில் ஜனக்ஷன் 14.1 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 27 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், ஜனுக்சன் 11 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 28 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், சிந்துஷன் 9 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 35 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், நிரோஜன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 8 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடத் தொடங்கிய ஸ்கந்தவரோதயக்கல்லூரி அணி ஆரம்பம் முதலே தடுமாறத் தொடங்கியது.

மகாஜனக் கல்லூரி அணியின் பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாத ஸ்கந்தவரோதயக் கல்லூரி துடுப்பாட்ட வீரர்கள் வருவதும் போவதுமாக இருந்தனர். றெபேட்றிசான் 68 பந்துகளை சந்தித்து 22 ஓட்டங்களையும், சுஜிதரன் 10 ஓட்டங்களையும் பெற்றனர். 38.1 பந்துப்பரிமாற்றங்களின் முடிவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 63 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொண்டது ஸ்கந்தா. உதிரிகளாக 12 ஓட்டங்கள் பெறப்பட்டன.

மகாஜனக் கல்லூரி சார்பில் ஜனந்தன் 13 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், கஜந்தன் 12.1 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 21 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும் கைப்பற்றினார்கள்.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த மகாஜனக் கல்லூரி முதலாம் நாள் ஆட்டம் முடியும்போது; 6 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் ஒரு இலக்கை இழந்து 14 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பிரசாந் 20 பந்துகளை சந்தித்து 3 ஓட்டங்களுடனும் ரமேஷ்குமார் ஓட்டம் எதுவும் பெறாத நிலையில் களத்தில் உள்ளனர். இரண்டாம் நாள் ஆட்டம் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். (ற-86-36-23)

### கரப்பந்துப் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஏப்.6

புதுவருடத்தை முன்னிட்டு வலி.தெற்கு பிரதேச சபையின் அனுசரணையுடன் இணுவில் இந்து விளையாட்டுக்கழகம் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இந்தப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் பிரதேச சபைக்கு உட்பட்ட கழகங்கள் நாளை ஏழாம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு இணுவில் இந்து விளையாட்டுக் கழகத்தின் தலைவர் கேட்டுள்ளார். (ற-17)

### பூப்பந்தாட்ட போட்டிகள் இன்று

வவுனியா, ஏப்.6

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்தும் மாகாண மட்ட பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் இன்று காலை 8.30 மணி முதல் வவுனியா நகரசபை உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான இந்தப்போட்டியில் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அணிகள் மோதவுள்ளன. (ற-400)

### அரியாலை சுதேசிய திருநாள் போட்டிகள் இறுதியாட்டம் இன்று

வலி.வடக்கு, ஏப்.6

அரியாலை சுதேசிய திருநாளை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளின் இறுதிப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வலைப்பந்தாட்டம், மென்பந்து கிரிக்கெட், உதைபந்தாட்டம் ஆகியவற்றின் இறுதிப்போட்டிகள் இன்று நடைபெறும். (ற-86)

### நோயல் விமலேந்திரன் வெற்றிக்கிண்ணம்

## மத்திய கல்லூரி சம்பியன்



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு அவையினால் அழைக்கப்பட்ட பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான நோயல் விமலேந்திரன் வெற்றிக் கிண்ணத்துக்கான 20/20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை வீழ்த்தி யாழ்.மத்திய கல்லூரி அணி சம்பியனானது.

நேற்று மதியம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 155 ஓட்டங்களை பெற்றது.

இதில் யூலியஸ் கனிஷ்டன் 3 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகள் அடங்கலாக 56 ஓட்டங்களையும், நிறோஜ் 6 பவுண்டரிகள் அடங்கலாக 33 ஓட்டங்களையும், நிறோஜன் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 23 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக கபாஸ்கர் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து 3 இலக்குகளையும், யதுர்சன் 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 3 இலக்குகளையும், துவாரகசீலன் 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 38 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

156 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 16.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 99 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதில் சயன் 31 ஓட்டங்களையும், காணமிர்தன் 29 ஓட்டங்களையும், பிருந்தாபன் 16 ஓட்டங்களை தமது அணிசார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் ஹரிகரன் 3.4 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 18 ஓட்டங்களைக்கொடுத்து 3 இலக்குகளையும், அலன்ராஜ் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 26 ஓட்டங்களைக்கொடுத்து 2 இலக்குகளையும், நிரூபன் 3 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 11 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளை வீழ்த்தினர்.

ஆட்டநாயகனாக யாழ்.மத்திய கல்லூரி அணி வீரன் யூலியஸ் கலிஸ்ரனும் ஆட்டத்தொடர்நாயகனாக அதே கல்லூரி அணியைச் சேர்ந்த நிரூபனும் தெரிவுசெய்யப்பட்டனர். (ற-23)

### இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.6

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் கிருஸ்ணன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க. மைதானத்தில் ஆரம்பமாகும்.(ற-23)

★★★

நாமகள் சனசமுக நிலையம், விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ் .மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை இடம் பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரம்:-

தொல்லிப்பழை நண்பர்கள் ஏ அணி எதிர் அளவெட்டி ஏசியன் விளையளாட்டுக் கழகம்

### கிரிக்கெட் ஆட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.6

தெல்லிப்பழை மகாஜனக் கல்லுரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லு!ரி ஆகியவற்றின் பழைய மாணவர்கள் அணிகளுக்கு இடையிலான 50 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட கிரிக் கெட் போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் ஸ்கந் தவரோதயக் கல்லூரி மைதா னத்தில் இடம்பெறும். (ற-23)

### யாழ்.வலயப் பாடசாலைகளுக்கான கிரிக்கெட் போட்டிகள் நாளை

வலி.வடக்கு ஏப்.6

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம்:-

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி எதிர் சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயம்.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் எதிர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

இரண்டாம் சுற்றில் இருந்து தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி, மல்லாகம் மகா வித்தியாலயம், இணுவில் மத்திய கல்லூரி என்பன மோதவுள்ளன. (ற-86)

### வலிகாமம் பாடசாலைகளுக்கு இடையிலான ஹொக்கிப் போட்டிகள்

## யாழ்ப்பாண கல்லூரியில் இன்று

வலி.வடக்கு ஏப்.6

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான ஆண்கள் பெண்களுக்கான ஹொக்கிப் போட்டிகள் இன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஆண்கள் பிரிவில் மோதவுள்ள அணிகள்:-

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி.

பெண்கள் பிரிவில் மோதவுள்ள அணிகள்:-

உடுவில் மகளிர் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை, மல்லாகம் குளமங்கால் றோ.க.த.க. பாடசாலை. (ற-86)

## மாவட்ட அணிகளுக்கான உதைபந்து வவுனியாவில்

### இன்றும் நாளையும் நடைபெறும்

வலி.வடக்கு, ஏப்.6

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்தப்படும் ஆண்கள், பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்றும், நாளையும் வவுனியாவில் நடைபெறவுள்ளன.

ஆண்கள் பிரிவில் மோதவுள்ள அணிகள்:-

வவுனியா மாவட்ட அணி எதிர் முல்லைத்தீவு மாவட்ட அணி.

யாழ்ப்பாணம் மாவட்ட அணி எதிர்கிளிநொச்சி மாவட்ட அணி.

(இரண்டாம் சுற்றில் இருந்து மன்னார் மாவட்ட அணி மோதவுள்ளது.)

பெண்கள் பிரிவில் மோதவுள்ள அணிகளின் விபரம்:-

மன்னார் மாவட்ட அணி எதிர் வவுனியா மாவட்ட அணி.

கிளிநொச்சி மாவட்ட அணி எதிர் முல்லைத்தீவு மாவட்ட அணி

(இரண்டாம் சுற்றில் யாழ் மாவட்ட அணி மோதவுள்ளது.) (ற-86)

## கூடைப்பந்து, மேசைப் பந்து போட்டிகள் வவுனியாவில்

வலி வடக்கு ஏப்.6

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் மாவட்ட அணிகளுக்குஇடையே நடத்தப்படும் ஆண்கள் பெண்களுக்கான கூடைப் பந்து மற்றும் மேசைப்பந்துப் போட்டிகள் இன்று சனிக்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ளன.

கூடைப்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் மோதவுள்ள மாவட்ட அணிகளின் விவரம்:

மன்னார் மாவட்ட அணி எதிர் முல்லைத்தீவு மாவட்ட அணி.

யாழ்ப்பாணம் மாவட்ட அணி எதிர்கிளிநொச்சி மாவட்ட அணி.

மேசைப்பந்தாட்டத்தில் ஆண்கள் அணியில் மோதவுள்ள மாவட்ட அணிகளின் விவரம்:

வவுனியா மாவட்ட அணி எதிர் முல்லைத்தீவு மாவட்ட அணி.

மன்னார் மாவட்ட அணி எதிர் கிளிநொச்சி மாவட்ட அணி.

கூடைப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் மோதவுள்ள மாவட்ட அணிகளின் விவரம்:

கிளிநொச்சி மாவட்ட அணி எதிர் முல்லைத்தீவு மாவட்ட அணி.

வவுனியா மாவட்ட அணி எதிர் மன்னார் மாவடட அணி.

மேசைப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் மோதவுள்ள மாவட்ட அணிகளின் விவரம்:

கிளிநொச்சி மாவட்ட அணி எதிர் மன்னார் மாவட்ட அணி.

வவுனியா மாவட்ட அணி எதிர் முல்லைத்தீவு மாவடட அணி. (ற-86)

# கன்னிப் போட்டியிலேயே சன்ரைஸர்ஸ் வென்றது



ஐ.பி.எல். தொடரில் இந்த முறையே இணைந்துகொண்ட ஹைதராபாத் சன்ரைஸர்ஸ் அணி தனது கன்னிப்போட்டியிலேயே முதல்வெற்றியைப் பதிவு செய்தது.

6 ஆவது ஐ.பி.எல். தொடரின் 3 ஆவது ஆட்டம் ஹைதராபாத் ராஜீவ்காந்தி சர்வதேச மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் சங்ககார தலைமையிலான ஹைதராபாத் சன்ரைஸர்ஸ் அணியும், அஞ்சலோ மத்தியூஸ் தலைமையிலான புனே வாரியர்ஸ் அணியும் மோதிக்கொண்டன.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற புனே வாரியர்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

துடுப்பெடுத்தாடிய சன்ரைஸர்ஸ் அணியின் வீரர்கள் பெரியளவிலான ஓட்டங்களைக் குவிக்கத் தவறினர். சகலதுறை வீரர் திஸர பெரேரா மாத்திரமே அந்த அணி சார்பில் 18 பந்துகளில் 30 ஓட்டங்களை விளாசினார். ரெட்டி (27), பட்டேல் (19), சங்ககார (15), வைற் (10), விகாரி (11) என்று முக்கிய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் வெளியேற ஹைதராபாத் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்றது.

127 ஓட்டங்கள் என்ற சுலபமான வெற்றி இலக்கைத் துரத்தத் தொடங்கியது புனே அணி. அந்த அணியின் உத்தப்பாவையும், சாமுவேல்ஸையும் திஸர பெரேரா தனது வேகத்தில் பிடுங்கியெறிய அந்த அணி தடுமாறத் தொடங்கியது. இந்தத் தடுமாற்றத்தை மிகச் சரியாகப் பயன்படுத்திக்கொண்ட ஹைதராபாத் சன்ரைஸர்ஸ் அணியின் மிஸ்ரா தனது சுழலில் இலக்குகளை வேட்டையாடத் தொடங்கினார். அவரின் சுழலில் சிக்கி பாண்டே, யுவராஜ் சிங், நாயர் ஆகியோர் சொற்ப ஓட்டங்களுடன் அரங்கு நோக்கி நடையைக் கட்டினர்.



இதனால் வெற்றி ஹைதராபாத் அணியின் பக்கம் திரும்பத் தொடங்கியது. பின்வரிசை வீரர்களும் கைகொடுக்கத் தவறியதால், புனே அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 104 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இதனால் தனது முதற் போட்டியிலேயே 22 ஓட்டங்களால் வெற்றியீட்டியது ஹைதராபாத் சன்ரைஸர்ஸ் அணி.

போட்டியின் ஆட்டநாயகனாக 3 இலக்குகளைக் கொய்து வெற்றிக்கு வித்திட்ட அமித் மிஸ்ரா தெரிவானார்.

(ந)

சிறிய மற்றும் நடுத்தர தொழில் துறையில்
தகவல் தொழில்நுட்ப பிரயோகம்
கண்காட்சியும், தீர்வுகளும்

IT Solutions
For Your Business
Exhibition & Seminar

Entrance FREE

இடம் - யாழ்ப்பாணம் பிள்ளையார் சுற்றுலா விடுதி
Manipay Road, Jaffna.
காலம் - 07 . 04. 2013, ஞாயிற்றுக்கிழமை
நேரம் - காலை 09.30 - மாலை 04.30 வரை

நிகழ்வின் பிரதான நோக்கங்கள் -

வியாபார சமூகத்தினர் மற்றும் தொடர்புடைய தகவல் தொழில்நுட்ப சேவை வழங்குனர்களுக்குமான பயனுள்ள களம் ஒன்றினை ஏற்படுத்தல்

பொருத்தமான தகவல் தொழில்நுட்ப பிரயோகங்களினூடாக வர்த்தக, கைத்தொழில் செயற்பாடுகளை வினைத்திறன்மிக்கதாக மேம்படுத்தல்

சிறந்த தகவல் தொழில்நுட்ப சேவை வழங்குனர்களின் சந்தை வாய்ப்புக்களை விரிவாக்குதல்

Exhibitors will be participated:

| Exhibitors | Products / Solutions |
| --- | --- |
| 1.AJ Systems I (Pvt).Ltd | POS Systems, Security Systems & Access Systems |
| 2.AT E Soft Computer Systems | POS Systems |
| 3.Business Network Solution | Multimedia Solution, IT Consulting, Customize Software Solution |
| 4.EPIXCELL Solution | Web Development |
| 5.HTN Information Systems | ERP / Inventory Systems |
| 6.IT Soft Sri Lanka | Software / Web Development |
| 7.ONIMTA Information | Technology POS System / Software Solutions |
| 8.Speed IT Net | Web Development |
| 9.Shree Vengadeshwaraa | Networks Web Development |
| 10. Virtual Software | POS Systems |
| 11. WEBSTER Networks | Web Development |
| 12. WORD WINT IT | Web Development |

(C8210)(2.6.7)

## பிரவீண்குமாரின் வீட்டில் ஆபாசப் படம்

உத்தரபிரதேசம் மாநிலம் மீரட் நகரில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் பிரவீண்குமாருக்குச் சொந்தமான குடியிருப்பு ஒன்று உள்ளது.

இங்கு பிரவீண்குமாரின் உறவினர் புனீத் சவுத்திரி தங்கியுள்ளார். கடந்த 31 ஆம் திகதி இந்தக் குடியிருப்பில் விருந்து நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

புனித்தின் நண்பர்கள் குன்வர்பால், சஞ்சய் ஆகியோர் இந்த விருந்தில் கலந்து கொண்டனர். அவர்கள் தங்களுடன் வேளாண் கல்லூரி மாணவிகள் 2 பேரையும் விருந்துக்கு அழைத்து வந்திருந்தனர். அப்போது 2 மாணவிகளையும் அவர்கள் ஆபாசப் படம் எடுத்தனர். பின்னர் அந்தப் பெண்களின் ஆபாசப் படத்தைக் காட்டி இருவரையும் பணம் கேட்டு ரூபா 51 லட்சம் செக்கில் கட்டாயப்படுத்திக் கையெழுத்து இடும்படியும் மிரட்டினார்கள்.

இதையடுத்து பாதிக்கப்பட்ட 2 மாணவிகளும் பொலிஸில் புகார் செய்தனர். இது தொடர்பாக மீரட் பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்குத் தொடர்பாக பொலிஸார் நேற்று பிரவீண்குமாருக்குச் சொந்தமான குடியிருப்பில் அதிரடிச் சோதனை நடத்தினார்கள். இங்கு தான் 2 பெண்களையும் ஆபாசப் படம் எடுத்தனர் என்பதால் சோதனை நடத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரவீண்குமாரின் சகோதரர் வினய்குமார் கூறுகையில், பிரவீண்குமார் இந்தக் குடியிருப்பைப் புனீத்துக்கு ஒரு மாதத்துக்கு முன்பு வாடகைக்கு விட்டிருந்தார். எனவே அங்கு நடந்த சம்பவத்துக்கும் பிரவீண்குமாருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை யெனத் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

## இலங்கை வீரர்கள் இல்லாததால் பாதிப்பு எதுவும் இல்லை: டோனி

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் இலங்கை வீரர்கள் ஆடாததால் எந்த ஒரு பாதிப்பும் இருக்காது என அணித் தலைவர் டோனி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் தற்போது 6 ஆவது ஐ.பி.எல் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதற்காக சென்னை சூப்பர்கிங்ஸ் அணி தீவிர பயிற்சி மேற்கொண்டுள்ளது.

சென்னை அணி சார்பில் கிரிக்கெட் உபகரணங்கள் ரசிகர்களுக்கு விற்பனை செய்யப்படும் அறிமுக நிகழ்ச்சியில் டோனி கலந்து கொண்டார்.

அப்போது பேசுகையில், இதுவரை நடந்துள்ள 5 ஐபிஎல் போட்டிகளிலும் நாங்கள் மிகச் சிறப்பாகச் செயற்பட்டுள்ளோம்.

இதற்குத் துடுப்பாட்ட வீரர்களின் பங்களிப்பு முக்கிய காரணம். 'சகலதுறை வீரர்கள் அதிகம் கொண்ட அணியாக நாங்கள் திகழ்கிறோம்.

அணியின் துடுப்பாட்ட வரிசை நன்றாக அமைந்துள்ளதால் அதனை மாற்றம் செய்து நான் முன் வரிசையில் களம் இறங்க விரும்பவில்லை.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்ற இந்திய அணியில் சிறப்பாக செயற்பட்ட வீரர்கள் சென்னை அணியில் இருப்பது கூடுதல் பலமாகும்.

வீரர்கள் நல்ல அமைப்பில் உள்ளனர். வெளிநாட்டு வீரர்களை மட்டும் நாங்கள் நம்பியிருக்கவில்லை. ரவீந்திர ஜடேஜா, பத்ரிநாத் போன்ற வீரர்களும் நன்றாக ஆடி வருகிறார்கள்.




அல்பி மோர்கல், பிராவோ, டூபிளிஸ்சிஸ், ஹஸ்ஸி போன்ற வெளிநாட்டு வீரர்களும் அணிக்கு முக்கிய பங்காற்றி வருகிறார்கள். சென்னை ஆட்டங்களில் இலங்கை வீரர்கள் ஆடாததால் எங்கள் அணிக்கு பாதிப்பு வராது என்று தெரிவித்துள்ளார்.

# பந்துவீச்சில் பின்தங்கியுள்ளோம்; றிக்கி பொண்டிங்

மும்பை இந்தியன்ஸ் அணி பந்து வீச்சில் பின்தங்கிக் காணப்படுவதாக மும்பை இந்தியன்ஸ் அணியின் தலைவர் றிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் பெறப்பட்ட தோல்வி தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கும் மும்பை இந்தியன்ஸ் அணிக்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி பெற்றுக் கொண்ட 156 என்ற ஓட்ட எண்ணிக்கைக்குப் பதிலளித்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 154 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 2 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியை வெற்றிகொள்ள முடியாது போனமை தொடர்பாக வருத்தமடைந்துள்ளதாகத் தெரிவித்த றிக்கி பொண்டிங், போட்டி இறுக்கமாகச் சென்றதால் தனது விரலின் நகங்களையெல்லாம் இழந்துவிட்டதாக நினைப்பதாகத் தெரிவித்தார்.



நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் விளையாடியமை குறித்துத் தாங்கள் ஆராய வேண்டியிருப்பதாகத் தெரிவித்த றிக்கி பொண்டிங், மும்பை இந்தியன்ஸ் அணி பந்து வீச்சில் சற்றுப் பின்தங்கியிருப்பதாகத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் தனது அறிமுகத்தை மேற்கொள்ள மும்பை இந்தியன்ஸ் வீரரான ஜஸ்பறிட் பும்றா குறித்துப் பாராட்டுக்களை வெளிப்படுத்திய றிக்கி பொன்டிங், அவரைப் பற்றி எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருந்ததாகவும் தனது முதலாவது போட்டியிலேயே 3 இலக்குகளைக் கைப்பற்றி பும்றா தன்னை நிரூபித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

FRENCH LANGUAGE CENTRE
யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு நிறுவனம்
FRENCH CLASSES
Canada, French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட, International Certificates இனை பெற்றுக் கொள்ளலாம்...
ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்).
690 க்கும் மேற்பட்டோர் French கற்றுச் சென்றுள்ளனர்..
ஆரம்பம்: 20.04.13 Sat 2 pm
No. 23, Palaly Road, ஆரியகுளம்.
(அப்பலோ வைத்தியசாலை முன்பாக)
T.P. 0779 789 456
ஆரம்பம்: 23.04.13 Tue 11am
No, 181, 1st Floor, Main Street, Nelliady. (சோதி வீதி முன்பாக)
English (A1,B1,IELTS), Italian, Deutsch, Sinhala வகுப்புக்களும்...

இன்று முதல் புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் விலைக் குறைப்பும் இலவச பொருள்களும்
அலுமாரி ~~12750/=~~ 10950/=
மரக்கட்டில் ~~7250/=~~ 4900/=
குசன்செற் ~~21500/=~~ 15500/=
கணினி மேசை ~~3275/=~~ 2900/=
மெத்தை ~~2400/=~~ 1950/=
கணினி கதிரை ~~4050/=~~ 3300/=
6 கதிரைக்கு ரீப்போ FREE
மற்றும் TV ஸ்ராண்ட், மரமேசைகள், சோக்கேஸ், றெசின்ரேபிள், பிளாஸ்ரிக் மேசைகள், bookshelf மற்றும் வீட்டு அலுவலக தளபாடங்களைப் பெற்றுக்கொள்ள
இல-230, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
[இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில்]
T.P- 0773583879, 0778314201

சதாபொன்ஸ் - அல்வாய்
O/L மீட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம்
09.04.2013
காலை- 8.00 மணி
(C/8213)

தகவல் தொழினுட்பமாணி பட்டக்கற்கை
BIT கொழும்புப் பல்கலைக்கழகம் BIT
Semester 2, 4, & 6 ஆரம்பம்
Saturday 06.04.2013 Seme 2 = 7 - 9 am
Seme 4 = 9 - 11.30 am Seme 6 = 2 - 4 pm
11 வருடங்களாக BIT கற்கையில்....
Mr. R.Kumaran - B.Sc. Call : 0776577359
74, சபாபதி வீதி, யாழ்ப்பாணம்-இராமநாதன் வீதியிலிருந்து 150 m

சேவிஸ் ஸ்ரேசன் மெசினரிஸ்
4, 8, 12, 16 தொன் லிப்டுகள்(Hydraulic Hoist)
கொம் பிரசர் (Air Compressor)
பிரசர் பம்ப் (Washing/ High pressure pumps)
கிரிஸ் பம்ப் (Grease pumps/ Heavy duty)
வெக்கும் கிளீனர்ஸ் (Vacuum Cleaners)
ஓட்டோ லிப்ட், பைக் லிப்ட் (Hydraulic)
லீசிங் வசதி செய்து தரப்படும்
சகல திருத்துதல் வேலைகளும் செய்து தரப்படும்.
CARTEC TRADING (PVT) LTD
94, 4ஆம் குறுக்குத்தெரு (அடைக்கலமாதா ஆலய வீதி), யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077687 2656, 0777263181
வெகு விரைவில் மட்டக்களப்பில் எமது கிளை ஆரம்பம்.
(35628)(10,6,7)

கணினி மலிவு விற்பனை
D/core 3.2 GHZ,
19"LED MONITOR,
250GB HDD,
2GB RAM, DVD WR, SPEAKER FREE-
4GB PENDRIVE/WEB CAMARA
39,500/=
SKY COMPUTER
162, MAIN STREET, JAFFNA.
0750698608, 0212224865
(15ஆவது வருட சேவையில்)
(c/7310)

IELTS A1 B1 B2 KU Education
Quick Preparation Available Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.
K.U Education,No 75,Temple Road,Jaffna. IELTS Centre

A/L CHEMISTRY HALL
2015-ஒரு வருடத்தினுள் பாடத்திட்டம் நிறைவாக்கப்பட்டு 20 வருட வினாக்களை செய்ய விரும்பும் திறமையான மாணவர்கள் மட்டும் பதியவும். 2014-Physical & Industrial
ஆசிரியர்: S.Sureshkumar Bsc(Hons)
G.P.S Road, Kalviankadu.
K.K.S Road, Kokuvil.

சர்வதேச புலவர் திருமணசேவை
(10.05.1962 இல் இருந்து திருமண சேவையில்)
நீங்கள் விரும்புகின்றபடி உள்நாட்டு, வெளிநாட்டுத் திருமணங்களைச் செய்துகொள்வதற்குத் தொடர்பு கொள்ளவும்.
மதுரகானம் (வடக்கின் தலைமையகம்)
238, அரசடி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். 0212227147, 0758427395
106, கச்சாய் வீதி, சாவகச்சேரி
0214900733, 0755287045
(35656)

NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்நகர்.
A/L 2015
கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்
ஆரம்பம்- 07.04.2013 ஞாயிறு காலை 8.00 மணி
(4/8221)

கலை வர்த்தகம்
A/L - 2015
புதிய பிரிவு ஆரம்பம்
07.04.2013
காலை 8. மணி
யாழ் நகரின் தனித்துவமான நிறுவனம்
DCM
D C M

விற்பனைக்கு
12-LANCER, 2 SRI MINOR
கார்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு- 0775346278

புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்நகர்
O/L DAY CLASS
பிரிவு-I ஆரம்பம்
10.04.2013 புதன்
காலை 8.00 மணி
புதிய அனுமதிகளை உடன் பதிவு செய்யவும்

புதிய பொருளியல் கல்லூரி
மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்
A/L 2015
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்- 07.04.2013 ஞாயிறு காலை 8.00 மணி

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்
A/L புவியியல் Day Class
ஆசிரியர்:
திரு.N.பாபுB.A(Spl)
ஆரம்பம்:
06.04.2013 சனி
2.00 P.M

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
கே.கே.எஸ். றோட், இணுவில்.
(இரு இடத்திலும்)
A/L - 2015
கலை, வர்த்தகப்பிரிவு
பிரிவு: II
ஆரம்பம்:
நாளை (07.04.2013) ஞாயிறு 8.00 A.M
உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

## மரண அறிவித்தல்

### திருமதி சாந்தநாயகி இராசையா



விதானை வீதி, சுண்டுக்குளியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தநாயகி இராசையா கடந்த (03.04.2013) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வே.தம்பு-பார்வதி தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான சி.சங்கரப்பிள்ளை- நாகமுத்து தம்பதியரின் அருமை மருமகளும் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் ச.இராசையாவின் அன்புத்துணைவியும், காலஞ்சென்றவர்களான நா.இராசமணி, நமசிவாயம், சுப்பிரமணியம்(பாலா), சற்குணநாதன் மற்றும் மூ.யோகராணி (பாப்பா) ஆகியோரின் அருமைச்சகோதரியும் வாசுகி, தேவகி (UK), இளங்குமரன் (ஆஸ்திரேலியா), இளங்கோவன், ஜானகி (UK) ஆகியோரின் பாசமிகு தாயும், சந்திரகாந்தன்(UK), ஜெயசந்திரிகா (ஆஸ்திரேலியா), கலிதரன் (UK) ஆகியோரின் அன்பு மாமியும், அனு (அன்னபூரணி), ரஜீன், கேஷன், ஆதவன், ஹரிணி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.04.2013) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்கிரியைகளுக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6, விதானை வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே:0778441197
0778328661

A/L 2015 கலை, வர்த்தகம் பிரிவு II
ஆரம்பம் ஞாயிறு - 7.30 A.M
ஆரம்ப அலகிலிருந்து கற்பிக்கப்படும்.
யூனிவேர்சல் கந்தர்மடம்

கணனி திருத்தம்
மிகவும் நீண்ட அனுபவம் உடைய Technician னால் தங்கள் வீடு, அலுவலகம் என்பவற்றிற்கு வந்து கணனிகள் திருத்தித் தரப்படும்
அழையுங்கள்: 0774784381

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
The Only Official French Language Centre in Jaffna
பிரஞ்சு மொழியை பிரஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
பிரெஞ்சு மொழியை கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேஒரு நிறுவனம் Alliance Française de Jaffnaமட்டுமே.இச்சர்வதேச நிறுவனத்தில் France மற்றும் Canada முதலியநாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்கவிரும்பும் யாவரும் கற்றுக்கொள்கிறார்கள்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
உங்கள் அனுமதிகளுக்கு முந்துங்கள். அழையுங்கள் 021.222.8098
61, Kachcheri-Nallur Road, Jaffna E-mail: alliancejaffna@yahoo.com
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டிடம்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.